கூடிய வெப்பநிலை 33 °c
குறைந்த வெப்பநிலை 27 °c
வெப்பமான காலநிலை


# உதயன்

பக்கம் : 24

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

UTHAYAN - A Lively National Tamil Daily

சுடர்: 29 கதிர்: 084 வள்ளுவர் ஆண்டு: 2045 மாசி 06, செவ்வாய் 18.02.2014


18 FEB 2014

## சாட்சியங்கள் தொடர்பான விசாரணை விரைவில்

கொழும்பு, பெப். 18
இராணுவத்தினருக்கு எதிராகவே யாழ்ப்பாணத்தில் அதிக முறைப்பாடுகளும், சாட்சியங்களும் கிடைத்துள்ளன என்று காணாமற்போனோர் தொடர்பாக விசாரணை செய்யும் ஜனாதிபதியின் ஆணைக் குழு நேற்றுத் தெரிவித்தது.
இது தொடர்பிலான விசாரணைகள் இன்று முதல் ஆரம்பிக்கப்படும் என்றும் ஆணைக் குழு சுட்டிக்காட்டியது.
யாழ்ப்பாணத்துக்கு பயணம் மேற் கொண்டு காணாமற்போனோர் குறித்து நேரடியாக சாட்சியங்களைத் திரட்டி வந்த காணாமற்போனோர் தொடர்பாக விசாரணை செய்யும் ஆணைக்குழுவானது நேற்றுடன் தனது விசாரணைகளை முடித்துக் கொண்டது.

21 ஆம் பக்கம் பார்க்க

# ஆணைக்குழு நடவடிக்கைகள் அவதானிப்பாளர்கள் அதிருப்தி

### சாட்சியங்களின் மொழிபெயர்ப்பு மிக மோசம் எனச் சாடல்

யாழ்ப்பாணம்,பெப்.18
ஆணைக்குழுவின் மொழிபெயர்ப்பு நடவடிக்கைகள் மிக மோசமாக இருக்கின்றது. அத்துடன் ஆணைக்குழுவின் விசாரணைக்கு அழைக்கப்படுவர்களுக்கு உரிய காலத்தில் கடிதங்கள் கிடைப்பதில்லை என்று அமர்வுகளின் அவதானிப்பாளர்களாகச் செயற்பட்டு வரும் மன்னார் பிரஜைகள் குழுவினர் தெரிவித்துள்ளனர்.
யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் இடம்பெற்ற காணா மற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் அமர்வுகளின் அவதானிப்பாளர்களாக இருந்த மன்னார் பிரஜைகள் குழுவினர் நேற்றைய அமர்வுகளின் முடிவில் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றை நடத்தினர்.
அங்கு அவர்கள் தெரிவித்தவை வருமாறு:-
காணாமற்போனோர் தொடர்பில் தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்று

21 ஆம் பக்கம் பார்க்க

## காணாமற்போன சம்பவங்களுடன் இராணுவத்தினரே நேரடித் தொடர்பு

### 101 பேர் யாழ்ப்பாணத்தில் இவ்வாறு சாட்சியம்

யாழ்ப்பாணம்,பெப்.18
எங்கள் உறவுகள் காணாமற்போன சம்பவங்களுடன் இராணுவத்தினரே நேரடியாகத் தொடர்புபட்டிருப்பதாக யாழ். மாவட்டத்தில் 101 பேர் ஜனாதிபதி ஆணைக்குழு முன்பாகச் சாட்சியமளித்துள்ளனர்.
மூன்று கட்டங்களாக இந்தக் காணாமற்போதல் சம்பவங்கள் நடந்தேறியதாக அவர்கள் தமது சாட்சியங்களில் குறிப்பிட்டுள்ளனர்.
அத்துடன் ஈ.பி.டி.பியினருக்கு எதிராக 8 பேரும், கருணா குழுவுக்கு எதிராக 3 பேரும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக 5 பேரும் சாட்சியமளித்தனர்.
காணாமற்போனோர் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக் குழுவின் அமர்வுகள் யாழ். மாவட்டத்தில் கடந்த நான்கு தினங்களாக இடம்பெற்றன.

21 ஆம் பக்கம் பார்க்க



மகனைக் கண்டுபிடிக்குமாறு கெஞ்சுகிறாா் இந்தத் தாய்

## இராணுவ அதிகாரி லலித் ஹேவாவே மகனைப் பிடித்தார்

### தந்தையொருவர் சாட்சியம்

யாழ்ப்பாணம்,பெப்.18
எனது மகனைக் கைது செய்ததை, கிருசாந்தி கொலைக் குற்றவாளியான ராஜபக்ஷவே ஒப்புக்கொண்டிருந்தார். மகனைப் பலாலிக்கு அனுப்பியதாகவும் அவர் தெரிவித்திருந்தார். அதன் பின்னர் எனது மகன் பற்றிய எந்தத் தகவலும் கிடைக்கவில்லையென்று ஆணைக்குழுவின் முன்பாக தந்தை ஒருவர் நேற்றுச் சாட்சியமளித்தார்.
காணாமற்போனோர் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக் குழுவின் அமர்வுகள் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றன. இதில் கலந்துகொண்டு சாட்சியமளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தனது சாட்சியத்தில் மேலும் தெரிவித்ததாவது:-
1996 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 9 ஆம் திகதி எனது மகன் செ.பார்த்தீபன் வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றார். அவரைப் புங்கன்குளம் சந்தியிலிருந்த இராணுவ முகாமில் வைத்து இராணுவத்தினர் பிடித்தனர். அதன் பின்னர் அவரைக் காணவில்லை.
எனது மகனைத் தேடி நான் அலைந்தபொழுது, சிறைச்சாலையில் செம்மணிப் புதைகுழி வழக்கில் - கிருசாந்தி கொலைக் குற்றவாளியான இராணுவச் சிப்பாய் சோமரட்ண ராஜபக்ஷ என்பவரைச் சந்தித்தேன். அவர், 512 பிரிகேட்டுக்குப் பொறுப்பாக இருந்த லலித் ஹேவா உள்ளிட்ட 12 இராணுவத்தினரின் பெயர் விவரங்களை எனக்குத் தந்தார். அத்துடன்

21 ஆம் பக்கம் பார்க்க

# 64



நேற்று மீட்கப்பட்ட எலும்புக்கூடு

மன்னார்,பெப் 18
மன்னார் மனிதப் புதைகுழியைத் தோண்டும் பணி நேற்றுத் திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. இதன்போது மேலும் இரண்டு மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.
இவற்றுடன் சேர்த்து இதுவரை புதைகுழியில் இருந்து 64 மனித எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.
மன்னார் திருக்கேதீஸ்வரம் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியைத் தோண்டும் பணி நேற்று 24 ஆவது தடவையாக முன்னெடுக்கப் பட்டது.
மன்னார் மாவட்ட நீதிமன்ற

21 ஆம் பக்கம் பார்க்க

## கடத்தலைக் கண்டோர் வெளிப்படுத்த அச்சம்

யாழ்ப்பாணம்,பெப்.18
கடத்தல்களைக் கண்ணால் கண்ட சாட்சிகள் அச்சம் காரணமாக ஆணைக்குழுவின் முன்பாகச் சாட்சியமளிக்க வரமாட்டார்கள் என்று காணாமற்போனோரின் உறவுகள் விசாரணைகளின் போது ஆணைக் குழுவினரிடம் குறிப்பிட்டனர்.
சாட்சி ஒருவர் ஆணைக்குழு முன்பாகச் சாட்சியமளித்த போது , எங்கள் பிள்ளைகளை இராணுவம்தான் கடத் தியது என்று அதனைக் கண்ட சிலர் எம்மிடம்சொன்னார்கள் என்று கூறினார். அதற்கு ஆணைக்

21 ஆம் பக்கம் பார்க்க

## நவிபிள்ளை சமர்ப்பிக்கும் அறிக்கை அநீதியானது

### போர்க்கொடி தூக்கியது இலங்கை அரசு

கொழும்பு, பெப். 18
"இலங்கைக்கு எதிராக சர்வதேச போர்க்குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என பரிந்துரை செய்து, ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் அதன் ஆணையாளர் நவநீதம்பிள்ளை சமர்ப்பிக்கவுள்ள அறிக்கை அநீதியானது."
இவ்வாறு இலங்கை அரசு நேற்று காட்டமான தொனியில் தெரிவித்தது.

21 ஆம் பக்கம் பார்க்க

## ஆணைக்குழு தலைவருக்கு நேற்று சுகவீனம்

யாழ்ப்பாணம்,பெப்.18
காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் தலைவர் மக்ஸ்வெல்

21 ஆம் பக்கம் பார்க்க

## விழுந்தது விண்கல் எரிந்தது சமையலறை

*கொழும்பு, பெப். 18*
*நுவரெலியா, ராகலை தோட்டத்தில் லயன்குடியிருப்பு ஒன்றின் வீட்டுச் சமையலறைப் பகுதியில் விண்கல் விழுந்துள்ளது. இதனால், வீட்டின் சமையலறைப் பகுதியில் ஏற்பட்ட தீயினால் சில பொருள்கள் எரிந்துள்ளன.*

21 ஆம் பக்கம் பார்க்க

## கூரைகள் பிடுங்கப்பட்டே வீடுகள் மீள ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,பெப் 18
பொதுமக்களின் வீடுகள் பலவற்றைப் பயன்படுத்திய இராணுவத்தினர் அவற்றை மீண்டும் பொதுமக்களிடம் ஒப்படைக்கும்போது வீடுகளின் கூரைகள் பிடுங்கப்பட்டிருந்தன என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.
சாவகச்சேரியில் மூன்று இடங்களில் தாம் பயன்படுத்திய வீடுகளையே இராணுவத்தினர்

21 ஆம் பக்கம் பார்க்க

# வெளிமாவட்டங்களில் காணாமற்போனோரின் உறவுகள் சாட்சியமளிக்க அனுமதி வேண்டும்

## ஆணைக்குழுவில் குறைபாடு என்கிறார் சம்பந்தன்

கொழும்பு, பெப். 18

காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அமர்வுகள் வடக்கில் நடைபெறுவதை வரவேற்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் இந்த ஆணைக்குழுவில் குறைபாடு உள்ளது என்றும் விசனம் தெரிவித்தார்.

"வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழர்கள் பலர் இம்மாகா ணங்களுக்கு வெளியிலும் கைதுசெய் யப்பட்டு - கடத்தப்பட்டு காணாமற்போயுள்ளார்கள். குறிப்பாக கொழும்பில் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த அதிகமான தமிழ் இளைஞர்கள் காணாமல்போயுள்ளனர். எனினும், யாழ்ப்பாணத்தில் கடந்த நான்கு நாள்களாக இடம்பெற்ற ஆணைக்குழுவின் விசாரணை அமர்வுகளில் வடக்கு, கிழக்குக்கு வெளியே காணாமற்போனோர் தொடர்பில் அவர்களின் உறவுகள் சாட்சியமளிக்க அனுமதிக்கப்பட வில்லை. இது காணாமற்போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் குறைபாடாகும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கு, கிழக்குக்கு வெளியில் காணாமற்போனோரின் உறவுகளை சாட்சிய மளிக்க சந்தர்ப்பம் அளித்தால் மேலும் பல உண்மைகளை அவர்கள் வெளியிடுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

காணாமற்போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் முதலாவது பகிரங்க அமர்வுகள் கடந்த மாதம் 18.19.20.21 ஆம் திகதிகளில் கிளிநொச்சியில் நடைபெற்றன. இதனையடுத்து இரண்டாவது பகிரங்க அமர்வுகள் கடந்த 14.15.16.17 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுள்ளன. இந்த அமர்வுகளில் சாட்சியமளித்த பெரும்பாலானோர், இராணுவத்தினர், புலனாய்வுப் பிரிவினர், ஈ.பி.டி.பியினர், கருணா குழுவினர் ஆகியோரே தங்கள் கண் முன்னால் தமது உறவுகளைப் பிடித்துச் சென்றுள்ளனர் என்றும், இதன் பின்னரே தமது உறவுகள் காணாமற் போயுள்ளார்கள் என்றும் கூறியுள்ளனர்.

இந்நிலையில், காணாமற்போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வுகள் தொடர்பிலும், இந்த அமர்வுகளில் சாட்சியமளித்து வரும் மக்களின் கருத்துகள் தொடர்பிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனிடம் 'உதயன்' நேற்று வினவியது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில், வன்னியில் இடம்பெற்ற இறுதிப் போரிலும் அதற்கு முன்னரும் காணாமற்போனோரின் உறவுகள் எதற்கும் அஞ்சாது சாட்சியமளித்து வருகின்றார்கள். இந்த அமர்வுகளின் ஊடாக தமது உறவுகள் எவ்வாறு காணாமற்போனார்கள் என்பதை அவர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் தெட்டத் தெளிவாகக் கூறி வருகின்றார்கள்.



சம்பந்தன்

அரச படைகளினால்தான் பெரும்பாலானோர் பிடிக்கப்பட்டு காணாமல்போயுள்ளனர் என்ற உண்மையை அவர்களின் உறவுகள் சாட்சியமளிக்கும் போது தெரிவித்து வருகின்றனர். எனவே, வடக்கு, கிழக்குக்கு வெளியிலும் காணாமற்போன தமிழர்கள் தொடர்பில் அவர்களின் உறவுகள் சாட்சியமளிக்க சந்தர்ப்பம் கொடுத்தால் மேலும் பல உண்மைகள் வெளிவரும்.

நடந்த உண்மைகளை சாட்சியமளிக்கும்போது மக்கள் கூறினாலும், காணாமற்போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் விசாரணை அறிக்கை எவ்வாறு அமையப்போகின்றது என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும் - என்றார். (த-சி)

# யாழ்ப்பாணத்தில் 1, 338 முறைப்பாடுகள் 235 பேருக்கே சாட்சியமளிக்க அழைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.18

யாழ். மாவட்டத்திலிருந்து ஆயிரத்து 338 முறைப்பாடுகள் ஆணைக்குழுவுக்கு சமர்பிக்கப்பட்டுள்ள போதும் 235 பேரே சாட்சியமளிக்க அழைக்கப்பட்டுள்ளனர். அத்துடன் எஞ்சியோருக்கான அமர்வுகள் எப்போது நடத்தப்படும் என்பது தொடர்பில் ஆணைக்குழுவினர் எதுவுமே தெரிவிக்கவில்லை.

அத்துடன் 793 பேர் கடந்த நான்கு நாள்களிலும் புதிதாகப் பதிவுகளையும் மேற்கொண்டுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் 1990 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு காலப் பகுதியில் காணாமற்போனவர்கள் தொடர்பில், ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு ஆயிரத்து 338 முறைப்பாடுகள் அனுப்பப்பட்டிருந்தன.

ஆனாலும் கடந்த நான்கு தினாங்களாக இடம்பெற்ற அமர்வில் 235 பேரே சாட்சியமளிக்க அழைக்கப்பட்டதுடன் அழைக்கப்பட்டவர்களில் 166 பேரே சாட்சியமளித்துள்ளனர். அத்துடன் புதிதாக 9 பேரும் சாட்சியமளித்துள்ளனர்.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 67 பேர் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டிருந்ததுடன் 49 பேர் சாட்சியமளித்திருந்தனர். புதிதாக 93 பேர் பதிவுகள் மேற்கொண்டிருந்தனர். சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் 59 பேர் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டிருந்ததுடன் 44 பேர் சாட்சியமளித்திருந்தனர். புதிதாக 170 பேர் பதிவுகள் மேற்கொண்டிருந்தனர்.

இறுதி இரு தினங்களும் யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற அமர்வில் 109 பேர் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டிருந்தனர். ஆனால் 82 பேரே சாட்சியமளித்தனர். அத்துடன் புதிதாக 530 பேர் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர். (த-5)

# ஜெனிவாப் பயத்தில் அரசு சர்வதேசம் மீது வீண்பழி

## தப்பிக்கவே முடியாது என்கிறார் பாகு

ஜெனிவாவில் இலங்கை அரசு இம்முறை கடுமையான அழுத்தங்களைச் சந்தித்தே தீரும். நாட்டில் நடந்தேறிய அநியாயங்களுக்கு பதில் சொல்லியே ஆக வேண்டும். இல்லையேல் சர்வதேசப் பிடியிலிருந்து ஒருபோதும் தப்பிக்க முடியாது என்று நவசமசமாஜக் கட்சியின் பொதுச்செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு தெரிவித்தார்.

இதற்குப் பயந்தே சர்வதேசம் தம் மீது வீண்பழி சுமத்துகிறது என்றும் சர்வதேசம் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அரசு மறுத்து வருகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

ஜெனிவாவில் அரசுக்கு எதிராக வரவுள்ள அழுத்தங்கள் குறித்து கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது.

ஜெனிவாவில் அரசுக்குப் பெரும் அழுத்தங்கள் வரவுள்ளது என்பது எவ்வித மாற்றுக்கருத்துக்கும் இடமில்லாத வகையில் தற்போது உறுதியாக தெரிந்துள்ளது. இதற்கு பயந்த அரசு, '30 வருடகால போரை முடித்த தம் மீது சர்வதேசம் வீண்பழி சுமத்துகிறது. சர்வதேசம் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொள்ளவே முடியாது என மறுத்து வருகிறது.

ஆனால், எம்மை பொறுத்தவரை இந்த அரசின் செயற்பாட்டைத்தான் ஏற்றுக்கொள்ள முடியாது. 30 வருட கால போரை முடித்த அரசு நாட்டிலுள்ள தமிழ், முஸ்லிம் மக்களின் சுதந்திரத்தை அடியோடு அழிந்துள்ளது. நாட்டில் ஏனையவர்களுக்குக் கிடைக்கும் சமஉரிமை, அந்தஸ்தை தமிழ், முஸ்லிம்களிடமிருந்து அரசு பறித்தெடுத்துள்ளது. இதுவே உண்மை. அரசானது இன்னமும் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத் தாது தமிழர்களையும் சர்வ தேசத்தையும் ஏமாற்றிக் கொண்டே வருகிறது.

இப்படியான செயற்பாடுகளை செய்துகொண்டு சர்வதேசத்தின் குற்றச்சாட்டுகளை அரசால் எப்படி மறுக்க முடியும்? சர்வதேசம் முன்வைக்கும் குற்றச்சாட்டு களையெல்லாம் ஏற்றுக்கொண்டு நிச்சயமாக சர்வதேசத்திற்கு பதில் கூறியே ஆக வேண்டும். இல்லையேல் சர்வதேசத்தின் பிடியிலிருந்து ஒருபோதும் தப்பிக்க முடியாது" என்றார். (சி)

# ரூ.4 லட்சம் பணம், தங்க நகைகள் கூரையை பிரித்து பகலில் திருட்டு

யாழ்ப்பாணம், பெப் 18

வீட்டுக்கூரைக்குப் போடப்பட்ட சீற்றுகளை உடைத்து பின்னர் உட்புறச் 'சீலிங்'கையும் பிரித்து உட்புகுந்த திருடர்கள் நான்கு லட்சம் ரூபா பணம் மற்றும் நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சண்டிலிப்பாய் வீதி, பண்டத்தரிப்பில் நேற்றுமுன்தினம் பட்டப்பகலில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வீட்டிலிருந்தவர்கள் திருவிழாவுக்குச் சென்றிருந்த சமயம் பார்த்து இந்தத் திருட்டு இடம்பெற்றது.

வீட்டுக்காரர் மாதகலில் உள்ள தேவாலயத்துக்கு நேற்று முன்தினம் காலை 8 மணிக்குச் சென்றுள்ளனர். மாலை 4 மணிக்கு வீடு திரும்பிய போதே அங்கு திருட்டு இடம்பெற்றிருந்தமை தெரியவந்தது. அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்துச் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

நான்கு லட்சம் ரூபா பணம், இரண்டு பவுண் நிறையுடைய சங்கிலி, ஒரு பவுண் நிறையுடைய தோடுகள், முக்கால் பவுண் நிறையுடைய மோதிரம் என்பனவே திருடப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படுவதாகவும் சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-4)

# சுவர் இடிந்து விழுந்ததில் சிறுவன் காயம்

கொழும்பு,பெப்.18

பொகவந்தலாவ லட்சுமி தோட்டத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வீடு ஒன்றின் சுவர் இடிந்து விழுந்ததில் நித்திரையில் இருந்த 13 வயது சிறுவன் காயங்களுடன் பொகவந்தலாவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று பொகவந்தலாவைப் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# இன்று சமர்ப்பிக்கவிருந்த 5 பிரேரணைகளை நேற்று அதிரடியாக நீக்கினார் முதலமைச்சர்

யாழ்ப்பாணம்.பெப்.18

வடக்கு மாகாண சபையின் இன்றைய அமர்வில் விவாதிப்பதற்காக முன்வைக்கப்பட்ட 5 பிரேரணைகள் முதலமைச்சரால் நேற்று அதிரடியாக நீக்கப்பட்டுள்ளதுடன் மூன்று பிரேரணைகள் முன்தணிக்கை செய்யப்பட்டுள்ளன. மேலும் இரு பிரேரணைகள் சமர்ப்பித்த உறுப்பினர்களாலேயே மீளப் பெறப்பட்டுள்ளன.

இன்றைய அமர்வுக்கு முன்னதாக மாகாண சபை உறுப்பினர்களுடன் நேற்று நடத்திய கூட்டத்தில் இந்தப் பிரேரணைகள் நீக்கம், தணிக்கைகள் என்பன மேற்கொள்ளப்பட்டன.

வடக்கு மாகாண சபையின் ஆறாவது அமர்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்த அமர்வில் ஆளுங்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 8 உறுப்பினர்களால் பிரேரணைகள் சமர்ப்பிக் கப்படவுள்ளன.

ஆரம்பத்தில் 9 உறுப்பினர்களால் 20 பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தலைமையில் நேற்று முதலமைச்சர் அலுவலகத்தில் ஆளுங் கட்சி உறுப்பினர்களுக்கான கூட்டம் நடைபெற்றது. இதில் ஒரு உறுப்பினரின் இரு பிரேரணைகள் நீக்கப்பட்டதுடன், ஏனைய உறுப்பினர்களின் 5 பிரேரணைகளும் நீக்கப்பட்டன. அத்துடன் இரு பிரேரணைகள் சமர்ப்பித்த உறுப்பினர்களாலேயே மீளப்பெறப்பட்டன.

### முன்தணிக்கை

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் இடம்பெறும் மனித உரிமைகள் கூட்டத் தொடரில் தமிழர்களின் பூர்வீக நிலங்கள் அபகரிப்பு மற்றும் இனப்பரம்பலை மாற்றியமைக்கும் நோக்குடனான சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பில் புள்ளி விவரங்களுடன் அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும் என்ற பிரேரணை முல்லைத்தீவு மாவட்ட மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனால் முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்தப் பிரேரணை இன்று இடம்பெறும் அமர்வில் எடுத்துக் கொள்ளும் பிரேரணைகளுக்கான பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இருப்பினும் நேற்றைய தினம் இடம்பெற்ற கூட்டத்தில் குறித்த பிரேரணையில் உள்ள சில வாசகங்கள் திருத்தியமைக்கப்பட்டு இன்று அவசர பிரேரணையாகக் கொண்டு வரப்படவுள்ளது.

இதனைவிட, மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் முதலமைச்சர், அமைச்சர்கள் ஆகியோரின் முகாமைத்துவ உதவியாளர்களின் கல்வித் தரம் தொடர்பில் பிரதம செயலாளரினால் கோரப்பட்டுள்ள கல்வித் தகைமையைக் குறைப்பது தொடர்பிலான பிரேரணை அவைத் தலைவரினால் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதனைத் தவிர உறுப்பினர்களான அ.பசுபதிப்பிள்ளையினால் 3 பிரேரணைகளும், து.ரவிகரனினால் மேலும் ஒரு பிரேரணையும், ப.அரியரத்தினத்தினால் 2 பிரேரணைகளும், பிரதி அவைத் தலைவரினால் 2 பிரேரணைகளும், சி.சிவமோகனினால் ஒரு பிரேரணையும், திருமதி அனந்தி சசிதரனினால் ஒரு பிரேரணையும், திருமதி மேரி கமலா குணசீலனினால் இரண்டு பிரேரணைகளும் அவையில் இன்று சமர்ப்பிக்கப்படவுள்ளன.

இவற்றுக்கு மேலாக அவசர பிரேரணைகளும் சமர்ப்பிக்கப்படவுள்ளன. (த-5)

# எங்களின் கதறல் ஓலங்கள் உங்களுக்கு கேட்கின்றனவா..... ?




ஐயோ இனி யாரிட்ட போய் சொல்லுவன்




கண்ணுக்கு முன்னால 'கொற கொற' எண்டு இழுத்துக்கொண்டு போனவங்கள்



அவர் இல்லாததில இருந்து நடைப் பிணமாக அலையிறன்



எல்லாரிட்டையும் முறையிட்டாச்சு



சைக்கிள் கடை வைச்சு எங்களைப் பார்த்தவன் என்ரை ஒரேயொரு மகன்




இண்டைக்கு வரைக்கும் என்ர கணவனைத்தான் நம்பியிருக்கிறன்



அவர் கண்டிப்பா உயிரோடைதான் இருக்கிறார்



என்னாலயே மகனைக் காப்பாத்த முடியாமல் போட்டுது



'அப்பா கடைக்குப் போட்டு வாறன்' எண்டவன் இன்னும் வரேல்லை

## பரிந்துரைகளையே வழங்க முடியும்

### இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண ஆளுநர்

யாழ்ப்பாணம், பெப்.18

வடமாகாணத்தில் நிலவும் இலங்கை கணக்காளர் சேவைக்கு விசேட பரீட்சைகளை நடத்தி வெற்றிடமாகக் காணப்படும் 63 கணக்காளர் பதவிகளை நிரப்ப என்னால் பரிந்துரைகளை மட்டும் வழங்க முடியும் என்று வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

வட மாகாண அரச சேவைகள் பட்டதாரி அலுவலர் சங்கப் பிரதிநிதிகளுடான சந்திப்பு கடந்த புதன்கிழமை இடம்பெற்ற வேளையில் இவ்வாறு தெரிவித் ததாக சங்கச் செயலாளர் கே. எஸ்.மயூரன் தெரிவித் தார்.

'மாகாண சபைக்கான விசேட அனுமதி ஏற்பாடுகளுக்கு அமைய நான்கு வருட கற்கை நெறியைக் கொண்ட கணக்கியல் உயர் டிப்ளோமாகாரர்களை. அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவைக்கு உள்ளீர்ப்பதற்கும் உடனடியாக அபிவிருத்தி அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் பரீட்சைகளை நடத்துவதுடன் அதன் பெறுபேறு களுக்கு அமைவாக இவ் விரண்டு வினைத்திறன் காண் பரீட்சையில் சித்தியடைந்ததுடன் 6 வருட சேவையையும் பூர்த்தி செய்த அலுவலர்களுக்கு உரிய பதவி உயர்வுகள் வழங்கவும் ஆணை பிறப்பித்தார்' என்று சங்கச் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

(வ-9)

## 30 வருடங்களுக்குப் பின் குருசடித்தீவு ஆலயம் திறப்பு

குருநகர்,பெப்.18

நாவாந்துறைக்கும் அல்லைப் பிட்டிக்கும் இடையில் கடலில் அமைந்துள்ள குருசடித்தீவு புனித அந்தோனியார் ஆலயம் 30 வருடங்களுக்குப் பின் எதிர்வரும் 22ஆம் திகதி யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் திறந்து வைக்கப்பட உள்ளது. அன்று காலை 7 மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ள ஆலயத்தில் தொடர்ந்து திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

குறித்த ஆலயத்துக்கு அன்றைய தினம் செல்லவுள்ள பக்தர்களுக்காக பண்ணைப் பாலத்திலிருந்து கடல்வழிப் பிரயாண வசதிகளுக்கு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நாவாந்துறைப் பங்குத் தந்தை வண.பிதா. பா. இராஜசிங்கம் அடிகளார் அறிவித்துள்ளார்.

(வ-51)

# இலங்கைக்கு இராணுவ உதவி வழங்காது பா.ஜ.க.

*மோடி உறுதியளித்ததாக வைகோ தெரிவிப்பு*


வைகோ

சென்னை, பெப்.18
பாரதிய ஜனதாக் கட்சி இலங்கைக்கு இராணுவ உதவிகளை வழங்காது என்று தமிழகத்தின் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத்தின் பொதுச் செயலாளர் வை.கோபாலசுவாமி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:- "பாரதிய ஜனதா கட்சி ஆட்சியை நிறுவினால் இலங்கைக்கு இராணுவ உதவிகள் வழங்கப்படமாட்டாது. பாரதிய ஜனதா கட்சியின் பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி இதனை உறுதி செய்துள்ளார். அண்மையில் மோடியை சந்தித்த போது அவர் இந்த உறுதி மொழியை வழங்கினார். இந்திய மீனவர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை காங்கிரஸ் அரசாங்கம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றது" என்றார். (வ)


மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வேட்டையன் முறிப்பு கிராமத்துக்கான பிரதான வீதி சேதமடைந்து காணப்படுகிறது. இதனால் குறித்த கிராம மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். (வ)

# மீனவர் பிரச்சினைகளுக்கு தீர்வு காண விசேட கூட்டம்

*வாசன் தெரிவிப்பு*


வாசன்

சென்னை, பெப்.18
மீனவர் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் விசேட கூட்டம் ஒன்று நடத்தப்பட உள்ளதாக இந்திய மத்திய அமைச்சர் ஜீ.கே. வாசன் தெரிவித்துள்ளார்.

தமிழக மீனவர்களின் நலன்களை உறுதி செய்ய இந்திய மத்திய அரசு சகல வழிகளிலும் நடவடிக்கை எடுக்கும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரச்சினைகளுக்கு சுமுகமான முறையில் தீர்வு காணும் நோக்கில் விசேட கூட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்திய மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்துவதாகவும், கைது செய்வதாகவும் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கச்சதீவை மீளப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அதற்காக காங்கிரஸ் கட்சி போராடும் என்றும் வாசன் மேலும் குறிப்பிட்டார். (வ)

# மொழி புரியாததால் அவலம்

ஒட்டுசுட்டான் கால்நடை மருத்துவர் பெரும்பான்மை இனத்தவராக உள்ளதால் இந்தப்பகுதி மக்கள் அவருடன் தொடர்பு கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். அவருக்குத் தமிழ் தெரியாததால் கால்நடை தொடர்பான நோய்களையும் அதற்கான சிகிச்சை முறைகளையும் கேட்டறியவும் எடுத்துக் கூறவும் சிங்களமொழி தெரிந்த இன்னொருவரின் உதவியை மக்கள் நாடவேண்டியுள்ளது. எனவே தமிழ்தெரிந்த ஒரு மருத்துவரை நியமித்து உதவ வேண்டும் என இங்குள்ள கால்நடையாளர்கள் தெரிவித்துள்ளனர். (க-500)

# ஜெயலலிதா பிரதமரானால் மஹிந்தவுக்கு தண்டனை

*அ.தி.மு.க. கொள்கை பரப்பு துணைச் செயலாளர் நாஞ்சில் தெரிவிப்பு*


நாஞ்சில் சம்பத்

சென்னை, பெப்.18
தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா இந்தியாவின் பிரதமரானால்தான் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு தண்டனை கிடைக்கும் என்று அ.தி.மு.க. கொள்கை பரப்பு துணைச் செயலாளர் நாஞ்சில் சம்பத் தெரிவித்தார்.

அ.தி.மு.க. பொதுக்கூட்டம் சனிக்கிழமை உளுந்தூர் பேட்டையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இதன்போது அவர்மேலும்தெரிவித்ததாவது:- "இந்த நாட்டை ஆண்டுகொண்டிருக்கும் காங்கிரஸ் ஆட்சியில் தான் பாகிஸ்தான் தீவிரவாதிகள் நாடாளுமன்றத்திலும் மும்பையிலும் தாக்குதல் நடத்தினர். அவர்களுடன் தான் தி.மு.க. கூட்டணி அமைத்திருந்தது. இந்த நாட்டைப் பாதுகாக்க முடியாதவர்களை இனியும் நாம் அனுமதிக்கக் கூடாது. இலங்கையில் ஒரு லட்சத்து 70 ஆயிரம் தமிழர்கள் சாவுக்குக் காரணமான இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை போர்க்குற்றவாளியாக அறிவித்து தண்டனை வழங்க வேண்டும். முதலமைச்சர் ஜெயலலிதா இந்தியாவின் பிரதமரானால்தான் ராஜபக்ஷவுக்குத் தண்டனை கிடைக்கும்"- என்றார். (வ)

# பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சுயதொழில் உதவி

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சமூக சேவை அமைச்சினால் சுய தொழில் முயற்சிக்கான நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. ஒட்டு சுட்டான் பிரதேச செயலர் இ.குருபரன் தலைமையில் கடந்த 14 ஆம் திகதி பிரதேச செயலக பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் ஒட்டு சுட்டான் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மாங்குளம், முறிகண்டி, ஒட்டுசுட்டான், கற்சிலைமடு, முத்துஐயன்கட்டு ஆகிய கிராமத்தில் உள்ள உதவியற்ற 20 குடும்பங்களுக்கு சமூக சேவை அமைச்சின் செயலாளர் இமெல்டா சுகுமார் தலா 15,000 ரூபா பெறுமதியான நிதியுதவிகளை வழங்கினார். ஒட்டுசுட்டானில் முதல் தடவையாக 20 பயனாளிகளுக்கு சமூக சேவை அமைச்சினால் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. (க-435)


## மரண அறிவித்தல்

### திருமதி பராசக்தி இராசரத்தினம்



சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகவும், மயிலிட்டி 8 ஆம் வட்டாரத்தைப் புகுந்த இடமாகவும் கொண்டு தற்போது வவுனாவத்தை துர்க்காபுரம் தெல்லிப்பழையில் வசித்து வந்தவருமான திருமதி பராசக்தி இராசரத்தினம் நேற்று (17.02.2014) திங்கட்கிழமை இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா உருக்குமணிதேவி தம்பதியரின் இளையமகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லம்மா தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற இராசரத்தினத்தின் அன்புமனைவியும் செந்தூரனின் (சிறுவர் பாதுகாப்பு அலுவலர் மாவட்டச் செயலகம், கிளிநொச்சி) பாசமிகு தாயும் கௌரியின் (ஆசிரியை யாழ். இந்துக்கல்லூரி) அன்புமாமியும் துளசிகனின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.02.2014) செவ்வாய்க்கிழமை பி.ப. 4.00 மணிக்கு வவுனாவத்தை துர்க்காபுரம் தெல்லிப்பழையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தெல்லிப்பழை கட்டுப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

வவுனாவத்தை துர்க்காபுரம், தெல்லிப்பழை.
T.P ; 077 6108428

தகவல் :
இ. செந்தூரன் (மகன்)

**உதயன்**
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்

### பொன்னன் இரத்தினசிங்கம்



கோண்டாவில் வடக்கு தில்லையம்பதியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னன் இரத்தினசிங்கம் நேற்று (17.02.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னன் - தங்கம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - செல்லம்மா தம்பதியரின் மருமகனும் சந்திராவின் அன்புக் கணவரும் அனுசியா, கதீஸ்வரன் (நல்லூர் பிரதேச சபை ஊழியர்), சசிகலா, பாஸ்கரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஸ்ரீதரன், நிலாஜினி ஆகியோரின் அன்புமாமனாரும் நிரோயன், யதுர்சன், நமிதா, கிரிசாயினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.02.2014) செவ்வாய்க் கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தில்லையம்பதி,
கோண்டாவில், வடக்கு.

தகவல் :
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### வேலுப்பிள்ளை நாகராஜா

மீசாலை வடக்கைப் பிறப்பிட மாகவும், அல்லாரை வெள்ளாம் போக்கட்டியை வதிவிட மாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நாகராஜா (15.02.2014) சனிக்கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.02.2014) புதன்கிழமை மு.ப.10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கச்சாய் எறியால்பிட்டி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்

நிரந்தரமுகவரி:
அல்லாரை, வெள்ளாம்போக்கட்டி

## மரண அறிவித்தல்



### சிந்துஜா ஜெயருபன்

வவுனியாவைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெய ரூபன் சிந்துஜா நேற்று (17.02.2014) திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் ஜெயரூபனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் சரஸ்வதிதேவி தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற தனபாலசிங்கம் மற்றும் கெங்காதேவி தம்பதியரின் அன்பு மருமகளும் ஜனோசனின் அன்புத்தாயும் ரேணுகா காலஞ்சென்ற சுகந்தன் மற்றும் கேசவன், உதய தீபன் ஆகியோரின் அன்புச்சகோதரியும் விஜய ரூபன், லோகதர்சிகா, தனரூபன் ஆகி யோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.02.2014) செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணியளவில் திருநெல்வேலி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நி.முகவரி: 4 ஆம் வட்டாரம், மண்கும்பான் கிழக்கு
த.முகவரி: 36 சிவன் அம்மன் வீதி, திருநெல்வேலி.

தகவல் :
ஜெயருபன் (கணவன்)

## 10 ஆயிரத்து 736 ஹெக்ரேயரில் 21 வகை நெல்லினங்கள் விதைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.18

யாழ். மாவட்டத்தில் கடந்த காலபோகத்தில் 21 வகையான நெல்லினங்கள் 10 ஆயிரத்து 736 ஹெக்ரேயரில் விதைக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட விவசாயத் திணைக் களத்தின் புள்ளி விவரத் தகவல் தெரிவித்துள்ளது.

இந்தத் தகவலின் அடிப்படையில் , இரண்டரை மாதம், 3 மாதம், மூன்றரை மாதம் , நான்கு தொடக்கம் நான்கரை மாதம், ஐந்து மாதங்களுக்கு மேற்பட்ட கால எல்லைகளைக் கொண்ட 21 வகையான நெல்லினங்கள் பயிரிடப்பட்டுள்ளன.

அவற்றில் இரண்டரை மாத கால எல்லையைக் கொண்ட சி.ஒ-10 இன நெல் 224 ஹெக்ரேயரிலும், 3 மாத கால எல்லையைக் கொண்ட எ.ரி-303 இன நெல் 13 ஹெக்ரேயரிலும், பி.பெருமாள் இன நெல் 300 ஹெக்ரேயரிலும், பி.ஜி-300 இன நெல் 8 ஹெக்ரேயரிலும், எ.ரி.307 இன நெல் 2 ஹெக்ரேயரிலும், ஆட்டக்காரி இன நெல் ஆயிரத்து 147 ஹெக்ரேயரிலும், முருங்கன் இன நெல் 765 ஹெக்ரேயரிலும் பயிரிடப்பட்டுள்ளன.

மூன்றரை மாத கால எல்லையைக் கொண்ட பி.ஜி-358 இன நெல் 5 ஹெக்ரேயரிலும், பி.ஜி-360 இன நெல் 4 ஹெக்ரேயரிலும், எ.ரி-362 இன நெல் 153 ஹெக்ரேயரிலும் பி.ஜி-366 இன நெல் 2 ஹெக்ரேயரிலும், பி.ஜி-352 இன நெல் 4 ஹெக்ரேயரிலும், பி.ஜி-350இன நெல் 20 ஹெக்ரேயரிலும், பி.டபூள்யூ- 351 இன நெல் 57 ஹெக்ரேயரிலும், எ .ரி-353 இன நெல் 218 ஹெக்ரேயரிலும் பயிரிடப் பட்டுள்ளன.

நான்கு தொடக்கம் நான்கரை மாதகால எல்லையைக் கொண்ட பி.ஜி-406 இன நெல் 6 ஆயிரத்து 87 ஹெக்ரேயரிலும், எச்.4 இன நெல் 112 ஹெக்ரேயரிலும், எ.ரி-402 இன நெல் 31 ஹெக்ரேயரிலும், சின்ன வெள்ளை இன நெல் 100 ஹெக்ரேயரிலும் பயிரிடப் பட்டுள்ளன. 5 மாதத்துக்கு மேற்பட்ட கால எல்லையைக் கொண்ட மொட் டைக்கறுப்பன் இன நெல் ஆயிரத்து 79 ஹெக்ரேயரி லும், பி.வெள்ளை இன நெல் 405 ஹெக்ரேயரிலும் பயிரிடப் பட்டுள்ளன.

கடந்த வருட டிசெம்பர் மாத காலப்பகுதியில் கால போகத்துக்கு இந்த 21 வகையான நெல்லினங்கள் 10 ஆயிரத்து 736 ஹெக்ரேயரில் பயிரிடப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (வ-14)



வீதியை ஆக்கிரமித்திருக்கும் கழிவு நீர் வாய்க்கால்...

## திறந்த நிலையில் கழிவுநீர் கால்வாய்

யாழ். கஸ்தூரியார் வீதியில் வின்சர் சந்தியில் உள்ள கழிவு நீர் கால்வாய் திறந்த நிலையில் வீதியை ஆக்கி ரமித்து போக்கு வரத்துக்கு இடையூறாகக் காணப் படுகிறது. குறித்த வீதி காப்பெற் வீதியாக மாற்றப்பட அதன் மருங்கு களில் உள்ள கழிவு நீர் கால்வாய்கள் பின்னகர்த்தப் பட்ட போதிலும் சந்திப் பகுதியின் திருப்பத்தில் உள்ள கால் வாய்ப் பகுதி வீதியை ஆக்கிரமித்த வண்ணம் திறந்த நிலையில் கழிவு நீர் தேங்கி உள்ளது.

சன நெருக்கமும், போக்கு வரத்தும் மிகுந்த பகுதியில் இவ்வாறு வீதிப்பகுதிக்கு உட் சென்றுள்ள கால்வாயால் விபத்துக்கள் உருவாகும் நிலை காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அந்தப் பகுதியில் உள்ள விற்பனை நிலையங்களுக்கு வருவோர் கால்வாயினுள் விழுந்து எழும்பும் சம்பவங்களும் இடம் பெற்று வருவதாக குறித்த பகுதி வர்த்தகர்கள் தெரிவிக் கின்றனர். (வ-135)



மீசாலை வாசியால் கையளிக்கப்படும் தொலைக்காட்சியை சாவகச்சேரி நகர சபைத் தலைவர் பெற்றுக் கொள்கிறார். அருகில் சபை உத்தியோகத்தர்கள் காணப்படுகின்றனர்

## சாவகச்சேரி வருமான பிரிவுக்கு தொலைக்காட்சி

தென்மராட்சி, பெப்.18

சாவகச்சேரி நகரசபையின் கணினி மயப்படுத்தப்பட்ட வருமானப் பிரிவுக்கு வரும் வரியிறுப்பாளர் நலன்கருதி மீசாலை வாசி ஒருவரால் தொலைக்காட்சி ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

நகரசபையின் வருமானப் பகுதிக்கு பெருமளவானோர் வருகை தருவதால் அவர்கள் தேவை முடிந்து வெளியேறும் வரை பொழுதுபோக்காகப் பார்ப்பதற்கு தொலைக்காட்சியை அன்பளிப்பாக வழங்குவதாக அதனை வழங்கிய மீசாலை மேற்கைச் சேர்ந்த சின்னத்தம்பி குணரத்தினம் என்பவர் தெரிவித்தார்.

சாவகச்சேரி நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை, செயலாளர் கா.சண்முக நாதன் ஆகியோரிடம் தொலைக் காட்சி நேற்று கையளிக்கப்பட்டது. (வ-9)

## வேலணை துறையூரில் வசதியுடன் மீன்சந்தை

யாழ்ப்பாணம்,பெப் .18

இரண்டு கோடியே 16 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப் பட்ட நவீன வசதிகளுடனான மீன்சந்தை வேலணை துறையூரில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

வேலணை பிரதேச சபை தவிசாளர் சி.சிவராசா தலைமையில் நடைபெற்ற புதிய கட்டட மீன்சந்தை திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தீவகம் பிரதேச ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சில்வேஸ்திரி அலன்ரின் மற்றும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கொன்ஸ்ரன்ரைன்ஸ் ஜக்சீல் இணைந்து திறந்து வைத்தனர்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் புறநெகும திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட புதிய சந்தை கட்டடத் தொகுதி திறப்பு நிகழ்வில் வடமாகாண ஆளுநரின் செயலாளர் இலட்சுமணன் இளங்கோவன், வேலணை பிரதேச செயலர் திருமதி ம.சதீஷன், உதவி உள்ளூராட்சி ஆணையாளர் கொ.ஜக்சீல், நீரியல் வளத் துறை உதவிப் பணிப்பாளர் ந.கணேசமூர்த்தி, தீவகம் தெற்கு கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் ச.ரங்கநாயகம் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் பேசுகையில்:-

தீவகம் அபிவிருத்தியில் பின்னோக்கியுள்ளதை மக்களும்- அரச நிர்வாகமும் அறிந்த விடயம். அவ்வாறிருந்த போதிலும் வடக்கின் வசந்தத்தின் கீழ் பல மில்லியன் ரூபா நிதி ஒதுக்கியதன் மூலம் வேலணை பிரதேச அபிவிருத்திக்கான திட்டங்கள் முன்னகர்த்தப்படுகின்றன.

அதேபோல புறநெகும திட்டத்தின் கீழான அபிவிருத்தி மற்றும் ஏனைய தேவைகளை அபிவிருத்தி மூலம் முன்னகர்த்தி வருகின்றோம்.

இவ்வாறான சூழலில் வேலணை பிரதேச மக்களின் ஒத்துழைப்பு-பங்களிப்பு என்பது மிக அரிதாகவே உள்ளது. எனினும் நாம் தீவக மக்களைக் கைவிட முடியாது. நாம் எமது பிரதேச அபிவிருத்திகளை முன்னெடுத்து வருகின்றோம்.

இதேபோல் வடக்கின் ஏனைய பிரதேச அபிவிருத்திகளையும் விரைவில் முன்னெடுப்போம் - என்றார். (வ-50)

## கரப்பந்தாட்ட பயிற்சியை ஆலய முன்றிலில் நடத்த வேண்டாம்



கோப்புபடம்

தென்மராட்சி, பெப்.18 .

சாவகச்சேரி கிராம்புவில் படையாண்டான் கந்தசாமி ஆலய முன்றிலில் நடத்தப் படும் கரப்பந்தாட்டப் பயிற்சியை வெள்ளிக்கிழமைகளில் நிறுத்துமாறு ஆலய நிர்வாகத்தினரை அடியார்கள் கேட்டுள்ளனர்.

ஆலயத்துக்கு முன்பாக உள்ள சனசமூக நிலையத்தினர் கரப்பந்தாட்ட மைதானமாக ஆலய முன்றலைப் பயன் படுத்தி வருகின்றனர். ஆலயத்தில் பிரதி வெள்ளிக்கிழமைகளில் பி.ப. 5 மணிக்கு நடைபெறும் பூசைக்கு பெருமளவு அடியார்கள் வருகின்றனர்.

எனவே குறித்த நேரத்தில் கரப்பந்தாட்டப் பயிற்சி இடம் பெறுவதால் வழிபாட்டுக்கு வரும் அடியார்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் இதனால் வெள்ளிக்கிழமை பயிற்சிகள் நடத்துவதை நிறுத்துமாறு கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் அடியார் ஒருவரால் தட்டில் கொண்டு வரப் பட்ட பிரசாதத்தின் மீது பந்து வீழ்ந்து நிலத்தில் கொட் டியதையும் சுட்டிக்காட்டியுள் ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ)

## திருத்தகத்தில் விடப்பட்ட லொறியில் திருட்டு பொருள்கள் மீட்பு; சந்தேகநபருக்கு மறியல்

யாழ்ப்பாணம்,பெப். 18

வாகனங்கள் திருத்தகத்தில் திருத்தத்துக்காக விட்டுச் செல்லப்பட்ட லொறியில் பொருள்கள் களவாடப்பட் டமை தொடர்பில் கைது செய்யப்பட் டவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த திருட்டுச் சம்பவம் தொடர்பில் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளதுடன் அவரிடமிருந்து திருடப்பட்ட பொருள்களையும் மீட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட குறித்த சந்தேகநபரை பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தி யதை அடுத்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது.

இந்தத் திருட்டுச் சம்பவம் நெல்லியடி, மாலி சந்திப்பகுதியில் இடம் பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

திருட்டுச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

பொருள்களை ஏற்றிக் கொண்டு சென்ற லொறி ஒன்று திடீரென பழுதடைந்தது. திருத்துவதற் காக அருகில் உள்ள குறித்த வாகனத் திருத்தகத்தில் லொறியை அதன் சாரதி விட்டுச் சென்றுள்ள. இரவாகி விட்டதால் திருத்தக உரிமையாளரும் கடையைப் பூட்டி விட்டு வீடு சென்றுள்ளார்.

இந்தத் திருட்டுச் சம்பவம்
நெல்லியடி, மாலி சந்திப்பகுதியில்
இடம் பெற்றது என்று
பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தநேரம் திருத்தகத்துக்குள் புகுந்த அல்வாயைச் சேர்ந்த ஒருவன் லொறியிலிருந்த பொருள்கள் மற்றும் சில பொருள்களைத் திருடியதுடன் லொறியின் பற்றரியையும் திருடி அருகிலுள்ள பற்றைக் குள் மறைத்துவிட்டுச் சென்றிருந்தான். மறுநாள்காலை திருத்தகத்துக்கு வந்த போது அங்கு பொருள்கள் களவாடப் பட்டிருந்தமை தெரியவந்தது.

சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்து திருடப்பட்ட பொருள்களையும் மீட்டதாகத் தெரிவித்தனர். (வ-4)

# ஜெயலலிதாவின் கனவு ஒருபோதும் பலிக்காது

## நடிகை குஷ்பு கூறுகின்றார்

திருச்சி, பெப்.18
தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் பிரதமர் கனவு ஒரு போதும் பலிக்காது என்று தெரிவித்துள்ளார் தி.மு.கவைச் சேர்ந்த நடிகை குஷ்பு.

திருச்சியில் நடைபெற்ற தி.மு.கவின் 10 ஆவது மாநில மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

"திருச்சி மாநாட்டை திருப்புமுனை மாநாடு என்று கூறுகின்றனர். நான் இந்த மாநாட்டை அ.தி.மு.கவின் சர்வாதிகார ஆட்சியை மாற்றும் செய்யும் திருப்புமுனை மாநாடு என்றுதான் சொல்வேன்.

தேர்தல் நெருங்கியதும் அ.தி.மு.க. அரசு தற்போது நாடகம் ஆடுகிறது. உண்மையில் ஜெயலலிதாவுக்கு தமிழகப் பிரச்சினைகளில் அக்கறை இல்லை. அதற்கிடையே அவர் பிரதமராக வேண்டும் என்றும் கனவு காண்கிறார். அது பகல் கனவு. பலிக்காது. தமிழகப் பிரச்சினைகளையே தீர்க்க முடியாதவர், தேசிய பிரச்சினைகளைத் தீர்க்கப் போகிறேன் என்று கூறுகிறார். இதை யார் நம்புவார்கள்?. எதிர் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் 40 தொகுதிகளிலும் அ.தி.மு.க. தோற்கும்.

தி.மு.க. மீது சில குற்றச்சாட்டுகள் சொல்லப்படுகின்றன. அந்தக் குற்றச்சாட்டுகள் அனைத்தும் பொய் என்பதைத் தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தும். ஆறாவது முறையாகவும் கலைஞர் கருணாநிதி முதலமைச்சர் பதவியில் அமர்வார்." என்று தெரிவித்துள்ளார். (ற)


குஷ்பு

# "ஆம் ஆத்மி கட்சி நக்சலைட் இயக்கம்"


சுப்ரமணிய சுவாமி

ஜெய்ப்பூர், பெப்.18
ஆம் ஆத்மி கட்சி ஒரு நக்சலைட் இயக்கம் என்று தெரிவித்துள்ளார் பா.ஜ.க. மூத்த தலைவர்களில் ஒருவரான சுப்ரமணிய சுவாமி.

ஜெய்ப்பூரில்நடந்த நிகழ்ச்சி யில் ஒன்றில் அவர் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஆம் ஆத்மி கட்சிக்கு தண்ணீர், மின்சாரம் போன்ற பிரச்சினைகள் தவிர்த்து குறிப்பிட்டு சொல்லும் அளவுக்கு எந்த கொள்கையும், குறிக்கோளும் கிடையாது. ஆம் ஆத்மி கட்சி ஒரு நக்சலைட்டு இயக்கம். அதற்கு என்னிடம் ஆதாரம் உள்ளது. அர்விந்த் கெஜ்ரிவால் 'ஸ்வராஜ்' என்ற தலைப்பில் ஒரு புத்தகம் எழுதியுள்ளார். அதில் நக்சலைட்டுகளின் கொள்கைகள் பற்றி குறிப்பிட்டுள்ளார். அவர் ஒவ்வொரு பகுதியையும் கொலனியாக மாற்றி அரசு நடத்த வேண்டும் என்று நினைக்கிறார். இது அரசியலமைப்பு சட்டத்துக்கு எதிரானது" என்று தெரிவித்துள்ளார். (ற)

# பா.ஜ.க. கூட்டணியில் தே.மு.தி.க. இணையும்

## இல.கணேசன் நம்பிக்கை

சென்னை, பெப்.18
பா.ஜ.கவுடனான தேர்தல் கூட்டணியில் தே.மு.தி.க. இணைந்து கொள்ளும் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளார் பா.ஜ.க. மூத்த தலைவர் இல.கணேசன்.

பா.ஜ.க மூத்த தலைவர் இல. கணேசன் தனது 69ஆவது பிறந்த நாளைக் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொண்டாடினார். அதன்போது கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில்,

"தே.மு.தி.க தரப்பில் இருந்து பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்ததற்கான காரணம் எனக்குப் புரியவில்லை. ஒருவேளை மத்திய அரசு தொடர்பான பிரச்சினைகளுக்காக அவர் அணுகி இருந்தாலும் பிரதமரால் எதுவும் செய்ய முடியாது. காரணம் அவர் ஒரு தபால்பெட்டி மாதிரி. அவரால் தபால்களை விநியோகம் செய்யத்தான் முடியும். காங்கிரஸ் தலைவர்களை விஜயகாந்த் சந்தித்தாரா, பேசினாரா என்பதெல்லாம் அதிகாரபூர்வமாக தெரியவில்லை.


இல.கணேசன்

நேற்று வரை எங்களுடன் பேசிக் கொண்டுதான் இருந்தார்கள். மோடி அலையை பயன்படுத்தி ஒரு வலுவான கூட்டணியை அமைக்க தே.மு.தி.கவும் எங்களோடு வர வேண்டும் என்று விரும்புகிறோம். வருவார்கள் என்று நம்புகிறோம்.

பா.ம.க-வுடன் பேசிக் கொண்டிருக்கிறோம். எதிராளியை விட கூடுதல் பலம் வந்தால் நல்லதுதானே. நாங்கள் கூட்டணிக்கான கதவுகளை இது வரை மூடவில்லை. இப்போது அவசரப்பட அவசியமும் இல்லை. தேர்தல் நேரத்தில் தமிழ்நாட்டின் தென்பகுதிக்கும், மேற்கு பகுதிக்கும் பரப்புரை செய்ய வருமாறு மோடியை அழைத்துள்ளோம். அவரும் சம்மதித்துள்ளார். எப்போது வருவார் என்பது தேர்தல் நேரத்தில் முடிவாகும்." என்று தெரிவித்தார். (ற)


# மாநில மகளிரணியின் தலைவியானார் ராதிகா

சென்னை, பெப்.18
நடிகர் சரத்குமாரின் அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் மாநில மகளிரணித் தலைவியாக அவரது மனைவி நடிகை ராதிகா நியமிக்கப்பட்டுள்ளார்.

திருநெல்வேலியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் மாநில மாநாட்டின் போதே இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார் சரத்குமார்.

அந்த மாநாட்டில் பேசிய நடிகை ராதிகா, "மகளிருக்காக தனியாக ஒரு மாநாட்டை சமத்துவ மக்கள் கட்சி நடத்த வேண்டும்" என்று கோரிக்கை விடுத்தார். அதற்குப் பதிலளித்த சரத்குமார், "கட்சியின் மாநில மகளிரணித் தலைவி பொறுப்பை ராதிகா ஏற்றால் மாநாடு நடத்த உடனடியாக ஒப்புதல் வழங்கப்படும்" என்று உறுதியளித்தார். அதற்கு மாநாட்டு மேடையிலேயே ராதிகா ஒப்புதல் வழங்கியதை அடுத்து, கட்சியின் மாநில மகளிரணித் தலைவியாக ராதிகா நியமிக்கப்படுகின்றார் என்றும், மகளிர் அணி மாநாடு நடத்தப்படும் எனவும் சரத்குமார் அறிவித்தார்.

ராதிகா இதுவரை சமத்துவ மக்கள் கட்சியின் அரசியல் ஆலோசகர் எனும் பதவியை வகித்து வந்தார். (ற)


கர்நாடக மாநிலம் தும்கூரில் நடந்த காங்கிரஸ் கட்சியின் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்ட அந்தக் கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்திக்கு அந்த மாநில காங்கிரஸ் கட்சியின் முக்கியஸ்தர்கள் நினைவுப் பரிசில் வழங்கினர். (ற)


திருச்சியில் நடந்த தி.மு.க. மாநாட்டில் திருச்சி மாவட்ட தி.மு.க. சார்பாக தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலினுக்கு கே.என். நேரு செங்கோல் ஒன்றைப் பரிசாக வழங்கினார்.

# குடியரசுத் தலைவர் ஆட்சி புதுடில்லியில் நடைமுறை

புதுடில்லி, பெப்.18
புதுடில்லியில் அர்விந்த் கெஜ்ரிவால் தலைமையிலான அரசு பதவி விலகியதை அடுத்து அங்கு குடியரசுத் தலைவர் ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதையடுத்து புதுடில்லி சட்டசபை முடக்கப்பட்டது. அந்த மாநில ஆளுநரின் பரிந்துரையை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

புதுடில்லி சட்ட சபையில் ஜன் லோக்பால் சட்டத் திருத்தத்தைத் தாக்கல் செய்ய முடியாது போனதை அடுத்து முதலமைச்சர் கெஜ்ரிவால் தனது பதவியில் இருந்து விலகினார். அதையடுத்து அந்த மாநில ஆளுநர் நஜீப் சிங்கை சந்தித்து பதவி விலகல் கடிதத்தை கையளித்த கெஜ்ரிவால், சட்டசபையைக் கலைத்துவிட்டு மீண்டும் தேர்தல் நடத்த உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். ஆனால், கெஜ்ரிவாலின் கோரிக்கையை நிராகரித்த ஆளுநர் நஜீப் ஜங், குடியரசுத் தலைவர் ஆட்சிக்கு பரிந்துரை செய்தார். துணை நிலை ஆளுநரின் பரிந்துரை மீது ஆலோசனை நடத்திய மத்திய அமைச்சரவை, புதுடில்லியில் குடியரசுத் தலைவர் ஆட்சியை நடைமுறைப்படுத்த குடியரசுத் தலைவருக்கு பரிந்துரை செய்தது.

அதையடுத்து புதுடில்லியில் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்டு, சட்டசபை முடக்கப்பட்டது. (ற)

# வேட்பாளர்கள் பட்டியலை வெளியிட்டது ஆம் ஆத்மி

புதுடில்லி, பெப்.18
எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் 20 வேட்பாளர்கள் கொண்ட பட்டியலை வெளியிட்டுள்ளது ஆம் ஆத்மி கட்சி.

கடந்த தேர்தலில் ராகுல் காந்தி போட்டியிட்டு வெற்றி பெற்ற உத்தரப்பிரதேச மாநிலம் அமேதி தொகுதியில் குமார் விஸ்வாஸ் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். மத்திய அமைச்சர் கபில் சிபல் போட்டியிட்டு வெற்றி பெற்ற டில்லி சாந்தினி சவுக் தொகுதியில் பத்திரிக்கையாளர் அஷூதோஷ் போட்டியிடவுள்ளார்.

சல்மான் குர்ஷித் வெற்றி பெற்ற உத்தரபிரதேச மாநிலம் பருக்காபாத்தில் முகுல் திரிபாதியும், மணீஷ் திவாரி வெற்றி பெற்ற லாதியானா தொகுதியில் ஹெச்.எஸ்.பூல்காவும் போட்டியிடுகின்றனர். மும்பையில் மேத்தா பட்கர் போட்டியிடுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று பாரதிய ஜனதா முன்னாள் தலைவர் நிதின் கட்கரி வெற்றி பெற்ற தொகுதியான நாக்பூரில் அஞ்சலி டேமானியா போட்டியிடவுள்ளார். குர்கானில் யோகேந்திர யாதவும், புனேவில் சுபாஷ் வாடேவும், மும்பை தெற்கு தொகுதியில் மீரா சான்யாலும் போட்டியிடுவார்கள் என்றும் அறிவித்துள்ளது ஆம் ஆத்மி கட்சி. (ற)

# செருப்பால் தாக்கியவரும் தேர்தலில் களமிறங்குகிறார்

புதுடில்லி, பெப்.18
மத்திய அமைச்சர் சிதம்பரத்தின் மீது செருப்புக் கொண்டு தாக்குதல் நடத்தியவரும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ளார்.

2009ம் ஆண்டு செய்தியாளர் சந்திப்பின் போது மத்திய அமைச்சர் சிதம்பரத்தின் மீது செருப்பு எறிந்து தாக்குதல் நடத்தியவர் ஜர்னல் சிங். இவருக்கு ஆம் ஆத்மி கட்சி நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு வாய்ப்பு வழங்கியுள்ளது. (ற)

# தெருநாய் மீது வழக்கு பதிவு உத்தரபிரதேசத்தில் விநோதம்

சனோதா, பெப்.18
உத்தரபிரதேச மாநிலத்தில் தெருநாய் ஒன்றின் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்ட விநோத சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

உத்திர பிரதேச மாநிலத்தின் புலண்ட்ஷஹர் மாவட்டத்தைத் சேர்ந்த பணி ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரியான விஜய் சிங் என்பவரை தெரு நாய் ஒன்று கடித்து விட்டது. அதனால் கோபம் கொண்ட விஜய் சிங், தன்னைக் கடித்த நாய் மீது வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

விஜய் சிங்கின் இந்த முறைப்பாட்டால் தர்மசங்கடத்தில் சிக்கிக் கொண்ட பொலிஸ் நிலைய அதிகாரிகள், அவரை சமாதானப்படுத்தப் படாதபாடு பட்டனர். ஆனால் அதற்கெல்லாம் அசைந்து கொடுக்காத விஜய் சிங், நாய் மீது வழக்குப் பதிவு செய்தே ஆக வேண்டும் என்று விடாப் பிடியாக இருந்துள்ளார்.


கோப்புப் படம்

கடைசியில் விஜய் சிங்கின் பிடிவாதமே வென்றது. வேறு வழியில்லாத நிலையில் அந்த நாயின் மீது இந்திய குற்றச் சட்டப்பிரிவு 289கீழ் வழக்குப் பதிவு செய்தனர் பொலிஸார். வழக்குப் பதிவின் போது குற்றவாளி எனும் இடத்தில் தெரு நாய் என்று குறிப்பிட்டுள்ளனர் பொலிஸார். (ற)



எகிப்தின் சினாய் தீபகற்பத்தில் நேற்றுமுன்தினம் சுற்றுலா பஸ் ஒன்றின் மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அதில் மூன்று தென் கொரியர்கள் மற்றும் ஓர் எகிப்தியர் என 4 பேர் உயிரிழந்துள்ளனர். 14 தென் கொரியர்கள் படுகாயம் அடைந்துள்ளனர். மவுண்ட் சினாய் அருகில் உள்ள ஒரு சுற்றுலா தலமான செயிண்ட் கேத்ரீன் மடாலயத்தில் இருந்து இஸ்ரேல் நோக்கி செல்லும் போதே குறித்த பஸ் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. அந்த பஸ்ஸில் 3 சுற்றுலா வழிகாட்டிகள் உட்பட 31 சுற்றுலாப் பயணிகள் பயணித்திருந்தனர் என்று தென்கொரிய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.(ற)

## போராட்டங்களை அடக்கும் வல்லமை அரசுக்கு உண்டு

*உக்ரைன் ஜனாதிபதி கூறுகின்றார்*

லண்டன், பெப்.18

உக்ரைனில் அரசுக்கு எதிராகப் போராட்டங்களை நடத்தி வருபவர்களை ஒடுக்குவதற்கு அரசிடம் போதுமான படைப் பலம் உள்ளது என்று தெரிவித்துள்ளார் அந்நாட்டு ஜனாதிபதி விக்டர் யானுகோவிச்.

தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் கூறியுள்ளதாவது,

"எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுயநலத்துடன் செயற்படுகின்றனர். அரசியல் தலைவர்கள் தங்களின் பொறுப்புகளை உணர்ந்து செயற்பட வேண்டும். போராட்டங்களை ஒடுக்குவதற்கான அனைத்து வளங்களும், படைப்பலமும் அரசிடம் உண்டு என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்துடனான வர்த்தக ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து உக்ரைனில் கடந்த மூன்று மாதங்களாகப் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அரச எதிர்ப்பாளர்கள் ஆயிரக்கணக்கானோர் அங்குள்ள சுதந்திர சதுக்கத்தில் கூடாரம் அமைத்துப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.(ற)

## நைஜீரியாவில் வெறியாட்டம் 106 பேர் சுட்டுப் படுகொலை

*போக்கோ ஹரம் பிரிவினைவாதிகள் கைவரிசை*

கானோ, பெப்.18

நைஜீரியாவில் கிறிஸ்வர்கள் அதிகம் வசிக்கும் கிராமம் ஒன்றுக்குள் இஸ்லாமியப் பிரிவினைவாதிகள் நடத்திய கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில் 106 கிராமவாசிகள் உயிரிழந்துள்ளனர். பலர் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

மத்திய ஆபிரிக்க நாடுகளில் இஸ்லாமிய சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட ஆட்சியை அமைக்க வேண்டும் என்று கோரி போக்கோ ஹரம் என்ற இஸ்லாமிய பிரிவினைவாத அமைப்பு ஆயுதமேந்திப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகிறது. நைஜீரியாவில் உள்ள கிறிஸ்தவ தேவாலயங்களை தாக்கி அழிக்கும் அந்த அமைப்பினர் அப்பாவி பொது மக்களையும் ஈவிரக்கமின்றிக் கொன்று குவித்து வருகின்றனர்.

இந்தநிலையில் அங்குள்ள போர்னோ மாகாணத்தில் கிறிஸ்வர்கள் அதிகம் வாழும் இஸ்கா என்ற கிராமத்தை லொறிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் வந்த போக்கோ ஹரம் அமைப்பினர் நேற்று முன்தினம் சுற்றி வளைத்தனர். இராணுவச் சீருடை அணிந்திருந்த அவர்கள் கிராமத்துக்குள் புகுந்து அங்குள்ள மக்களை நோக்கிக் கண்மூடித் தனமாகத் துப்பாக்கிச் சூடு நடத்தினர். அது மட்டுமல்லாது வீடுகளுக்குள் மறைந்திருந்தோரையும் வீதிக்கு இழுத்து வந்து சுட்டுக் கொன்றுள்ளனர்.

குறித்த பகுதிக்கு இராணுவத்தினர் வருவதற்கு முன்னதாக அவர்கள் அனைவரும் தப்பியோடி விட்டனர் என்று கூறப்படுகின்றது.

2010ஆம் ஆண்டில் இருந்து இதுவரை ஆயிரத்து 700க்கும் அதிமான அப்பாவி மக்கள் போக்கோ ஹரம் பிரிவினை அமைப்பின் தாக்குதலில் உயிரிழந்துள்ளனர் என்று புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. (ற)



இஸ்கா கிராமத்தில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடும் நைஜீரிய இராணுவத்தினர்

## வீழ்ந்து நொருங்கியது நேபாள விமானம்

*பயணிகள் அனைவரும் சாவு எனச் சந்தேகம்*



விமானத்தில் பயணித்தவர்களின் உறவினர்கள் விமான நிலையத்தில் குழுமியுள்ளனர்.

காட்மண்ட், பெப்.18

நேபாளத்தில் 18 பேருடன் நேற்றுமுன்தினம் காணாமற்போன விமானம் அங்குள்ள அர்காகாஞ்சி மாவட்டத்தில் உள்ள கிடிம் என்ற காட்டுப் பகுதியில் வீழ்ந்து நொருங்கியுள்ளது என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன. அந்த விமானத்தில் பயணித்தவர்கள் உயிருடன் இருப்பதற்கான வாய்ப்புகளும் குறைந்துள்ளன என்று அந்நாட்டுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நோபாள் எயார்லைன்ஸுக்குச் சொந்தமான இந்த விமானத்துடனான தொடர்புகள் சுற்றுலாத் தலம் ஒன்றில் இருந்து பயணிகளுடன் புறப்பட்ட சிறிது நேரத்திலேயே அற்றுப் போய்விட்டன என்று விமான நிறுவன அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். அந்த விமானத்தில் ஒரு குழந்தை உட்பட 15 பயணிகளும் 3 விமானப் பணியாளர்களும் பயணித்தனர் என்றும் அவர்கள் மேலும் தெரிவித்திருந்தனர்.

இந்தநிலையில், குறித்த விமானம் கிடிம் என்ற காட்டுப்பகுதியில் வீழ்ந்து நொருங்கியுள்ளது என்று தற்போது கூறப்படுகின்றது.

"விமானம் விழுந்துள்ள பகுதியில் தீப்பிழம்பு ஏற்பட்டுள்ளது. குறித்த பகுதிக்கு மீட்புக் குழுவினர் விரைந்துள்ளனர். கூடிய விரைவில் விமானத்தில் பயணம் செய்தவர்களின் நிலை தெரிய வரும்" என்று பொலிஸார் கூறுகின்றனர். எனினும் விமானத்தில் பயணித்தவர்கள் உயிருடன் இருப்பதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவாகவே உள்ளன என்று கூறப்படுகின்றது. (ற)

## ஒரு சில நிமிடங்களில் 10 இலட்சம் நண்பர்கள்

நியூயோர்க், பெப்.18

அமெரிக்காவில் 10 வயது சிறுவன் ஒருவன் 'பேஸ்புக்' மூலம் சில நிமிடங்களிலேயே 13 லட்சம் நண்பர்களை பெற்றுள்ளான்.

அமெரிக்காவின் மெக்சிகன் மாகாணத்தை சேர்ந்த இந்தச் சிறுவன் ஒருவன் மனஇறுக்க நோயால் பாதிக்கப்பட்டிருந்தான்.

நண்பர்கள் யாரும் இல்லாது தனிமையில் தவித்துள்ளான். அதனால் கவலையடைந்த அவனது தாயார் ஜெனிபர் ஹன்னிகம் தனது மகனின் 10ஆவது பிறந்தநாளில் அவனுக்கு நண்பர்களைப் பரிசாகக் கொடுக்க வேண்டும் என எண்ணினார்.

**தற்போதைய காலகட்டத்தில் நட்பு வட்டத்தைப் பெரிதாக்கிக் கொள்வதற்கு கிடைத்துள்ள வரப்பிரசாதம் 'பேஸ்புக்'**

தற்போதைய காலக்கட்டத்தில் நட்பு வட்டாரத்தைப் பெருக்கிக் கொள்ள வரப்பிரசாதமாக கிடைத்துள்ள 'பேஸ்புக்' வலைதளத்தில், தனது மகனுக்கு ஒரு தனிப் பக்கத்தை உருவாக்கி, அதில் அவனது நோய் குறித்தும், அவனுக்கு நண்பர்களே இல்லை என்ற தகவலையும் குறிப்பிட்டிருந்தார். அதை வெளியிட்ட சில நிமிடங்களிலேயே அவனுக்கு 13 லட்சம் நண்பர்கள் கிடைத்தனர்.

அவர்கள் மூலம் தனது மகன் நோயில் இருந்து விடுபடுவான் என்று ஜெனிபர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.(ற)

## சூரியனைப் பூமி சுற்றுவது தெரியாத அமெரிக்கர்கள்

நியூயோர்க், பெப்.18

அமெரிக்கர்கள் அறிவியலில் ஆர்வம்கொண்டவர்கள். ஆனால் பூமி சூரியனைச் சுற்றி வருவது குறித்து நான்கில் ஒரு அமெரிக்கருக்குத் (26%) தெரியவில்லை என்று கூறுகின்றது ஓர் ஆய்வு முடிவு.

அமெரிக்காவின் தேசிய அறிவியல் அமைப்பின் சார்பாக அமெரிக்கா முழுவதும் ஓர் ஆய்வு நடத்தப்பட்டது. சுமார் 2,200 பேரிடம் இயற்பியல் மற்றும் உயிரியல் தொடர்பான 9 கேள்விகள் கேட்கப்பட்டன.

அதன்படி ஆய்வில் பங்கேற்றவர்களில் 74 சதவீதம் பேர் மட்டுமே சூரியனை பூமி சுற்றி வருவது தெரியும் என்று கூறியுள்ளனர்.

அதுபோன்று விலங்குகளிலிருந்து பரிணாம வளர்ச்சியின் மூலம் மனிதன் தோன்றினான் என்பது 48 சதவீத அமெரிக்கர்களுக்கு மட்டுமே தெரிந்திருந்தது. அறிவியல் துறைக்கு கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும் என்று ஆய்வில் பங்கேற்றவர்களில் மூன்றில் ஒருவரே கூறியுள்ளார். மருத்துவக் கண்டுபிடிப்புகள் குறித்துத் தெரிந்துகொள்ள விரும்புகின்றோம் என்று 90 சதவீதம் பேர் தெரிவித்தனர்.

இரு ஆண்டுகளுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்படும் இந்த ஆய்வு தொடர்பான முடிவுகள் அந்நாட்டு ஜனாதிபதி பராக் ஒபாமா மற்றும் அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரிடம் கையளிக்கப்படுவதுடன், தேசிய அறிவியல் அமைப்பின் அறிக்கையிலும் சேர்க்கப்படும் என்று ஆய்வை நடத்திய அமைப்பு தெரிவித்துள்ளது. (ற)

# படையினரால் மேற்கொள்ளப்பட்ட மண் அகழ்வை தடுத்து நிறுத்தினார் மாகாண சபை உறுப்பினர்

*முல்லைத்தீவு செம்மலையில் சம்பவம்*

நேற்று செம்மலைப்பகுதியில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோத மண் அகழ்வு மாகாண சபை உறுப்பினர் ரவிகரனின் தலையீட்டால் தடுத்து நிறுத்தப்பட்டது.
அவர் குறித்த பகுதியில் மண் அகழ்வு மேற்கொள்ளப்படுவது சட்டத்துக்குப் புறம்பானது என அவர்களுக்கு அறிவுறுத்தியதுடன் அவர்களைக் கொண்டே மண் அகழ்ந்த கிடங்குகளை மூடவைத்தார்
இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:
இராணுவத்தினரால் செம்மலைப்பகுதியில் சட்டவிரோத மண் அகழ்வு இடம்பெற்றுவரும் நிலையில் நேற்று காலை யும் இவ்வாறானதொரு சம்பவம் நடைபெற்றது. மண் அகழ்வை அப்பகுதி மக்கள் தடுக்க முயன்றபோதிலும் அது பயனளிக்காத நிலையில் வட மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனிடம் தொலைபேசி ஊடாக முறையீட்டனர். உடனடியாக அந்தப் பகுதிக்கு விரைந்து சென்ற அவர் அங்கு மணல் ஏற்றிக் கொண்டிருந்த இராணுவத்தினரைக் கண்டு இது பற்றி வினாவினார். இதற்கு இராணுவத்தினர் தமது முகாம் தேவைக்காகவே மணலை அகழ்வதாகக் கூறினர்.
அப்போது தன்னை அவர்களுக்கு அறிமுகப்படுத்திய மாகாண சபை உறுப்பினர் மணல் ஏற்றுவதற்கு முன்னர் அனுமதி பெறவேண்டும் எனவும் மக்கள் குடியிருப்புகள் மற்றும் பாதைகளுக்கு அண்மையில் மண் அகழ்வது அப்பகுதியில் வாழ்கின்ற மக்களின் இயல்பு நிலையை வெகுவாக பாதிக்கும் எனவும் விளக்கினார்.
அத்துடன் மண் அகழ்வைத் தடுத்து நிறுத்தியதுடன் அவர்களைக்கொண்டே மண் அகழ்ந்த கிடங்குகளையும் மூடவைத்தார். அதன்பின்னர் அங்கிருந்து கரைதுறைப்பற்று பிரதேச செயலருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு மேற்படி மண் அகழ்வு பற்றித் தெரிவித்தார்.

(க)



மணல் அகழ்வை தடுக்கும் வட மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன்.


# VACANCIES
# UNIVERSITY OF JAFFNA, SRILANKA.

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts up to 21st March 2014.

**FACULTY OF ENGINEERING**

**Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (Probationary)** in Electrical & Electronic Engineering/Computer Engineering/Civil Engineering

**SALARY AND OTHER BENEFITS**

| Post | Salary scale |
|---|---|
| Senior Lecturer Grade I | Rs.45545 – 7x1050 – 52895/-p.m |
| Senior Lecturer Grade II | Rs.39755 – 11x790 – 48445/-p.m |
| Lecturer (Probationary) | Rs.27775 – 10x645 – 34225/-p.m |

Note:

In addition to the above salary, the following allowances will also be paid:
i. Academic allowance –
Senior Lecturer Grade I / Grade II – 85% of the basic salary
Lecturer (Probationary) - 65% of the basic salary
ii. Special allowance -20% of the basic salary
iii. Cost of living allowance of Rs.7,800/-p.m

Further 35% of the basic salary will be paid as Research allowance based on the research activity of the academic staff

**Statutory benefits:**
i). Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above
ii) Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system
iii) Gratuity payments
iv) Employees' Trust Fund benefits
v) Free Medical Services.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self –addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk**. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/Postal Order for Rs.100/- to the application form drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Those who wish to apply for **more than one** post should apply in **separate forms.**

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.**
**17.02.2014**

(C/12093)(2.3.6)


# அங்காரக சங்கடஹர சதுர்த்தி விரதம்

விநாயகருக்குரிய விரதங்களில் முக்கியமானது சங்கடஹரசதுர்த்தி விரதம். ஒவ்வொரு மாதமும் அபர பட்சத்தில் (தேய்பிறை) வரும் சதுர்த்தித் திதியில் சங்கடஹர சதுர்த்தி விரதம் அனுஷ்டிக்கப்படும். சங்கடங்களை அழிப்பதால் இது சங்கடஹர சதுர்த்தி எனப்படுகிறது. இவ்விரதம் அனுஷ்டிப்போர் அங்காரக சங்கடஹர சதுர்த்தி தினத்தில் தான் ஆரம்பிக்க வேண்டும். மாசி மாதத்தில் தேய்பிறையில் சதுர்த்தித் திதி செவ்வாய்க்கிழமையுடன் கூடி வருவதே அங்காரக சங்கடஹர சதுர்த்தியாகும்.
மாசி மாதம் அபரபட்சத்தில் (தேய்பிறை) செவ்வாய்க்கிழமை கூடும் சதுர்த்தித் திதியில் சங்கடஹரசதுர்த்தி விரதத்தை நோற்க ஆரம்பிக்க வேண்டும். பின்னர் ஒவ்வொரு சதுர்த்தி தினத்திலும் அதிகாலை எழுந்து நீராடி கணேசரின் பாதக் கமலங்களை தியானித்து ஏகாஷ்ஷர மந்திரத்தை உச்சரித்தல் வேண்டும். மாலையில் சந்திரன் உதயமாகியதும் விநாயகரை எழுந்தருளச் செய்து விநாயகரை பூஜிக்க வேண்டும். இவ்வாறு ஒரு வருடம் செய்தால் புத்திர பாக்கியம் உண்டாகும். இவ்வாறு பல சிறப்புக்கள் கொண்ட இந்த அங்கார்க சங்கடஹர சதுர்த்தி விரதம் பலகாலங்களுக்கு ஒருமுறையே செவ்வாய்க்கிழமையுடன் கூடிவரும். இந்த வருடம் இவ்வாறு வருவது எமது முற்பிறப்புப் பயனாகும். எனவே இத்தினத்தில் விரதம் நோற்க ஆரம்பித்து நாமும் விநாயகப் பெருமானின் அருட்கடாட்சம் பெற்றுய்வோம்.

(விநாயகர் புராணக் கதை)

# இலங்கையில் பல்கலைக்கழகம் அமைக்க இமாம் இப்னு சஊத் நிர்வாகம் விருப்பம்

இமாம் இப்னு சஊத் இஸ்லாமிய பல்கலைக்கழகம் சவூதி அரேபியாவில் மிகவும் பழைமை வாய்ந்த பல்கலைக்கழகம். அந்தப்பல்கலைக்கழக நிர்வாகத்தினர் கடல் கடந்த வளாகத்தை இலங்கையில் நிறுவுவதில் ஆர்வமாக உள்ளதாக நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.
கடந்தவாரம் உம்ரா கடமையை நிறைவேற்றுவதற்காக மக்காவுக்குச் சென்ற நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் ரியாத் நகரிலுள்ள பல்கலைக்கழகத்துக்குச் சென்றிருந்தார்.
இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்;
இமாம் இப்னு சஊத் இஸ்லாமியப் பல்கலைக்கழகம் பழைமை வாய்ந்த பல்கலைக்கழகம் என்பதுடன் ஒரு லட்சத்து 25 ஆயிரம் மாணவர்களுடன் இயங்கும் மிகப் பெரிய பல்கலைக்கழகம் ஆகும். இங்கு விடுதிகளில் தங்கி உயர் கல்வி கற்போரின் எண்ணிக்கை 25 ஆயிரம். மருத்து வப்பீடம், பொறியியற்பீடம் உள்ளிட்ட பல கற்கை நெறிகள் இங்கு நடைபெறுகின்றன.
இஸ்லாமிய மருத்துவங்கள் சார்ந்த புத்தகங்களையும் அவர்கள் பேணிப் பாதுகாக்கின்றார்கள். அவர்கள் கடல் கடந்த வளாகத்தை இலங்கையில் ஆரம்பிக்க ஆர்வமாக உள்ளார்கள். இது தொடர்பில் கல்வி அமைச்சருடன் பேசவுள்ளேன்' - என்றார்.

(ந-10)


## கூட்டுறவுப் பயிற்சிக்கான விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் நடத்தப்படும் கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர உயர் பிரிவுக்குப் பயிற்சியாளர்களைச் சேர்த்துக் கொள்வதற்குத் தகைமையுள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

**தகைமை :**
க.பொ.த (உயர்தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் வர்த்தகம்/கணிதப் பிரிவில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றவர்களும் அதற்கு மேலான தகைமையுடையவர்களும், கூட்டுறவுப் பணியாளர் சாதாரண பிரிவுப் பரீட்சையில் சித்தி அடைந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

முடிவு திகதி : 28.02.2014
விண்ணப்பப் படிவத்தை கீழ்வரும் முகவரியில் அமைந்த சபை அலுவலகத்தில் ரூபா 20/= செலுத்திப் பெற்றுக் கொள்ளவும்.

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி :**
யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை, கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டப கட்டடத் தொகுதி, 2ஆம் மாடி, இல.12, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

அதிபர்,
கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

(கி/12091)(7.6.3)

# அன்றாடக் கடமைகளை நிறைவேற்றுவதில் இடர்கள்

## முள்ளந்தண்டு பாதிக்கப்பட்ட மாற்று வலுவுள்ளோருக்கு

கிளிநொச்சி, பெப்.18

கிளிநொச்சி மாவட்டத்தில் முள்ளந்தண்டுப் பாதிப்புக்கு உட்பட்ட மாற்று வலுவுள்ளோர் தமது அன்றாடக் கடமைகளை நிறைவேற்றுவதில் கூட இடர்களை எதிர்கொண்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட மாற்று வலுவுள்ளோர் சம்மேளனத் தலைவர் தி.சிவமாறன் தெரிவித்தார்.



மாற்றுவலுவுள்ளோர் சம்மேளனத் தலைவர் தி சிவமாறன் உரையாற்றுகின்றார்.

கிளிநொச்சி அரச செயலகத்தில் கடந்த 13 ஆம் திகதி நடைபெற்ற மாற்று வலுவுள்ளோருடனான கலந்துரையாடலின்போது உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

மாற்று வலுவுள்ளோருக்கான தேவைகள் நிறையவுள்ளன.

குறிப்பாக தொழில் வாய்ப்புக்கள் இல்லாமை முக்கிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது. இவர்களுக்குத் தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். தொழிற்பேட்டைகளை உருவாக்கி தொழில் வாய்ப்புக்களை வழங்க முடியும்.

மஹிந்த சிந்தனைத் திட்டத்தின் கீழான கொடுப்பனவுகள் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள நான்கு பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள 200 பேருக்கு மட்டுமே வழங்கப்படுகின்றன.

சுமார் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாற்று வலுவுள்ளவர்கள் உள்ள இந்த மாவட்டத்தில் மிகக் குறைந்தவர்களுக்குத் தான் உதவிக் கொடுப்பனவுகள் கிடைக்கின்றன.

மேலும்சமூகசேவைகள்திணைக்களத்துக்கு உதவி கோரிக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. மேலும் 200 க்கும் மேற்பட்ட மாற்று வலுவுள்ளவர்கள் முள்ளந்தண்டுப் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளனர். இவர்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்கள் சில மருத்துவமனைகளால் கிடைப்பதில்லை. மருத்துவமனை களில் நிலவும் பற்றாக்குறை காரணமாக இவை வழங்கப்படுவதில்லை. இதனால் சில பொருள்களை மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதால் தொற்று நோய்கள் பரவக்கூடிய அபாய நிலையும் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தை முதன்மைப் படுத்தி உதவித்திட்டங்கள் வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (க-18)

# மாதாந்த கிளினிக்குகளை நடத்துவதற்கு இடவசதி இல்லை

## மாந்தை கிழக்கு கிராமங்களில்

மாந்தை, பெப்.18

மாந்தை கிழக்கிலுள்ள கிராமங்களில் சுகாதாரப் பணிமனையினால் நடத்தப்படும் மாதாந்தக் கிளினிக்குகளை நடத்துவதற்கு இடவசதி இல்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்றுமுறிப்பு உட்பட பல கிராமங்களில் இடவசதி இல்லாத நிலை காணப்படுவதால் திரிபோசா மாவைப் பாதுகாப்பாக வைத்திருக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

அண்மையில் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இது தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டது. சிறிய கட்டடம் ஒன்றை கிராமங் களுக்குப் பொதுவானதொரு இடத்தில் அமைப்பதன் மூலமாக திரிபோசா போன்ற கிளினிக்கில் வழங்கப்படும் பொருள்களைப் பாதுகாக்க முடியும் எனவும் அங்கு தெரிவிக்கப்பட்டது.

மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய பிரதேசங்களில் நீண்ட தூர இடைவெளியில் காடுகளுக்கு இடையில் கிராமங்கள் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# சிறுபோக நெற்செய்கையை மேற்கொள்ள முடியாத நிலை

## கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில்

கிளிநொச்சி, பெப்.18

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் நடப்பாண்டில் சிறுபோக நெற்செய்கையை முன்னர் போன்று மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. போதிய மழை வீழ்ச்சி இல்லாததால் இந்த மாவட்டங்களில் உள்ள குளங்களின் நீர்மட்டம் குறைந்து காணப்படுகின்றது. இதன் காரணமாகவே சிறுபோக நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தில் 15அடி வரையிலேயே நீர்மட்டம் காணப்படுகின்றது. இதனால் விதை நெல்லைப் பெறுவதற்கு மட்டுமே சிறிய அளவில் நெற்செய்கையை மேற்கொள்ள முடியும். முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வவுனிக்குளத்தில் 11 அடியாக நீர் மட்டம் உள்ளதால் சிறுபோக நெற்செய்கைக்கான வாய்ப்புக்கள் இல்லை என்று தான் கூறவேண்டும்.

**கிளிநொச்சி இரணைமடுக் குளத்தில் 15அடி வரையிலேயே நீர்மட்டம் காணப்படுகின்றது. இதனால் விதை நெல்லைப் பெறுவதற்கு மட்டுமே சிறிய அளவில் நெற்செய்கையை மேற்கொள்ள முடியும்.**

மாந்தை கிழக்கு, துணுக்காய்ப் பிரதேச செயலகங்களில் நடைபெற்ற விவசாயக் குழுக் கூட்டங்களில் சிறுபோக நெற்செய்கைக்கான வாய்ப்புக்கள் குறைவாக உள்ளமை தொடர்பாக எடுத்துக் கூறப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# பசு மாடுகளில் மோசடி

மாந்தை கிழக்கில் உள்ள கால்நடைவளர்ப்பாளர்களுக்கு வெளி மாவட்டங்களிலிருந்து எடுத்து வரப்படும் இனவிருத்தித் தன்மை இல்லாத பசு மாடுகள் அதிக விலைக்கு விற் கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் ஏமாற்றமடைந்த கால்நடை வளர்ப்பாளர்கள் செய்வதறியாத நிலையில் உள்ளதாகவும் தெரிய வருகின்றது-

தமது வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பும் வகையில் பசு மாடுகளை அதிக விலை கொடுத் துக் கொள்வனவு செய்த போதி லும் வருமானம்எதுவுமில்லாத நிலையில் அந்தப் பசு மாடுகளைப் பராமரிக்க வேண்டிய அவலநிலையில் அவர்கள் உள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-18)

# நம்பிக்கையுடன் கூடிய இலக்கை உருவாக்கிப் பயணிக்க வேண்டும்

## மாணவர்களுக்கு மருத்துவர் ஜெயராசா அறிவுரை

கிளிநொச்சி, பெப்.18

மாணவர்கள் நம்பிக்கையுடன் கூடிய இலக்கொன்றை உருவாக்கி பயணிப்பதன் மூலமாக உயர்வான நிலையை அடைய முடியும். இவ்வாறு கிளிநொச்சி பொது மருத்துவமனையின் உளநல மருத்துவர் மா.ஜெயராசா தெரிவித்தார்.

கிளிநொச்சி பாரதி வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டியில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.



உளநல மருத்துவர் மா. ஜெயராசா உரையாற்றும்போது.

நான் இல்லங்களை பார்வையிடச் சென்ற போது ஓர் இல்லத்தில் "நம்பிக்கை என்பது நங்கூரத்தைப் போன்றது" என்ற வாக்கியம் பொறிக்கப்பட்டிருந்தது. நங்கூரம் என்பது பெரிய கப்பல்களையும் நிறுத்தி வைக்கும் ஆற்றலைக் கொண்டது. மாணவர்கள் மனதில் ஓர் இலக்கை உருவாக்கிக் கொள்ள வேண்டும். அந்த இலக்கை நோக்கி நகர வேண்டும். அப்போதுதான் என்றோ ஒரு நாள் உங்கள் கனவு நனவாகும். மாணவச் செல்வங்கள் போட்டி உணர்வை வளர்க்க வேண்டும். பொறாமையை வளர்க்கக் கூடாது.

மாணவர்கள் அறிவுள்ளவர்களாக மிளிர்வதன் மூலமாகப் பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நல்ல பெயரைத் தேடிக் கொடுக்க முடியும் என்று மேலும் அவர் தெரிவித்தார். (க-18)

# கிளிநொச்சியில் கைதான பெண்ணுக்கு விளக்கமறியல்

## சங்கிலியைத் திருடியதாக சந்தேகம்

கிளிநொச்சி, பெப்.18

கிளிநொச்சியில் 90 ஆயிரம் ரூபா பெறுமதியான சங்கிலியைத் திருடிய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பெண்ணை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார்.

கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதியில் உள்ள வீடொன்றில் தங்கியிருந்ததுடன் அங்கு வைக்கப்பட்டிருந்த இரண்டரைப் பவுண் சங்கிலியைத் திருடிய சந்தேகத்தின் பேரில் இந்தப் பெண் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் பதில் நீதிவான் எஸ்.சிவ பாலசுப்பிரமணிம் முன்னிலையில் அவரது வாசஸ்தலத்தில் முன்னிலையாக்கப்பட்டார். இவரை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக் குமாறு அன்றையதினம் அடையாள அணி வகுப்புக்கு உட்படுத்துமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டார். (க-55)

# இடம் மாறியது செஞ்சிலுவை அலுவலகம்

கிளிநொச்சி மாவட்ட இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க அலுவலகம் இடம்மாறியுள்ளது.

இந்த அலுவலகம் முன்னர் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை முன்பாக ஆனந்தபுரத்தில் இயங்கி வந்தது. தற்போது இந்த இடத்திலிருந்து கிளிநொச்சி நகரிலுள்ள கண்ணன் கோயிலடிக்கு இடம் மாற்றப்பட்டு கடந்த முதலாம் திகதி தொடக்கம் இயங்கி வரு கின்றது.

கிளிநொச்சி இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்திடம் தொடர்பு கொள்ள விரும்புபவர்கள் புதிய முகவரியில் தொடர்புகொள்ள முடியும் என இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்ட கிளை நிர்வாகத்தினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-426)

# திறந்து வைக்கப்பட்டது மந்துவில் பொதுச்சந்தை

முல்லைத்தீவு, பெப்.18

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் உள்ள மந்துவில் பொதுச் சந்தை கடந்த 14 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மந்துவில் மற்றும் ஆனந்தபுரம் பகுதி மக்கள் காய்கறி பயிர்ச் செய்கையை தமது வாழ்வாதாரத் தொழிலாக மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பகுதி மக்கள் தமது உற்பத்திப் பொருள்களை சந்தைப் படுத்துவதற்கென புதுக்குடியிருப்பு பிரதேச சபையால் மந்துவில் பொதுச்சந்தை மீள்நிர்மாணம் செய்யப்பட்டிருந்தது. ஆனால் பலமுறை விடுக்கப்பட்ட கேள்வி கோரல்களின் போது, இந்தச் சந்தையை குத்தகை அடிப்படையில் எடுத்து நடத்த எவரும் விருப்பம் தெரிவிக்கவில்லை.

சந்தைக் கட்டடம் புதுக்குடியிருப்பு பிரதேச சபையால் நீண்ட காலமாக மக்களின் பயன்பாட்டுக்கு விடப் படாமல் இருந்து வந்தது.

இந்த நிலையில், கடந்த 13 ஆம் திகதி அன்று மந்துவில் பகுதியில் வடமாகாணசபை உறுப்பினர் மருத்துவர் சி.சிவமோகனுக்கும் அந்தப் பகுதி மக்களுக்குமிடையில் நடைபெற்ற சந்திப்பின்போது, குறித்த பொதுச் சந்தையை தமது வியாபார நடவடிக்கைகளுக்காக திறந்து தருமாறு மக்கள் வலியுறுத்தியிருந்தனர்.

பொதுமக்களின் கோரிக்கையையடுத்து, மந்துவில் கிராம அபிவிருத்திச் சங்கம், புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் என்பவற்றுடன் கலந்துரையாடி, மறுநாள் 14 ஆம் திகதி அவர் பொதுச்சந்தையைத் திறந்து வைத்தார். (க-402)



மாகாண சபை உறுப்பினர் மருத்துவர் சி. சிவமோகன் சந்தையின் வியாபாரத்தை ஆரம்பித்து வைக்கின்றார்.

# பொலிஸ் நிலையத்திலும் சிறுவர் பூங்கா அமைப்பு

இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தின் வழிகாட்டலில் பொலிஸ் நிலையத்தில் பெற்றோர்களோடு முறைப்பாடுகளை பதியவரும் சிறுவர்களின் நன்மை கருதி மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் புதிதாக சிறுவர் பூங்கா திறந்து வைக் கப்பட்டுள்ளது என்று காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அஜித் பிரசன்ன தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் அத்தி யட்சகர் எஸ்.பி.மெவன் சில்வா வால் அண்மையில் திறந்து வைக் கப்பட்ட இந்தச் சிறுவர் பூங்காவை காத் தான்குடிப் பொலிஸ் நிலையத் துக்கு வரும் சிறுவர்கள் முழுமையாக பயன்படுத்த முடியும் என்று அவர் கூறினார். (ச)



மட்டக்களப்பு, கல்லடியிலுள்ள ஈஸ்ட் லகூன் ஹோட்டலில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும் ஊக்குவிப்பு மற்றும் உற்பத்தி திறன் விருத்தி அமைச்சருமான பசீர் சேகுதாவூத்தின் மகளின் திருமண வைபவத்தில் கலந்து கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, மட்டக்களப்பு, பாசிக்குடாக் கடற்கரைக்குச் சென்றும் பார்வையிட்டார்.

# புதையலைத் தோண்டிய 4 பேர் கைது


மட்டக்களப்பு வாகரைகிருமிச்சை பிரதேசத்தில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்ட சந்தேக நபர்கள் 4 பேரை சனிக்கிழமை வாகரை பொலிஸார் கைது செய்துள் ளனர்.

இவர்கள் சேருவில பிரதேசத்தைச் சேர்ந்த பெரும் பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களாவர்.

அவர்களிடமிருந்து புதையல் எடுப்ப தற்காக பயன்படுத்தப் படும் கூரிய ஆயுதங்கள் மற்றும் கல் உடைக்கும் அலவாங்கு போன்ற பல பொருள்கள் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களை வாழைச்சேனை மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# ஓட்டோ-டிப்பர் மோதி இருவர் உயிரிழப்பு



விபத்தில் சின்னாபின்னமான ஓட்டோ

மட்டக்களப்பு,பெப்.18

அக்கரைப்பற்று - கல்முனை பிரதான வீதியில் நிந்தவூர் பிரதேச செயலகத்துக்கு சமீபமாக நேற்று திங்கட்கிழமை அதிகாலை இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்தில் ஓட்டோ முற்றாக சேதமுற்றதுடன் ஓட்டோவில் பயணித்த ஒருவர் ஸ்தலத்திலேயே உயிர் இழந்துள்ளதுடன்மேலும் இருவர் கல்முனை அஷ்ரப் வைத்தியசா லைக்குக் கொண்டு செல்லப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் அக்குரஸ்ஸ பகுதியைச் சேர்ந்த எம்.ரி.எம். றிப் னாஸ். றினாஸ் என்ற இருவருமே உயிரிழந்துள்ளனர்.

ஓட்டோவும் டிப்பரும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதையடுத்தே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது. இந்த விபத்தில் ஓட்டோவில் பயணம் செய்த மேலும் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசா லையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (ச)

# சிங்களக் குடியேற்றத்தை தடுத்து நிறுத்த வேண்டும்

## யோகேஸ்வரன் எம்.பி. மட்டு·அரச அதிபருக்கு மனு

மட்டக்களப்பு,பெப்.18

மட்டக்களப்பு, புனானை கிழக்குப் பகுதியில் திட்டமிட்ட வகையில் இரா ணுவத்தினாலும், பௌத்த பிக்கு ஒருவராலும் 39 சிங்கள குடும்பங்கள் குறியேற்றப்பட்டுள்ளதை தடுத்து நிறுத்த வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். யோகேஸ்வரன் மாவட்ட அரச அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த விடயம் குறித்து அரச அதிபருக்கு அவர் அனுப்பி வைத்துள்ள மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

1990 ஆம் ஆண்டுக்கு முன் இந்தப் பகுதியில் 5 சிங்களக் குடும்பங்களே வாழ்ந்து வந்துள்ளனர். அவர்கள் போரால் இடம்பெயர்ந்து கடவத்தை பகுதியில் குடியேறியுள்ளனர். அவர்களுக்கு அரசால் காணி, வீடு என்பன வழங்கப்பட்டன. அவர்கள் இடம்பெ யர்ந்து வாழ்ந்ததற்காக பல வருடங்கள் உலர் உணவு நிவாரணமும் வழங்கப்பட்டது.

எனினும் புனானைப் பகுதியில் இரா ணுவத்தினரும், பௌத்த பிக்குவும் இணைந்து வேறு மாவட்டத்தை சேர்ந்த 39 சிங்களக் குடும்பங்களை தற்போது அத்துமீறி இங்கு குடியேறியுள்ளனர்.

அவர்களை இந்தப் பகுதியில் இருந்து வெளியேற்று வதற்கு பொறுப்பு வாய்ந்த அதிகாரி என்ற வகையில் நடவ டிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ் மக்கள் தங்க ளது பூர்வீக வாழிட மான புனானையில் குடியேறுவதற்கு முற்படுகின்றனர். அவர்களுக்கு மீள் குடியேற்ற அமைச்சு மூலம் உதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் இந்த மக்களின் காணி களில் இரணுவ முகாம் இருப்பதால் மக்கள் குடியேற முடியாது திண்டாடுகின்றனர்.

எனவே தமிழ் மக்கள் எவ்வித தங்கு தடையுமின்றி மீள்குடியேற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பௌத்த பிக்கு புனானையிலுள்ள விநாயகர் ஆலயத்தின் காணியை அபகரித்துள்ளார். அந்தக் காணியை யும் மீட்டுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (ச)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

திருமதி நல்லம்மா சுந்தரமூர்த்தி



தோற்றம்
17.04.1937

மறைவு
15.01.2014

கடந்த 15.01.2014 சிவபதமடைந்த எங்கள் அன்புத் தாயாரின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று (18.02.2014) செவ்வாய்க்கிழமை மருதடி காரைநகரில் உள்ள அவரது மகனின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

மருதடி,
காரைநகர்.

பிள்ளைகள்,
சகோதரிகள்.

(44739) (45.6.3)

## மீட்கப்பட்டது கைக்குண்டு



கோப்புப்படம்

ஏறாவூர்,பெப்.18

ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள ஏறாவூர் நகரில் கைக்குண்டு கண்டு பிடிக் கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கைக்குண்டு ஞாயிற்றுக்கிழமை மீட்கப்பட்டது.

நீதிபதியின் உத்தரவையடுத்து மட்டக்களப்பிலுள்ள இராணுவத்தின் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினர் வரவழைக்கப் பட்டு இந்தக் கைக்குண்டு செயலிழக்கச் செய்யப்படும் என்று பொலிஸார் கூறினர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ச)

## கண்ணீர் அஞ்சலி

கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் கிராம அபிவிருத்தி அலுவலக் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி வதனி ஆனந்தகிருஷ்ணன் அவர்களின்

அன்புத் தந்தை க. இராமநாதன்

அவர்கள் 13.02.2014 இறைபதம் அடைந்தமையையிட்டு அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், உறுப்பினர்கள்,
மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலக ஊழியர் நலன்புரி சங்கம்
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம். (44849)(7.6.3)

## முதலாம் ஆண்டு நினைவலைகளில்



வசாவிளானைப் பிறப்பிடமாகக் கொண்ட
திருமதி
அன்னம்மா சூசைப்பிள்ளை

மலர்வு
20.09.1930

உதிர்வு
18.02.2013

பாசமாய் நேசமாய் எம்மை
அரவணைத்த அன்புத் தெய்வமே!!
நீங்கள் எம்மை விட்டு விண்ணுலகம்
சென்று ஓராண்டு ஆனாலும்
உங்களை மறக்க முடியவில்லை
நாள் தோறும் விழிகள் நனைகின்றன
உங்கள் நினைவால்....
உங்கள் ஆத்மாசாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்:
குணம் (மகன்)
குடும்பத்தினர்.

இல.52, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம். T.P. 077 5713475

# அனுமதியற்ற அலுவலகங்களை உடன் அகற்றுமாறு உத்தரவு

## தேர்தல்கள் ஆணையாளர் அறிவிப்பு

கொழும்பு,பெப்.18
மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ள கட்சிகள் மற்றும் சுயேச்சைகளின் உத்தியோகபூர்வமற்ற தேர்தல் அலுவலகங்களை அகற்றுமாறு தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய பொலிஸ் திணைக்களத்துக்கு உத்தியோகபூர்வ அறிவிப்பை விடுத்துள்ளார்.


மஹிந்த தேசப்பிரிய

அதற்கமைய தேர்தல் நடைபெறவுள்ள மேல் மற்றும் தென் மாகாணங்களில் உத்தியோகபூர்வ ஆவணங்களில்லாது இயங்கும் தேர்தல் அலுவலகங்கள் பொலிஸாரினால் கலைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதி தேர்தல்கள் ஆணையாளர் எம். மொஹமட் கூறினார்.

தேர்தல் நடைபெறும் மாவட்டங்களில் வாக்குச்சாவடிகள் அமையும் அதிகார எல்லைக்குள் தேர்தல் பரப்புரை அலுவலகங்களை அமைப்பதற்கான ஏற்பாடுகள் மாகாண சபை சட்டத்துக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அதற்கிணங்க வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கைக்கமைய தேர்தல் பரப்புரை அலுவலகங்களை ஒவ்வொரு கட்சியும் சுயேச்சைகளும் அமைக்க முடியும்.

இவ்வாறு நிறுவப்படும் தேர்தல் பரப்புரை அலுவலகங்களில் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி மற்றும் குறித்த பிரதேசத்துக்குப் பொறுப்பான பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் கையொப்பமிடப்பட்ட ஆவணம் உடன் வைக்கப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு இல்லாத அலுவலகம் உத்தியோகப்பூர்வமற்ற அல்லது அனுமதிக்கப்படாத அலுவலகமாகவே கருதப்படும் என்று அவர் கூறினார். (ச)

# தமிழில் கடமையாற்ற நடவடிக்கை எடுங்கள்

## ஆசிரியர் சேவை ஒன்றியத்தின் செயலர் வேண்டுகோள்

கொழும்பு,பெப்.18
தமிழ்மொழி மூல ஆசிரியர்கள் தமது தாய்மொழியில் கடமையாற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்று ஆசிரியர் சேவை ஒன்றியத்தின் செயலர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ், முஸ்லிம் ஆசிரியர்கள் உத்தியோகபூர்வ கருமங்களை தமிழ் மொழியில் ஆற்றுவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும்.



மஹிந்த ஜயசிங்க

அதிகளவான உத்தியோக பூர்வ ஆவணங்கள் சிங்கள மொழியில் மட்டுமே காணப்படுகின்றன. அதனால், தமிழ் மற்றும் முஸ்லிம் ஆசிரியர்கள் உத்தியோகபூர்வ விடயங்களை மேற்கொள்வதில் சிக்கல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

விடுமுறைவிண்ணப்பம்தொடர்பான ஆவணம் ஆங்கில மொழியில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

**அதிகளவான உத்தியோக பூர்வ ஆவணங்கள் சிங்கள மொழியில் மட்டுமே காணப்படுகின்றன.**

இதனை தமிழ், முஸ்லிம் ஆசிரியர்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகவே கருத வேண்டியுள்ளது-என்றார். (ச)



கொழும்பு, ஹுணுபிட்டி கங்காராம விஹாரையின் வருடாந்த நவம் பெரஹர இடம்பெற்றது. பெரஹர வீதிவலம் வருவதற்கு முன்னர் ஜனாதிபதியின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ புனித சின்னத்தை யானையின் மீது உள்ள பேழையில் வைத்தார். பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவும் கலந்து கொண்டார். (ச)

# 21,800 போராளிகளுக்கு புனர்வாழ்வு

கொழும்பு,பெப்.18
21,800 முன்னாள் புலி உறுப்பினர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கப்பட்டுள்ளது என்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

மத்துகம பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

மதவழிபாட்டின் மூலம் கிடைக்கப்பெற்ற அனுபவங்களே புனர்வாழ்வு அளிக்க சக்தியை வழங்கியது என்று அவர் குறிப்பிட்டார். (ச)

# இணைய பாவனையில் அவதானம் வேண்டும்

## கூறுகிறது பொலிஸ் தலைமையகம்

பொதுமக்கள் இணையத்தினூடாக தமது தகவல்களை பகிர்வது தொடர்பில் அவதானமாக செயற்படவேண்டும் என்று பொலிஸ்தலைமையகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பெண்கள் இணையத்தில் தமது படங்களை பகிரும் போது மிகவும் கவனத்துடன் செயற்பட வேண்டும் என்று சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

பேஸ்புக் மூலம் எழும் சிக்கல்கள் தொடர்பில் கவனத்துடன் செயற்படுமாறு அவர் கேட்டுள்ளார். அதேவேளை, கடந்த காலங்களில் சமூக வலைத்தளமான பேஸ்புக் மூலம் இடம்பெறும் குற்றச்செயல்கள் தொடர்பில் அதிக முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்று இலங்கைக் கணினி அவசர அழைப்பு பிரிவு தெரிவித்துள்ளது. (ச)

# தொலைபேசி இலக்கம் மாற்றம்

கொழும்பு,பெப்.18
இராணுவ அதிகாரிகளின் தொலைபேசி இலக்கங்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

இராணுவத்தில் கடமையாற்றி வரும் சகல அதிகாரிகளினதும் தொலைபேசி இலக்கங்கள் இவ்வாறு மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

புதிய தொலைபேசி இலக்கங்கள் இராணுவ அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன என்று இராணுவப்பேச்சாளர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

# தேசத்துக்கு மகுடம் கண்காட்சி; நிர்மாணப் பணி இன்று பூர்த்தி

## 21 இல் ஆரம்பித்து வைப்பார் ஜனாதிபதி

கொழும்பு,பெப்.18
2014 தேசத்துக்கு மகுடம் தேசிய கண்காட்சி நிகழ்ச்சிகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. அதனை முன்னிட்டு இடம்பெறுகின்ற அனைத்து நிர்மாணப் பணிகளும் இன்று செவ்வாய்க்கிழமையுடன் நிறைவுபெறும் என்று தொலைத்தொடர்பு தொழில்நுட்பத் துறை அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

தேசத்துக்கு மகுடம் கண்காட்சிகள் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு ஜனாதிபதியால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படும். இந்தக் கண்காட்சியை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை மக்கள் பார்வையிட முடியும் என்று அவர் கூறினார்.

கண்காட்சிகளுக்காக நிர்மாணிக்கப்பட்டு ள்ள 60,000 கன அடி கட்டடத் தொகுதிகள் வடமேல் மாகாண மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு உதவியளிக்கும் என்று அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார்.

கண்காட்சியை கண்டுகளிக்கவரும் மக்களுக்கு தேவையான சகல வசதிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அவர் மேலும் கூறினார். (ச)

## வீடு விற்பனைக்கு

52, மாட்டீன் வீதியில் அமைந்துள்ள ஒரு பரப்புக் காணியுடன் 5 அறைகள், சமையலறை, பெரிய ஹோல், 2 மலசலகூடம் (கொமேட் வசதியுடன்) மற்றும் சகல வசதியும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. புகையிரத நிலையத்துக்கும் யாழ்.பிரதான வீதிக்கும் மத்தியில் அமைந்துள்ளது.
தொடர்பு :
இ.சௌந்தரநாயகம் - 021 222 6056
உருத்திரன் - 077 193 6594
(44846)(7.6.3)

## செய்தியாளர் தேவை

கொழும்பில் முன்னணியிலுள்ள செய்தித்தாள் ஒன்று யாழ்ப்பாணத்தில் நிருபர்களைத் தேடுகின்றது. சிறந்த மனுதாரர் அன்றாட நிகழ்ச்சிகளை நன்கு அறிந்தவராகவும் அரசியல் அறிவுடையவராகவும் குறுகிய அவகாசத்தில் வட மாகாணத்திலிருந்து செய்திகளையும் சிறப்புக் கட்டுரைகளையும் கண்டுபிடித்து அனுப்பி வைக்கக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும். ஆணாயினும், பெண்ணாயினும் ஆங்கிலத்தில் எழுதுவதிலும் பத்திரிகையில் வெளியிடத்தக்க நிழற்படங்களை எடுக்கக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும். அவர் ஏற்கனவே அனுபவமுள்ளவராயிருத்தல் அனுகூலமானதாகும்.
உங்கள் மனுவை சுயவிவரத்துடன் C/O P.O Box 644 கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பவும். முடிவு திகதி பெப்ரவரி 28 ஆகும். கடித உறையின் இடது கைமேல் மூலையில் யாழ் நிருபர் எனக் குறிப்பிடவும்.
(க/12088)(7.6.3)

## வீடு வாடகைக்கு விடப்படும்

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை, வளன்புரம் சுவாமியார் ஒழுங்கையில் நல்ல நிலையில் உள்ள அழகிய பெரிய வெறும் வீடு. ஐந்து படுக்கை அறைகளுடனும் இணைந்த குளியலறையுடனும், காற்றாடிகளுடனும், பிரயோசனங்களுடனும் வாடகைக்கு உண்டு. நிறுவனங்களுக்கும் உகந்தது.
தொடர்பு: 077 695 3776




அருள்மிகு ஸ்ரீ நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வர சுவாமி திருக்கோயில்
ஐந்தாம் திருவிழா – இன்று (18.02.2014) செவ்வாய்க்கிழமை
"சிறந்த உற்சவங்களாய் கீரிமலையில் மாசியிலே
சிவாயநம நமசிவாய ஓதியே வழிபாடியற்றிடவே
சிவமயமாய் சீர் பெற்றிட ஐம்மூன்று தினங்களில்
சிவனார்க்குரிய சிவராத்திரியும் இணைந்திடும் இறுதியில்"
அனுசரணை:
ஐந்தாம் திருவிழா உபயகாரர்களும்
கீரிமலை நகுலேஸ்வர ஆதீனகர்த்தாவும்.
க/12101)(2-6-3)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## காணாமற் போனவர்கள் குறித்து அச்சமின்றி உயரட்டும் சாட்சியம்

அடுத்த மாதம் மூன்றாம் திகதி ஜெனீவாவில் ஆரம்பமாகும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், இலங்கை தொடர்பான பிரேரணைகள், மார்ச் இருபத்திநான்கில் சமர்ப்பிக்கப்பட உள்ளன.

எனினும் அதற்கு முன்னதாக, பிரேரணைக்குக் கட்டியம் கூறும் விதத்தில், மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளையின், இருபது பக்கக் கேள்விக் கொத்து இலங்கை அரசின் கவனத்தை மிகப் பெரிய அளவில் ஈர்த்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. அந்தக் கேள்விக் கொத்துக்கான பதில்களை வெளி விவகார அமைச்சு அனுப்பி விட்டது என்பது பிந்திய தகவல்.

இலங்கை அரசுக்கு அனுப்பப்பட்ட அறிக்கையில்- பாதிப்புக்கு ஆளான வர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதும் முக்கியம் இடம் பெறுகிறது.

இலங்கையில் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கு, பாதிக்கப்பட்டோரையும், சாட்சியமளிப் போரையும் பாதுகாக்கும் நம்பகத்தன்மையுள்ள பொறிமுறை குறித்து சர்வதேச மனித உரிமை அமைப்புகள் சமீப காலமாக வலியுறுத்தி வருகின்றன. ஆனால் அரசினால் இந்த விவகாரம் இழுத்தடிக்கப்பட்டே வந்தது, தொடர்கிறது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் கடந்த ஓகஸ்ட்டில் இலங்கைக்குப் பயணம் செய்தபோது பாதிக்கப்பட்டோரையும், சாட்சிகளையும் பாதுகாப்பதன் அவசியம் குறித்து பிரதம நீதியரசர், சட்டமா அதிபர், நீதி அமைச்சர் ஆகியோருடனான சந்திப்பில் வலியுறுத்தியிருந்தார்.

அது தொடர்பான சட்ட வரைவு தயாரிப்பதற்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்கு ஐ.நா. மனித உரிமைகள் பேரவை தயாராக இருப்பதாகவும் கூறினார். நவிப்பிள்ளை வந்துபோன கையோடு அரசு இது தொடர்பான நடவடிக்கையை எடுத்தது.

குறிப்பிட்ட சட்டமூலம் தொடர்பான இறுதிச் சட்ட வரைவு நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமால் பிரேரிக்கப்பட்டு, கடந்த ஒக்ரோபர் மாதம் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றது. தேசிய அதிகார சபை ஒன்றை அமைப்பதற்கு சட்டமூலம் வழிவகுக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் குறிப்பிட்ட சட்டமூலம் நாடாளு மன்றத்தின் அங்கீகாரத்துக்காக இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை!

அதனால் பாதிக்கப்பட்டோரும் சாட்சியமளிப்போரும் பயமுறுத் தப்படுவது நாட்டில் தொடருகிறது. பாதிக்கப்பட்டோரையும் சாட்சியமளிப் போரையும் பாதுகாக்கும் சட்டமூலம் நிறைவேற்றப்படுமானால் ஓரளவிலேனும் இத்தகைய சம்பவங்களை கட்டுப்படுத்த முடியும்.

மெக்ஸ்வெல் பரணகம தலைமையிலான காணாமற் போனோர் தொடர்பான ஆணைக்குழு யாழ்ப்பாணத்தில் தனது இரண்டாவது கட்ட விசாரணையைத் தற்பொழுது நடத்தி வருவதால் இந்த விவகாரம் மீண்டும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இந்த ஆணைக்குழு முன்னிலையில், பயம் காரண மாகப் பலர் சாட்சியமளிக்கவில்லை. சிலர் இரகசியமாகச் சாட்சிய மளிக்க விண்ணப்பித்து அதற்கான அனுமதியையும் பெற்றுள் ளனர். சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற விசாரணை யில் சாட்சியமளித்த பெண் ஒருவர் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் சிலர் தன்னை அச்சுறுத்தினர் என்று முறைப்பட்டிருந் தார்.

"எங்களிடம் கதைத்ததை வெளியில் சொல்லவேண்டாம். எங்களுக்கு சமர்ப்பித்த கடிதத்தின் பிரதியை வெளியில் கொடுக்கவேண்டாம். ஊடகங்களுக்குத் தெரியப்படுத்த வேண் டாம்" என்றால் அதுவும் ஓர் அச்சுறுத்தல்தான்.

இத்தகைய மறைக்கும் முயற்சிகளை ஊன்றிக் கருத்தில் கொண்டே, நியூயோர்க்கைத் தளமாகக் கொண்டியங்கும் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தினர், ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் ஆகியோர் பாதிக்கப்பட்டோரையும், சாட்சிய மளிப்போரையும் பாதுகாப்பதற்கு சட்டரீதியான நடவடிக்கையை எடுக்குமாறு இலங்கை அரசைக் கோரி வருகின்றனர்.

நல்லிணக்க ஆணைக்குழுமுன் சாட்சியமளித்தவர்களில் எவரும் தாம் பயமுறுத்தப்பட்டதாக முறைப்பாடு செய்யவில்லை என்பதால் தற்போதைய விசாரணையில் சாட்சியமளிப்போருக்குப் பாதுகாப்பு உண்டு என்பதற்கு உத்தரவாதம் கிடையாது.

இலங்கை மீதான போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பாக சர்வதேச விசாரணையை நவநீதம்பிள்ளை கோருவதால், தற்பொழுது நடத்தப்பட்டுவரும் காணாமற்போனோர் தொடர்பான விசாரணையில் அளிக்கப்படும் சாட்சியங்கள் மிக முக்கிய மானவை. சர்வதேசத்தின் கவனத்தையும் ஈர்த்து வருகின்றன.

பாதிக்கப்பட்டோர், சாட்சியமளிப்போர் அச்சுறுத்தப்படுவது வடக்கில் மட்டுமல்ல தெற்கிலும் இடம்பெற்று வருகிறது. பிரிட்டிஷ் உல்லாசப் பயணி குராம் ஷேய்க் கொலை தொடர்பில் சாட்சிகள் அச்சுறுத்தப்பட்டதன் காரணத்தாலேயே வழக்கு கொழும்பு நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது. சந்தேக நபர்கள் சாட்சிகளைப் பயமுறுத்துகிறார்கள் என்று குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் முறைப்பாடு செய்திருந்தனர்.

போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக, நம்பகத்தன்மையுள்ள விசார ணையை மனித உரிமை ஆர்வலர்கள் வலியுறுத்தி வருகின்றனர். பாதிப்புற்றோர் மற்றும் சாட்சிகள் அச்சமின்றி சாட்சியமளிக்கும் சூழ்நிலை இருந்தால் மட்டுமே உண்மையை வெளியில் கொண்டுவர முடியும். இல்லையேல் மூடுமந்திரம் என்ற குழிக்குள் புதைந்து, குற்றவாளிகள் மட்டுமன்றி மனித உரிமைகளும் கடாசப்பட்டு விடும். அந்த நிலை தேவைதானா?

# மனதளவிலாவது மாற்றம் வேண்டும்

சேரலாதன்

ஜெனீவாவில் அமெரிக்காவினால் சமர்ப்பிக்கப் படவிருக்கும் பிரேரணையிலிருந்து தப்பிப்பிழைப்பதற்கான சகல உபா யங்களிலும் இலங்கை அரசு தீவிர மாக ஈடுபட்டுள்ளது. ஜனாதிபதி தொடக்கம், அமைச்சர்கள், அதிகாரிகள் எனப் பலரும் ஓய்வு உறக்கமின்றி இதற்கான பணிகளில் ஈடுபட்டுக்கொண் டிருப்பதாகத் தினமும் தகவல்கள் கசிந்தவாறு உள்ளன.

சுருக்கமாகக் கூறினால் வாழ்வா சாவா என்றதொரு நிலையில்தான் அரசு காணப்படுகின்றது.

புலிகளுக்கு எதிரான போரின்போது இலங்கை அரசுக்குத் தோள்கொடுத்து உறுதுணையாக நின்ற நாடுகளே இப்போது இலங்கை அரசை நெருக்கிக் கொண்டிருக்கின்றன. இதனை அரசு ஒருபோதுமே எதிர்பார்க்கவில்லை. உலகிலே பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்த முதல் நாடு என்ற பெரு மையை நிலை நாட்டிய தம்மை இன்னும் பலவருடங்களுக்கு ஏனைய நாடுகள் பாராட்டிக் கொண்டிருக்கப் போகின்றன என்ற கனவுகளில் மூழ்கி யிருந்த இலங்கை அரசுத் தலைவர்கள் இப்போது விழி பிதுங்கிய நிலையில் உள்ளனர்.

### மனிதாபிமானத்துக்கான போரால் கண்ணீர் வடிக்கும் உறவுகள்

விடுதலைப் புலிகள் தமது இனத்தின் உரிமைகளை மீட்டெடுப்பதற்குப் போராடவில்லை, அவர்கள் மிகக் கொடிய பயங்கரவாதிகள், அவர்களைக் கூண்டோடு ஒழிப்பதற்கு அனை வரும் உதவ வேண்டும் என்ற இலங் கையின் வேண்டுகோள் ஏற்கப்பட்ட தால் அமெரிக்கா உட்படப் பல நாடுகள் இறுதிப் போரின்போது தேவையான உதவிகளை வழங்கின. புலிகளும் முற்றாக ஒழிக்கப்பட்டனர். ஆனால் பல்லாயிரக் கணக்கான அப்பாவி மக்களும் அழிக்கப்பட்டனர் என்பது மூடி மறைக்கப்பட்டது. இறுதிப் போரின் போது நடத்தப்பட்ட கொடுமையான சம்பவங்கள் கூட நியாயப்படுத்தப் பட்டன. மக்களைப் புலிகளிடமிருந்து மீட்பதற்கான மனிதாபிமானப் போர் என்ற புனிதமான பெயரும் சூட்டி வைக்கப்பட்டது. புனிதம் என்பதற்கு அர்த்தம் புரிந்தால் இந்த நாடு சுடு காடாக மாறியிருக்க வேண்டிய தேவையே ஏற்பட்டிருக்க மாட்டாது.

போரின்போது இறந்தவர்களின் உறவுகள் உதிர்க்கும் கண்ணீர் ஒரு புறம் இருக்க காணாமற் போனவர் களின் கதறலும், கண்ணீரும் சமீப நாள்களாக கல்நெஞ்சத்தினரையும் உலுக்கி வருகின்றன. அதிலும் தனது நாட்டின் குடிமக்களை வலுக்கட் டாயமாகக் காணாமற் போகச் செய்த பெருமை இந்த நாட்டுக்கு மட்டுமே உள்ளது. அதிலும் அப்பாவிகள் பலர் இவ்வாறு காணாமற் போகச் செய்த மைக்கு அவர்கள் தமிழர்களாகப் பிறந்ததைவிட வேறொரு தவறும் இழைக்கவில்லை. இந்த நாட்டில் தமிழனாகப் பிறந்தால் இதுதான் நடக்கும் என்பதற்கு இதனை விட வேறொரு சிறந்த உதாரணத்தைக் கூற முடியாது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டம் அடுத்த மாதம் இடம்பெற வுள்ள நிலையில் காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. ஆனால் இந்த விசாரணைகளின் மூலமாக நியாயம் கிடைக்க வேண்டும் என்பதே பாதிக்கப்பட்டவர்களின் நம்பிக்கையாக வும், எதிர்பார்ப்பாகவும் உள்ளது.

### ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் ஆதரவு திரட்டும் இலங்கை

அடுத்த மாதம் இடம்பெறவிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்காவினால் கொண்டுவரப்பட விருக்கும் பிரேரணை ஏற்றுக் கொள்ளப்பட்டு அது தீர்மானமாக நிறைவேற்றப்பட்டாலும் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி கிடைப்பது என்ப தற்கான நம்பிக்கைக் கீற்று எங்கோ வெகு தொலைவில்தான் தெரிகின்றது. அந்த ஒளி மேலும் பிரகாசம் அடை வதற்கு பல காலம் பிடிக்கலாம் அல்லது உடனடியாகவே அதன் பிரகாசத்தைக் காணலாம் என்பதெல்லாம் இப் போதைக்கு எதிர்வு கூற முடியாத புதிர்களாகவே காணப்படுகின்றன.

ஐ.நா.மனித உரிமைகள் சபை என்பது ஒரு நீதிமன்றம் அல்ல என்பதை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். அதில் அங்கம் வகிக்கும் நாடுகளின் வாக்குகளைப் பொறுத்தே எதுவும்



**ஏற்கெனவே ரஷ்யா, சீனா, பாகிஸ்தான், கியூபா ஆகிய நாடுகள் வெளிப்படையாகவே இலங்கைக்கான தமது ஆதரவைத் தெரிவித்துள்ளன. இதில் ரஷ்யா, சீனா, கியூபா என்பன கம்யூனிச சித்தாந்தத்தை முழுமையாகக் கடைப்பிடித்த நாடுகள் என்பதால் இன்றும் அமெரிக்காவை தமது எதிரி நாடாகவே பார்க்கின்றன.**

நடக்கும். வாக்குப் பலத்தால் குற்ற வாளிகள் விடுவிக்கப்படலாம் அல்லது குற்றம் இழைக்காதவர்கள் தண்டிக்கப் படலாம். அந்தச் சபையில் அங்கம் வகிக் கும் நாடுகளின் கைகளிலேயே இது உள் ளது. அதிலும் ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடு கள் அதிக வாக்குகளைச் செலுத்தும் உரி மையைக் கொண்டிருப்பதால் இலங்கை அவற்றின் ஆதரவைப் பெற்றுக் கொள் வதில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது.

ஏற்கெனவே ரஷ்யா, சீனா, பாகிஸ்தான், கியூபா ஆகிய நாடுகள் வெளிப்படை யாகவே இலங்கைக்கான தமது ஆதர வைத் தெரிவித்துள்ளன. இதில் ரஷ்யா, சீனா, கியூபா என்பன கம்யூனிச சித் தாந்தத்தை முழுமையாகக் கடைப் பிடித்த நாடுகள் என்பதால் இன்றும் அமெரிக் காவைத் தமது எதிரி நாடாகவே பார்க்கின்றன. ஆனால் பாகிஸ்தானின் நிலையில் இறுதி நேரத்தில் மாற்றங்கள் ஏற்பட்டாலும் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமே இல்லை. ஏனென்றால் பயங்கரவாதம் உற்பத்தி செய்யப்படும் நாடு என்ற பெருமையைப் பெற்றுள்ள அந்த நாடு அதனை ஒழிப்பதாகக் கூறி ஆண்டு தோறும் அமெரிக்காவிடமிருந்து பெருமளவு நிதியைப் பெற்றுப் பயன் பெற்று வருகின்றது. அந்த நாடு அமெரிக் காவுக்குத் தலையையும், சீனாவுக்கு வாலையும் காட்டும் விலாங்குத் தன மான செயற்பாட்டில் ஈடுபட்டாலும் அமெரிக் காவின் கண்காணிப்பு எப்போதுமே அதன் மீது உள்ளது. இந்த நிலையில் இலங்கையை விட அமெரிக்கா அந்த நாட்டுக்கு முக்கியத்துவம் பெறுவதை மறப்பதற்கில்லை.

எது எப்படியோ அமெரிக்கத் தீர்மானம் நிறைவேற்றப்படுமாயின் அதன் விளைவுகள் கடந்த காலங்களை விடக் கடுமையாக இருக்கும் என்பதில் ஐயத் துக்கு இடம் இல்லை.

### அரிய சந்தர்ப்பம்

தமிழர்களும் இந்த நாட்டுக் குடிமக்கள் என்ற வகையில் அரசுக்கு ஏற்படும் பாதகமான விளைவுகளால் அவர்க ளுக்கும் எதிர்மறையான பாதிப்புக்கள் ஏற்படும் என்பதை மறுக்க முடியாது. ஏற்கெனவே பாதிக்கப்பட்ட நிலையில் உள்ள அவர்கள் இதனைத் தாங்கிக் கொள்ள முடியுமா என்பதும் சந்தேகமே. மேலும் தீர்மானம் கொண்டுவரப் படுவதற்கு முன்னமே தமிழர்களை வறுத்தெடுத்துக் கொண்டிருக்கும் பெரும்பான்மை இனவாத அரசியல் வாதிகள் அது நிறைவேற்றப்படுமாயின் எதனையும் மேற்கொள்ளத் துணிவார் கள் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். இந்த நிலையில் பெரும்பான் மையின மக்கள் உண்மை நிலையை உணர்ந்து செயற்பட வேண்டியதொரு கட்டாய நிலை உருவாகியுள்ளது. இந்த அரிய சந்தர்ப்பத்தை அவர்கள் தவற விடுவார்களாயின் மீண்டுமொருமுறை இது கிடைக்கவே கிடைக்காது.


போரில் இறந்தவர்கள், பாதிக்கப்பட்டவர் கள் மற்றும் காணாமற் போன உறவுக ளின் கண்களிலிருந்து வடிந்து கொண்டி ருக்கும் கண்ணீரின் பின்னால் மறைந்தி ருக்கும் கொடிய சோகத்தை அவர்கள் இனியாவது புரிந்து கொள்ள வேண்டும். தமிழர்களும் எமது சகோதரர்களே. எமக்கு இருக்கும் உரிமைகள் யாவும் அவர்களுக்கும் உண்டு. கடந்த காலங் களில் அவர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட கொடுமைகளுக்கு நாமும் ஏதோ ஒரு வகையில் காரணமாக இருந்துள்ளோம் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இவையெல்லாம் உண்மையாக நிகழு மாயின் இந்த நாட்டின் உள்விவகாரங் களில் அந்நியரின் தலையீடு என்ற பேச்சுக்கே இடமிருக்காது. ஒற்றுமையும், சகோதரத்துவமும் நிலைபெறும் என்பதில் மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை.

# காத்திருக்கிறது ஓர் அழகான காதல்

# இரும்புச் சிறைக்குள் இருந்து வரும்வரை

சோபனா



காதல் அனுபவங்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக இருக்கும். இந்தக் கணினி உலகில் காதல் பரிமாற்றங்கள் தாராளமாக நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் அந்தக்காலத்தைப் போல் கடிதத்தில் அன்பைப் பரிமாறிக்கொள்ளும் விதம் ஒரு தனிச் சுகம். போரின் விளைவால் பிரிவைச்சந்தித்துள்ள காதலர்கள் இப்படி அன்பைப் பரிமாறிக்கொள்கிறார்கள்.

**சிறைக்கு ஒரு கடிதம்**

அன்புள்ள சதீஸுக்கு உங்களுடைய மாலா எழுதிக்கொள்வது. நான் இங்கு உங்கள் நினைவுடன் சுகமாக இருக்கிறேன். நீங்கள் அங்கு சுகமாக இருக்கிறீர்களா? உங்கள் சுகத்துக்காக எங்களுடைய பூவரசு மரத்துப் பிள்ளையாரிடம் தினமும் வேண்டுகிறேன். இந்தக்கடிதத்தில் எதை எழுதுவது என்றே தெரியவில்லை. அந்தளவுக்கு எங்களுடைய ஞாபகங்களை வார்த்தைகளால் எழுதிட முடியாது. உங்களுக்கு நினைவிருக்கிறதா ? என்னைப்பார்ப்பதற்காக எத்தனை தடவை களவாக வந்திருப்பீர்கள். அதனால் நீங்கள் வாங்கிக்கொண்ட தண்டனைகளையும் நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். உங்கட முகாமுக்குப் பொறுப்பா இருந்த பாலண்ணா சரியான கண்டிப்பானவர். அவருக்கு காதல் என்றாலே பிடிக்காது. இயக்கத்தில இருந்தா அதையெல்லாம் மறந்து தான் இருக்க வேணும். எங்கட தேசத்தின்ர சிந்தனைமட்டும் தான் எங்களுக்கு இருக்க வேணும் என்று அடிக்கடி சொல்லுவார் என்று என்னிடம் சொல்லியிருக்கிறீர்கள் .அந்த நிலையிலையும் நீங்கள் என்னைப் பார்க்காம இருந்ததில்லை. எப்படியாவது சாக்குப் போக்குச் சொல்லி ஒரு நாளைக்கு ஒரு தடவை என்றாலும் வந்திடுவீங்கள். எனக்கும் உங்களப் பாக்காட்டா நிம்மதி இருக்காது. எங்கையாவது சண்டைக்கு அனுப்பிப் போட்டினமோ என்று கவலைப்பட்டுக் கொண்டு இருப்பன். எங்கட சனத்துக்காக நீங்கள் போராடப் போறீங்கள் என்று மனசு சொன்னாலும் காதல் கொண்ட மனசுக்கு அதெல்லாம் புரியாமல் போயிற்று. இது என்ர சுயநலமாக இருந்தாலும், எனக்கு ஆசைகளும் அன்பும் நிறைய இருந்தது. அது தான் அப்ப அப்படி நடந்து கொண்டன். இப்ப அதையெல்லாம் நினைக்கும் போது இப்பவே உங்களைப் பார்க்க வேணும் போல இருக்கு ஆனால் என்ன செய்ய? உங்கட நிலைமை இப்படியா இருக்கு. என்னாலும் அடிக்கடி உங்களை வந்து பார்க்க முடியாமல் உள்ளது. நீங்கள் எதைப்பற்றியும் யோசிக்காம சாப்பிடுங்கோ. உங்கட மாலா எத்தின வருசம் கடந்தாலும் உங்களுக்காக காத்திருப்பன். உங்களுக்கு அங்க நேரத்துக்கு சாப்பாடு தருவார்களா? இப்பவும் கிச்சின் வேலை செய்யிறனீங்களா? நீங்கள் இயக்கத்தில இருக்கும் போது கூட இப்படி வேலை செய்யிறது இல்லை என்று சொல்லுவீங்கள். என்ன தான் செய்யிறது. எங்கட நிலைமை அப்படி இருக்கு. நீங்கள் மனம் தளராம யோசிக்காம இருங்கோ . நீங்கள் எனக்கு கோயில் திருவிழாவிலை வாங்கித் தந்த பொம்மைய நான் இடம்பெயர்ந்து போகும் போது கூடக் கொண்டு போனன். அந்த நந்திக்கடலால போகேக்க அதை அங்க போட்டுட்டு போட்டன். இப்ப உங்கட ஞாபமாக என்னட்ட நீங்கள் நினைவாகக் கொடுத்தது என்று எதுவும் இல்லை. ஆனால் நீங்கள் தந்த ஞாபகங்கள் எல்லாம் அப்படியே இருக்கு. நான் தனிய இருக்கும்போது ஒவ்வொன்றையும் நினைத்துப் பார்ப்பன். இப்ப அது தான் எனக்குக் கொஞ்சம் ஆறுதலாக இருக்கு. முதல் முதல் என்னட்ட நீங்கள் என்னை விரும்பிறியா என்று கேட்ட போது எனக்கு எவ்வளவு பயமா இருந்தது. வீட்டில அண்ணாட பயத்திலையே நான் இல்லை என்று தான் சொல்ல நினைத்தன். ஆனா என்னில நீங்க காட்டின அன்பு தான் என்னை மாத்தீற்று. இப்ப சந்தோசப்படுறன். வேறு என்ன எழுதுவது. உங்கள் கடிதம் கண்டவுடன் பதில் அனுப்புகிறேன். நீங்களும் விரைவாகப் பதில் அனுப்புங்கள்.


இப்படிக்கு
*என்றும் உங்கள் நினைவுடன்*
*உங்கள் மாலா*

**சிறையில் இருந்து ஒரு கடிதம்**

அன்புள்ள மாலாவுக்கு சதீஸ் எழுதிக் கொள்வது நான் இங்கு ஏதோ உமது நினைவுகளுடன் சுகமாக இருக்கிறேன். உமது கடிதம் நேற்றுத் தான் எனக்குக் கிடைத்தது. எனக்கு உடன் பதில் எழுத முடிந்தாலும் இந்தக் கடிதம் உமக்கு எப்போது கிடைக்கும் என்று எனக்குத் தெரியாது. உமது கடிதம் பார்த்து மிகவும் சந்தோசம். எல்லோரும் எங்கள வெறுத்திடுவினம் என்று பயத்துடன் இருந்தன். இப்ப தான் எனக்காக நீர் இருப்பது சந்தோசத்தை தந்துள்ளது. உமது அன்பை பக்கத்தில் இருக்கும் போது என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இப்போது அதைப் புரிந்து கொள்ள முடிந்துள்ளது. நீர் ஒவ்வொரு நினைவுகளையும் எனக்கு எழுதி ஞாபகப்படுத்தும் போது நான் இப்போது ஊரில் இருந்தால் எவ்வளவு சந்தோசமாக இருந்திருக்கும் என்பது புரிகிறது. என்ன செய்ய, எங்கட நிலைமை அப்படி இருக்கு. காலம் தான் அதை முடிவு பண்ண வேணும். எங்களுக்கு என்ன நடக்கப் போகிறதோ, அதைச் சொல்லி நான் உம்மை கவலைப்படுத்த விரும்பவில்லை. நான் உம்மை மனதாரக் காதலித்தேன். இப்போதும் அதே நினைவுகளுடன் தான் இருக்கிறேன். நான் இங்கு தனிமையாக இருந்தாலும் நினைவுகள் தான் எனக்குத் துணையாக இருக்கின்றன. நான் இயக்கத்தில இருக்கும்போது தான் உம்மை விரும்பினனான். மற்றப் பிள்ளையளைப் போல இல்லாம நீர் இப்பவும் என்னை விரும்புறது எனக்குச் சந்தோசத்தைத் தருது. இப்ப தொலைபேசி அது இது என்று காதலிக்கும் போது கடிதத்தில எங்கட காதல வளர்க்கிறது மனசுக்கு தனிச் சந்தோசமா இருக்கு. ஒவ்வொரு கிழமையும் உம்மட கடிதம் எப்பவரும் என்று தான் எதிர் பார்த்துக் கொண்டிருப்பன். அதுக்குப்பதில் எழுதும் போதும் சந்தோசம் தான். உமக்கு நினைவிருக்கிறதா ஒரு நாள் நான் சண்டைக்குப் போகப் போறன் என்று உம்மிடம் சொல்ல வந்த போது நீர் எப்படி அழுதீர். றோட்டில போனவையெல்லாம் எங்கள ஒரு மாதிரிப் பார்த்துக் கொண்டுபோனவை. உமக்கு ஆறுதல் சொல்ல முடியாம நான் மௌனமா நின்றன். இடம் பெயர்ந்து போய் நீங்கள் எங்க இருக்கிறீங்கள் என்டு நான் தேடாத இடம் இல்லை. சில நேரம் அவங்கட குண்டு உம்மட உயிரையும் கொண்டு போயிருக்கும், இல்லாட்டா நீர் வேற யாரும் பெடியனைக் கலியாணம் செய்திருப்பீர் என்று தான் நான் நினைச்சன். பிறகு நீர் உங்கட மாமாவைப் பார்க்க வந்தபோது தான் என்னை இந்த முகாமில சந்திச்சீர். அப்ப கூட நீர் தான் என்று என்னால நம்ப முடியேல்ல . இப்பவும் என்னில அன்பா இருப்பதற்கு நன்றி. நான் உம்மை எப்போதும் மறக்கமாட்டன். நீர் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். எல்லாத்துக்கும் விடிவு கிடைக்கும். இனி என்ன நடக்கப் போகுது என்று கடவுள் தான் முடிவு செய்ய வேணும்.

*இப்படிக்கு*
*பிரியமுடன் சதீஸ்*

---



# கலைகளும் சமநிலை ஆளுமையும்

அரியாலையூர்
செ.செல்வதாஸன்

படைப்பாற்றலிலும், மூளை விருத்தியிலும் கலைகள் தாக்கம் செலுத்துகின்றன. ஒருவன் பயிர்களிடையே ஒரு களை ஆக அன்றி, மனிதர்களிடையே ஒரு பயனுறுதி மிக்க மனித வளமாக வாழ்வதற்குக் கலைகள் உதவுகின்றன.

பிள்ளை ஒன்று எழுந்தமானமாகக் கிறுக்கும் நிலையிலிருந்து மூன்று வயதளவில், சிந்தனை செயலொழுங்கில் உட்பிரவேசிக்கின்றது. ஒரு வட்டத் தலையையும், அதனோடிணைந்ததாக இரண்டு நிலைக் குத்துக் கோடுகளாக இரண்டு கால்களையும் படைக்க - உருவாக்கப் பிள்ளை முயற்சிக்கின்றது. பின்பு அடுத்த படிகள் விருத்தியாகும். அவர்களது தொடர்ச்சியான தேடல்கள் புதிய எண்ணக் கருக்களையும், நிலையான மாற்றங்களையும் கொண்டுவரத் துணை நிற்கின்றன.

இவ்வாறே பிள்ளை ஒன்று எட்டு வயதை எட்டும்போது உளபடவுருவாக்கத்தினைக் கட்டியெழுப்பலில் ஈடுபடுகின்றது.

இத்தகைய உள வளர்ச்சியில் கலைகள் பெரும் பங்காற்றுகின்றன என்பது கண்டறியப்பட்டுள்ளது. கிறுக்கலின் போதும் அவர்களது உடலும், உளமும் சேர்ந்து இயங்க மறுதலிக்கின்றன. ஆனால் நாளடைவில் உள்ளமும் உடலும் சேர்ந்து இயங்கத் தொடங்குகின்றன. அதில் இன்பம் காணுகின்றனர் . சோர்வின்றி கலை படைக்கின்றனர். சிறார்களின் சித்திரம், அவர்களுடைய சொந்த அனுபவங்களைப் பிரதிபலிக்கின்றன. இதே வேளை கலைகளினூடாக அவர்களது அனுபவங்களை விருத்தி செய்யலாம். அனுபவமென்பது ஒருவரின் தோளில் நின்று தொலைவைப் பார்ப்பது போலாகும். புதிய புதிய புலக் காட்சிகளை அவை தோற்றுவிக்கும். உண்மையில் கலைகளும் இத்தகைய புதிய புலக்காட்சிகளைத் தோற்றுவிக்கின்ற அனுபவங்களை வழங்குகின்றன என்றால் மிகையல்ல.

அனுபவங்களை - அதாவது கற்றல் அனுபவங்களை - விருத்தி செய்யத்தக்கதாக பிள்ளைகளது பாடசாலைக் கலைத்திட்டம் வடிவமைக்கப்படுகின்றது. கல்விக் கலைத் திட்டத்தையும், புறக்கிருத்திய கலைத்திட்டம் அல்லது இணைபாட விதான செயற்றிட்டங்களையும் கலைகளை உள்வாங்கி அமைத்துக் கொள்ளாத இடத்து, - பாடசாலைக் கல்வி ஊடாக - மனித வளத்தைக் கட்டியெழுப்ப முடியாது. இதனாலேயே பாட விதானத்தில் கலை சம்பந்தமான பாடங்கள் இணைக்கப்படுகின்றன. அத்துடன் இணைபாடவிதானச் செயற்பாடுகளின் போதும், கலை தொடர்பான விடயங்களில் கவனம்



செலுத்தப்படுகின்றது.

சமநிலை ஆளுமையுள்ள மனித வளத்தைக் கட்டியெழுப்புவதில் கலைகள் போன்ற வலிதான கருவிகள் வேறு எதுவும் இல்லை.

பட்டம் கட்டிப் பறக்க விடுவதில் ஆர்வம் காட்டும் பிள்ளை ஒன்றுக்கு அதற்கான ஒத்துதவிகளை வழங்குவதன் மூலம் அவன் சிறந்த கணிதவியலாளனாக வளர வழி சமைக்கலாம். மாறாக பட்டம் கட்டிப் பறக்க விடும் ஆர்வம் கொண்டிருக்கையில் அவனைக் கணிதப் பாடமோ, வேறேதும் பாடமோ கற்கும்படி வற்புறுத்துகையில் கணிதமும் ஏறாது; பட்டமும் ஏறாது.

---

# ஆமை வேக பயணத்துக்கு விடிவு வருமா...?

வாசகர் திருமுகம்

நவீன யுகத்தில் நவீன வாகனங்களில் போக்குவரத்து வசதிகள் மிகவும் இலகு வாகவும், விரைவாகவும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்தக் காலத்தில் தீவக மக்கள் தமது பய ணத்தை கடல் மார்க்கமாகவே மேற்கொண்டு வருகிறார்கள். இது இவ்வாறு இருக்க அனலை தீவில் இருந்து புறப்படும் பயணிகள் படகுகள் அன்று தொடக்கம் இன்று வரை கரணம் தப்பினால் சாவு என்ற நிலையில் பயணம் நடந்து கொண்டிருக்கின்றது. நடுக்கடலில் இயந்திர கோளாறு ஏற்படுவதும் மழை காலத்தில் நீர் உட்புகுதல் போன்ற பல கஷ்டங்களை படகில் பயணிக்கும் பயணிகளும் சரி, தொழில் நிமித்தம் இந்த தீவுக்குச் செல்லும் உத்தியோகத்தர்களும் சரி கடும் சிரமத்தின் மத்தியில் தமது பயணத்தை மேற்கொள்கின்றனர். இது இவ்வாறு இருக்க பயணிகள் படகின் வேகமானது ஆமை வேகத்தில் நடைபெறுகின்றது. அனலைதீவில் இருந்து இறங்கு துறையைச் சென்றடைய குறைந்தது 25 நிமிடங்கள் போதுமானதாக உள்ள போதும் இந்தப் படகுகள் 45 நிமிடங்களுக்கு மேலாகவும் தமது வேகத்தின் சாத னையை பயணிகளிடம் காட்டிக் கொள்கின்றன. தரைப் பயணத்தை விடவும் கடல் பயணம் அபாயகரமானது என்பது அனைவரும் அறிந்த விடயம். ஆனால் படகு உரிமையாளர்களோ ஏன் இவ்வாறு கடலிலே காவியம் படைக் கின்றார்கள் என்று புரியவில்லை. இதை யார்தான் கேட்பார்? பயணிகளிடம் பணம் அறவிடும் படகு உரிமையாளர்கள் படகினை சீர் செய்யலாம் அல்லவா? இது படகுக ளில் பயணிக்கும் பயணிகளின் வாக்கு மொழியாகவே உள்ளது. ஆனால் படகு உரிமையாளர் களோ அது பற்றி அக்கறை எடுக்கிறார்கள் இல்லை. இனியாவது படகின் வேகத்தை அதிகரித்து தம்மை நம்பி வரும் பயணிகளை எந்த இடைஞ்சலும், சிரமமும் இன்றி தமது சேவையை திருப்திகர மாகச் செய்வார்கள் ஆயின் அது அவர்கள் செய்யும் தொழி லையும் மேன்மையடையச் செய்யும் அல்லது படகுகளை கரையிலே நிறுத்தி படகுக ளுக்கும் ஓய்வு கொடுத்து நேரக்கட்டுப்பாட்டுடன் செலுத் தக் கூடிய படகினை சேவையில் ஈடுபடுத்தினால் பயணிகளுக்கு அது திருப்தியாக இருக்கும். உங்கள் சேவையும் வரவேற்கத்தக்கதாக இருக் கும். இது நீங்கள் இவ்வளவு காலமும் பயணிகளுக்குச் செய்த சேவையினைக் காட்டி னும் அளப்பெரிய சேவையாக அமையும். இனியாவது இது நடைபெறுமா? இதனுடன் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளாவது அக்கறை எடுப்பார்களா என ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

*அனலையூர்ச் சேந்தன்.*

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். பிரார்த்தனையை குடும்பத்தினருடன் சென்று நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள்.

**இடபம்:** எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். வெளிவட்டாரத்தில் புதிய அனுபவம் உண்டாகும். பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள்.

**மிதுனம்:** துணிச்சலாக சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். சொத்துப் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் சில நுணுக்கங்களைக் கற்றுக் கொள் வீர்கள்.

**கடகம்:** விருந்தினர்களின் வருகையால் வீடு களைக்கட்டும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். வியாபாரத்தில் எதிர்பார்த்த ஒப்பந்தம் உங்களுக்குக் கிடைக்கும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**சிங்கம்:** எதிர்பார்த்தவை தாமதமாகும். மற்றவர்களுடன் உங்களை ஒப்பிட்டுக் கொண்டிருக்க வேண்டாம். உங்களின் அணுகுமுறையை மாற்றுங்கள். வியாபாரத்தில் வேலையாள்களின் ஒத்துழைப்பு சுமாராக இருக்கும்.

**கன்னி:** யாரையும் எடுத்தெறிந்து பேச வேண்டாம். எதிர்மறை எண்ணங்கள் வரக்கூடும். மறதி, சோர்வு வந்து விலகும். வியாபாரத்தில் போட்டிகள் இருக்கும். உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும். எதிலும் எச்சரிக்கையுடன் செயற்படுங்கள்.

**துலாம்:** உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். பிரியமானவர்களுக்காக சிலவற்றை விட்டுக் கொடுப்பீர்கள். உங்களைத் தவறாக நினைத்துக் கொண்டிருந்தவர்களின் மனசு மாறும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள்.

**விருச்சிகம்:** எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பழைய உறவினர், நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். பயணங்கள் சிறப்பாக அமையும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும்.

**தனுசு:** கோபத்தைக் கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் புதிய இடத்துக்குக் கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் இணக்கமான சூழ்நிலை உருவாகும்.

**மகரம்:** தடைப்பட்ட வேலையை மாறுபட்ட அணுகுமுறையால் முடித்துக் காட்டுவீர்கள். சிலவற்றிற்கு உங்கள் அவசர முடிவுகள் தான் காரணம் என்பதை உணர்வீர்கள். உத்தியோகத்தில் பணிகளைப் போராடி முடிப்பீர்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும்.

**கும்பம்:** குடும்பத்தில் ஆரோக்கியமான விவாதங்கள் வந்து போகும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். வெளிவட்டாரத்தில் மதிப்புக்கூடும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஆதரிப்பார். கவனமுடன் செயற்படப்பாருங்கள்.

**மீனம்:** சபைகளில் முதல் மரியாதை கிடைக்கும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். சில விடயங்களில் பெருந்தன்மையான முடிவுகளை எடுப்பீர்கள். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாள்களைத் தேடுவீர்கள்.

## நாளை

**மாசி-07 புதன்கிழமை | 19.02.2014**

திதி: சதுர்த்தி மு.ப.10.00 வரை
நட்சத்திரம்: அத்தம் மு.ப.08.06 வரை
சுபநேரம்: 05.02-06.32 வரை
இராகுகாலம்:.12.32-02.02 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...



### தெய்வீக அன்பு

அன்பை ஒரு முக்கோணமாக உருவகப்படுத்தலாம். முதல் கோணமாவது; அன்பு கேள்விகளைக் கேட்காது; அன்பு செலுத்துபவன் பிச்சைக்காரன் அல்லன். பிச்சைக்காரனின் அன்பு அன்பன்று. அன்பு எதையும் கேட்பதில்லை; அதே சமயம் எல்லாவற்றையும் கொடுக்கிறது. இதுதான் அன்பின் முதல் அடையாளம், அன்பின் மூலம் வழிபாடு செய்வதே உண்மையான இறை வழிபாடு ஆகும். "கடவுள் இரக்கம் உள்ளவரா?" என்ற கேள்வியே இங்கு எழுவதில்லை. அவர் கடவுள்; அவர் எனது அன்பர். "கடவுள் சர்வ சக்தி வாய்ந்தவரா? ஓர் எல்லைக்கு உட்பட்டவரா, எல்லைக்கு உட்படாதவரா?" என்ற கேள்விகளுக்கும் இடமில்லை. அவர் நல்லது செய்தால் நல்லது. தீமை செய்தால்தான் என்ன? எல்லையற்ற அந்த அன்பைத் தவிர மற்ற எல்லாக் குணங்களும் மறைந்து விடுகின்றன.


பண்டைக்கால இந்தியச் சக்கரவர்த்தி ஒருவர் காட்டில் வேட்டையாடச் சென்றபோது, ஒரு மாமுனிவரைச் சந்தித்தார். அம்முனிவர் மீது பேரன்பு கொண்ட மன்னர், தம் தலைநகருக்கு வந்து தம்மிடமிருந்து சில பரிசுகள் வாங்கிச் செல்லுமாறு முனிவரை வற்புறுத்தினார். முதலில் முனிவர் இந்த அழைப்பை மறுத்தார். ஆனால், மன்னர் வற்புறுத்தவே, இறுதியில் ஏற்றுக் கொண்டார். அவர் மாளிகைக்குச் சென்றார். அவருடைய வருகை மன்னருக்குத் தெரிவிக்கப்பட்டது. மன்னர், 'ஒரு நிமிஷம் பொறுத்திருங்கள்; எனது பிரார்த்தனையை நான் முடித்துக்கொண்டு வந்துவிடுகிறேன்" என்று கூறிப் பிரார்த்தனையில் அமர்ந்தார். மன்னர், "ஆண்டவனே ! எனக்கு அதிக சொத்தும், அதிக நிலமும், உடல் நலமும், குழந்தைகளும் தந்தருளும் !" என்று பிரார்த்தனை செய்தார். உடனே முனிவர் எழுந்து அறையைவிட்டு வெளியே நடக்கத் தொடங்கினார். "நீங்கள் எனது பரிசுகளை வாங்கிக் கொள்ளவில்லையே?" என்று சக்கரவர்த்தி கேட்டார். அதற்கு முனிவர், "பிச்சைக்காரர்களிடம் நான் யாசகம் கேட்பதில்லை. 'நிலம் வேண்டும், பணம் வேண்டும், இது வேண்டும், அது வேண்டும்' என்று தான் நீங்கள் இவ்வளவு நேரம் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தீர்கள். உங்களால் எனக்கு என்ன கொடுக்க இயலும்? முதலில் உங்களுடைய சொந்தத் தேவைகளை நீங்கள் பூர்த்தி செய்து கொள்ளுங்கள்' என்று சொன்னார்.

## பூமியை நெருங்கும் ஆபத்து

செயலிழந்து போன ரஷ்யாவின் ராணுவ செயற்கைக் கோளான காஸ்மோஸ்-1220 பூமியை நோக்கி வந்து கொண்டிருப்பதாக ரஷ்ய விண்வெளி ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

விண்கலம் பூமியை நெருங்கும்போது அதனுடைய இயக்கம் கட்டுப்பாடற்று இருக்கும் என்று கேணல் அலெக்சி சொலோடுகின் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

கடந்த 1980ஆம் ஆண்டு இந்த செயற்கைக்கோள் சிக்லோன்-2 என்ற விண்கலம் மூலம் விண்ணில் நிலை நிறுத்தப்பட்டது.



பூமியைநோக்கி வந்துகொண்டிருக்கும் காஸ்மோஸ் 1220

மூன்று தொன் எடை கொண்ட இந்த செயற்கைக் கோள் காற்று மண்டலத்தில் நுழையும்போதே பெரும்பான்மையான பகுதிகள் எரிந்து விடும் என்று கூறப்பட்டபோதிலும், அதன் எஞ்சிய பகுதிகள் கீழே விழும்போது பூமியின் மேற்பரப்பைப் பாதிக்க வாய்ப்புள்ளதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

பசுபிக் பெருங்கடலில் இவை விழக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டாலும் வெளிப்புறக் காரணங்களால் இவை விழும் நேரமும், இடமும் மாறுபடக்கூடும் என்று சொலோடுகின் கூறுகின்றார்.

பூமியின் பெரும்பகுதி நீர்ப்பரப்பால் சூழப்பட்டுள்ள இடங்களில் விழுந்தாலும், சன நெருக்கடியான இடங்கள் குறைவாக உள்ள இடங்களில் விழுந்தாலும் இந்தச் செயற்கைக் கோளின் சிதைவுகள் பெரும் பாதிப்பை ஏற்படுத்தாது என்ற நம்பிக்கையில் தாங்கள் செயற்பட்டு வருவதாக வானியல் பத்திரிகை ஆசிரியரான டேவிட் எய்ஷர் தெரிவித்துள்ளரர்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 4 | 5 | | | | | | |
| 7 | | 1 | 9 | | 4 | | | 6 |
| | | 2 | | 1 | 7 | 5 | | |
| 9 | 5 | | | | 3 | 1 | 8 | |
| | | | 5 | | 1 | | | |
| | 1 | 7 | 6 | | | | 4 | 5 |
| | | 3 | 4 | 7 | | 2 | | |
| 1 | | | 2 | | 8 | 6 | | 9 |
| | | | | | | 4 | 7 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 1 | 9 | 8 | 2 | 5 | 3 | 4 | 6 |
| 5 | 3 | 2 | 7 | 6 | 4 | 1 | 8 | 9 |
| 6 | 8 | 4 | 1 | 9 | 3 | 2 | 5 | 7 |
| 8 | 7 | 3 | 5 | 1 | 6 | 9 | 2 | 4 |
| 1 | 4 | 5 | 2 | 7 | 9 | 8 | 6 | 3 |
| 2 | 9 | 6 | 4 | 3 | 8 | 7 | 1 | 5 |
| 4 | 6 | 7 | 3 | 8 | 2 | 5 | 9 | 1 |
| 3 | 5 | 8 | 9 | 4 | 1 | 6 | 7 | 2 |
| 9 | 2 | 1 | 6 | 5 | 7 | 4 | 3 | 8 |

# செலான் வங்கியின் நடமாடும் ஏ.ரி.எம்.



செலான் வங்கியின் நடமாடும் ஏ.ரி.எம்.

செலான் வங்கியானது தனது பல்வகைப்பட்ட உற்பத்திகள் மற்றும் சேவைகளை மேலும் அதிகமான இலங்கை மக்களிடத்தே கொண்டு சென்று சேர்க்கும் வகையில், முதன் முதலாக நடமாடும் ஏ.ரி.எம். வாகனத்தை அண்மையில் அறிமுகம் செய்து வைத்துள்ளது.

பத்தரமுல்லை தியத்த உயன வளாகத்தில் இடம்பெற்ற இந்தச் சேவையின் அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த செலான் வங்கி பி.எல்.சி.யின் பொது முகாமையாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கபில ஆரியரத்ன. இந்த நடாமாடும் ஏ.ரி.எம். இயந்திரத்தில் முதலாவது கொடுக்கல் வாங்கலை மேற்கொண்டு சேவையை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

நாடு முழுவதிலும் அமைந்துள்ள செலான் வங்கியின் உறுதிமிக்க 160 கிளைகளை உள்ளடக்கிய கிளை வலையமைப்புடன் நிகழ்நேர தொடர்பிணைப்பைக் கொண்ட இந்த நடமாடும் ஏ.ரி.எம். வாகனமானது, அடிப்படையில் பணம் வைப்புச் செய்யும் வசதியுடன் ஏனைய அனைத்து வசதிகளையும் தன்னகத்தே கொண்ட ஒரு ஏ.ரி.எம். இயந்திரமாகச் செயற்படும்.

இந்த நடமாடும் சேவை மேலும் ஒருபடி மேலே சென்று வரையறுக்கப்பட்ட வங்கியியல் தொழிற்பாட்டு சேவைகளையும் அளிக்கின்றது. அதன்மூலம் செலான் வங்கி பொது மக்களுக்கான தனது சேவைகளின் செயற்பரப்பு எல்லையை இன்னும் விரிவுபடுத்துகின்றது.

செலான் வங்கி பி.எல்.சி.யின் மாற்று வங்கியியல் வழிமுறைகள் பிரிவின் பிரதிப் பொது முகாமையாளரான ரஞ்சித் எக்ஸ் பொன்சேகா கூறுகையில், இலங்கை முழுவதிலும் பரந்து வாழ்கின்ற எமது பல்லாயிரக்கணக்கான வாடிக்கையாளர்களுக்கு நாம் வழங்கி வருகின்ற சேவைகளை மேலும் விஸ்தரிக்கும் ஒரு முயற்சியாக நாம் இந்த நடமாடும் ஏ.ரி.எம். இயந்திரத்தைக் கருதுகின்றோம். இதனது இடம்பெயரும் தன்மையின் காரணமாக மக்களுக்கு மேன்மேலும் சௌகரியம் கிடைப்பதுடன் அதன் விளைவாக, வளர்ச்சியடைந்து வருகின்ற எமது வாடிக்கையாளர் தளத்துடன் மிகவுயர்ந்த இடைத்தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளவும் எமக்கு இடமளிக்கின்றது.

இலங்கை பொது மக்களுக்கு வழங்குவதற்காக செலான் வங்கி உருவாக்கி வைத்திருக்கும் எண்ணிலடங்கா வாய்ப்புக்களின் முன்னோடி சேவையாக இது அமைகின்றது என்றார்.

இதேவேளை, நாடு முழுவதும் அமைந்திருக்கின்ற 1200 இற்கும் அதிகமான ஏ.ரி.எம். நிலையங்களுடன் தொடர்பிணைப்புக் கொண்டியங்குகின்ற இலங்கையின் பகிரப்பட்ட மிகப் பெரிய ஏ.ரி.எம். வலையமைப்பாக திகழும் லங்காபேய் இன் ஓர் அங்கமாகவும் செலான் வங்கி உள்ளது. லங்காபேய்: வலையமைப்பை செயற்படுத்துகின்ற லங்காகிளியர் நிறுவனத்தின் தலைவரான திருமதி. பிரியந்த லியனகே கூறுகையில், நபர் ஒருவர் தன்னுடைய வங்கிக்குரிய ஏ.ரி.எம். நிலையத்தையே தேடியலைய வேண்டியிருந்த நாள்கள் நம்மைக் கடந்து போய்விட்டன. இப்போது லங்காபேய் வலையமைப்பின் உதவியுடன் இவ் வலையமைப்பில் அங்கத்துவம் வகிக்கின்ற எந்தவொரு வங்கியின் வாடிக்கையாளரும் நாடெங்கும் பரவலாக அமைந்துள்ள ஏனைய அங்கத்துவ வங்கிகளின் ஏ.ரி.எம். இயந்திரங்களை, ஒரு பண மீளப் பெறுகைக்கு ரூபா 15 என்ற மிகக் குறைந்த கட்டணத்தில் பயன்படுத்த முடியும் என்றார். (த)

## முதலீட்டு சபையின் செயற்பாடு

2014ஆம் ஆண்டில் அதிக அளவிலான வெளிநாட்டு முதலீட்டைப் பெறும் நோக்கில் பல்வேறு திட்டங்களுடன் இலங்கை முதலீட்டுச் சபை செயல்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

250 கோடி அமெரிக்க டொலர் நேரடி முதலீட்டை இந்த வருடத்தில் பெற முடியும் என முதலீட்டு சபை நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

அதே அளவிலான முதலீட்டை, உள்ளூர் முதலீட்டாளர்களிடம் இருந்து பெறுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக, இலங்கை முதலீட்டு சபையினால் வெளியிடப் பட்ட அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை, பிரான்ஸில் இருந்து 30 கோடி முதல் 40 கோடி அமெரிக்க டொலர் வரை கிடைக்கவுள்ளதாக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இந்த நிலையில், தைக்கப்பட்ட ஆடை ஏற்றுமதி மூலம் இந்த வருடத்தில் 400 கோடி அமெரிக்க டொலர்களை வெளிநாட்டு செலாவணியாக பெற முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தகவலை, கடந்த வாரம் இடம்பெற்ற கருத்தரங்கொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய தைக்கப்பட்ட ஆடை ஏற்றுமதி சங்கத்தின் தலைவர் யோகன் லோரன்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வருடத்துடன் ஏற்றுமதி மூலம் கிடைத்த வருவாயை விட இந்த வருடத்தில் அதிக அளவிலான அதிகரிப்பை எதிர்பார்க்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த)

## தகவல் தொழில்நுட்பத்துறை சம்பியன்களாக 99 எக்ஸ்




Biz Quiz 2014 தகவல் தொழில்நுட்பம் மென்பொருள் பிரிவில் 99 எக்ஸ் ரெக்னொலொஜி சம்பியனாகத் தெரிவாகியுள்ளது.

கடந்த ஆண்டு இடம்பெற்ற போட்டியில் தான் பெற்றிருந்த சம்பியன் பட்டத்தை இந்த ஆண்டிலும் தக்க வைத்துக் கொண்டது. இலங்கையின் முன்னணி வர்த்தக நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தி இந்தப் போட்டியில் பங்குபற்றிய பல அணிகளை வெற்றி கொண்டதன் மூலம், இந்தப் பட்டத்தை 99 எக்ஸ் ரெக்னொலொஜி தனதாக்கியிருந்தது.

குறித்த பிரிவில் முதலாமிடத்தை பெற்றுக் கொண்ட தற்கு மேலதிகமாக, 99 எக்ஸ் ரெக்னொலொஜி தரப்படுத்தலில் ஆறாமிடத்தில் 25 புள்ளிகளுடன் இருந்தது.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் மென்பொருள் பிரிவில் பல முன்னணி துறைசார் முன்னோடி நிறுவனங்களின் அணிகள் போட்டியிட்டிருந்தன.

இந்த ஆண்டு இடம்பெற்ற போட்டியில் மொத்தமாக 48 அணிகள் இடம்பெற்றிருந்தன. பங்குபற்றிய அனைத்து அணிகளும், இறுதிச் சுற்று வரை ஆக்ரோஷமான போட்டியில் ஈடுபட்டிருந்தன. சிறியளவிலான புள்ளி வித்தியாசத்தில் வெற்றியாளர் தெரிவு செய்யப்பட்டி ருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த போட்டியில் முதலாமிடத்தை மக்கள் வங்கி (33 புள்ளிகள்) பெற்றுக் கொண்டதுடன், செலான் வங்கி (32 புள்ளிகள்) இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டது. மேலும் டயலொக் ஆக்சியாட்டா (A) 31 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தைப் பெற்றுக்கொண்டது.

99 எக்ஸ் ரெக்னொலொஜி அணியில் சிரேஷ்ட மென்பொருள் பொறியியலாளர்களான கலனமித் மன்னபெரும மற்றும் இவந்த செனவிரட்ன, இணை தொழில்நுட்ப தலைவர் மனோஷ சில்வா மற்றும் செயற்பாட்டு முகாமைத்துவ இணை ஊழியர் நவக நவரட்ன மற்றும் அணித் தலைவராக இணை தொழில்நுட்ப தலைவர் ஷிரந்த டி அல்விஸ் ஆகியோர் பணியாற்றியிரு ந்தனர்.

இந்த ஆண்டில் 99 எக்ஸ் ரெக்னொலொஜி அணி பங்குபற்றிய முதலாவது போட்டியான Biz Quiz 2014 இல் வெற்றி பெற்றிருந்தமை விசேட அம்சமாகும்.

உலகளாவிய ரீதியில் சுயாதீன மென்பொருள் சேவை வழங்குநர்களுக்கான வெளிக்கள சேவைகளை வழங்கும் மென்பொருள் பொறியியல் சேவைகளை வழங்கும் நிறுவனமாக 99 எக்ஸ் ரெக்னொலொஜி செயற்படுகிறது. இலங்கையில் தலைமையகத்தைக் கொண்டு ஐரோப்பாவில் சேவைகளை மேற்கொண்டு வருகிறது.

நோர்வேயின் ஒஸ்லோ நகரில் காரியாலயத் தையும் கொண்டுள்ளது. 150க்கும் மேற்பட்ட தரம் வாய்ந்த வர்த்தக வெளியீடுகளை வடிவமைத்த பெருமையையும் தன்னகத்தே கொண்டுள்ளது. 2013 இல், இலங்கையில் தொழில்புரிய சிறந்த நிறுவனங்கள் பட்டியலில் முதல் ஐந்து இடங்களில் தரப்படுத்தப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக் கது. (த)

## கொழும்பில் ஜூகி நிறுவனத்தின் இரண்டாவது பயிற்சி மையம்

தென் ஆசியாவில் ஜுகி நிறுவனம் தனது இரண்டாவது பயிற்சி மையமொன்றை கொழும்பில் ஆரம்பித்து வைத்தது. இந்நிகழ்வு கொழும்பு தாஜ் ஹோட்டலில் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

விசேட அதிதியாகக் கலந்துகொண்ட கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிசாட் பதியுதீன் மற்றும் சிங்கப்பூர் ஜுகி நிறுவனத்தின் நிறைவேற்று துணை தலைவர் சையிட்டோ நொரியாக்கி பயிற்சி மையத்தினை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தனர்.

இலங்கையின் ஆடை உற்பத்தித்துறை தொடர்பாக வர்த்தக அமைச்சர் ரிசாட் பதியுதீன் அரசாங்கத்தின் இலக்கு குறித்து விவரமாக எடுத்துரைத்தார். அவர்களின் இலக்கு வர வேற்கத்தக்கதாக உள்ளது. ஜுகி நிறுவனம் கடந்த 40 வருடங்களாக இலங்கைக்கு தனது பங்களிப்பினை வழங்கி வருகின்றது. நாங்கள் இலங்கைக்கு ஜுகி தையல் மெஷின்கள் உட்பட அதற்கான தொழில்நுட்ப பயிற்சி, ஆலோசனைகள் ஆகியவற்றை வழங்கி வருகின்றோம்.

ஜுகி மெஷினானது உலகளவு ரீதியாக மிகவும் பிரசித்தி பெற்று வரும் ஒரு பிராண்ட் ஆகும். 160 இற்கும் அதிகமான நாடுகளில் இந்த ஜுகி மெஷின் பாவனையுள்ளது. ஜுகி தையல் இயந்தி ரத்திற்கு இந்தியா, பாகிஸ்தான், தாய்லாந்து, வியட்நாம், இலங்கை ஆகிய தெற்காசிய நாடுகளில் சிறந்த வரவேற்பு இருக்கின்றது. ஆசியாவிலேயே இலங்கை இந்த ஜுகி தையல் இயந்திரம் தொடர்பில் உயர்தொழில்நுட்ப அறிவைப் பெற்ற துடன் தனது ஆடைஉற்பத்தி துறைக்கு அதிகமாக பாவித்து வருகின்றது. அத்துடன் இலங்கையின் ஆடை உற்பத்தித் துறையானது, தேசிய மொத்த உற்பத்தியில் பாரிய பங்களிப்பினையும் அளித்து வருகின்றது.

மேற்படி தெற்காசியாவில் ஜுகி நிறுவனம் தனது இரண் டாவது பயிற்சி மையத்தினை கொழும்பில் ஆரம்பித்து வைத்து பயிற்சி நெறிகளை வழங்குகின்றது. இதனூடாக பலர் நன் மையடைவர் என இந்நிகழ்வில் கலந்துகொண்ட சிங்கப்பூர் ஜுகி நிறுவனத்தின் நிறைவேற்றுத் துணைத் தலைவர் சையிட்டோ நொரியாக்கி தனது உரையில் தெரிவித்தார். (த)



# சுவிற்சர்லாந்துப் பயணிகள் இலகுவாக விஸா பெற வசதி

கொழும்பு, பெப்.18

சுவிற்சர்லாந்துக்குப் பயணம் மேற்கொள்பவர்கள் இலகுவாக விஸா பயணச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள உதவும் வகையில் விசா வழங்கும் நிலையங்களை அந்த நாட்டுத் தூதரகம் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் திறந்து வைத்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் சுவிற்சர்லாந்துக்கான விசாவுக்கு விண்ணப்பம் செய்கிறவர்கள் பிரவுண் வீதியில் உள்ள 89ஆம் இலக்க நிலையத்தில் திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை விடுமுறை நாள்களைத் தவிர்த்து காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம். அதேவிதமாக கடவுச் சீட்டுக்களை திங்கள் முதல் வெள்ளிவரை காலை 8 மணியிலிருந்து மாலை மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

சுவிற்சர்லாந்துக்கான விஸா வழங்கும் சேவை 2013ஆம் ஆண்டு நவம்பரில் சுவிற்சர்லாந்து அரசு மற்றும் வி.எவ்.எஸ். நிறுவனமும் இணைந்து ஆரம்பித்திருந்தன. கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் இந்த சேவை நிலையங்கள் செயற்படுகின்றன. வி.எப்.எஸ். நிறுவனமானது ராஜதந்திர மற்றும் அரசுகளுக்கு சர்வதேச மட்டத்தில் தொழில்நுட்ப உதவி வழங்குவதில் நிபுணத்துவம் பெறும் அமைப்பாகும்.

சுவிற்சர்லாந்துக்குச் செல்லும் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதனால் இந்த புதிய சேவைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக சுவிஸ் தூதரகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகளுக்கு வசதி செய்து கொடுப்பதும் இரு நாடுகளுக்குமிடையில் உல்லாசப் பயணம், வர்த்தகம், முதலீடு மற்றும் இருதரப்பு உறவுகளை அதிகரிப்பதுமே இதன் முக்கிய நோக்கம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய ஏற்பாட்டின்படி விஸாவுக்கு விண்ணப்பிப்பதற்கான நிலையங்கள் மிக வசதியான இடங்களில் அமைந்துள்ளன.

♦ விண்ணப்பதாரிகள் தமக்கு வசதியான நேரத்தில் சமுகமளித்து சேவையைப் பெற்றுக் கொள்ளும் விதத்தில் நீடித்த நேரம் பணிகள் நடைபெறுகின்றன.

♦ விஸா தொடர்பான கேள்விகளையும் விண்ணப்பங்களையும் தொழில் முறை நிபுணர்களும் பொறுப்புள்ள அலுவலர்களும் கையாள்கின்றனர்.

♦ வரிசையாக விண்ணப்பதாரிகள் இலகுவாக நகர்வதற்கும் வசதியாக சன நெருக்கடிகள் சிறப்பாக முகாமைத்துவம் செய்யப்படுகின்றது.

♦ கடவுச்சீட்டுகள் ஆவணங்கள் மற்றும் சொந்தத் தகவல்களுக்கு 100 வீதம் பாது காப்பளிக்கப்படுகின்றது.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ப)

## நுண்கலைத்துறை இளமாணி பட்டப்படிப்புக்கு விண்ணப்பிக்கலாம்

நுண்கலைத்துறையில் சங்கீதம், நடனம், ஓவியம் ஆகிய பாடங்களில் இளமாணிப் பட்டப் படிப்புக்கான இந்தியப் புலமைப்பரிசிலுக்கான விண்ணப்பம் புதுடில்லியிலுள்ள கலா சார உறவு களுக்கான இந்தியப் பேரவையால் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரி 20 முதல் 25 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். அத்துடன் விண்ணப்பிக்கும் பாடத்தில் ஜி.சீ.ஈ உயர் தரத்தில் 'பி' தர சித்தியுடன் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருப் பது டன் ஜி.சீ.ஈ சாதாரண தரத்திலும் உயர்தரத்திலும் ஆங்கிலப் பாடத் தில் சாதாரண சித்தி பெற்றிருக்க வேண்டும்.

விண்ணப்பப் படிவத்தை இல. 14 மருதடி ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள இந்தியத் துணைத் தூதர கத்தில் பெப்ரவரி மாதம் 18ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை வார நாள்களில் முற்பகல் 9.30 மணி முதல் ஒரு மணி வரை பெற்றுக் கொள்ள முடியும். விண்ணப்பப்படிவத்தை http://www.iccrindia.net/scholarships chemes.html எனும் இணைய முக வரியிலும் விண்ணப் பதாரிகள் பெற்றுக் கொள்ள முடியும்.

விண்ணப்பதாரிகள் சரிபார்த்தல் பட்டியல் மற்றும் தூதரக சான்றிதழ் உட்பட புலமைப் பரிசில் விண்ணப்பப்படிவம்- 2014 (ஆறு தொகுதிகள்), உடல் உறுதி உறுதிப்பாடு- சுகாதாரப் பரிசோதனை படிவம்- 2014 (ஆறு தொகுதி கள்), விண் ணப்பதாரிகளுக்கான பொது அறிவுறுத்தல் கள் - 2014 முறையா கப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் (ஆறு தொகுதி), துணை யாக இறுவட்டுக்களும் ஏழு புகைப் படங்களும் மேற்குறிப்பிட்ட முகவரியில் எதிர்வரும் 26 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கும் ஒரு மணிக்கு மிடையில் நேரில் கையளிக்க வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தமது சான்றிதழ்களின் மூலப் பிரதிகளை விண் ணப்பங்களைக் கையளிக் கும் போது கொண்டு வருதல் வேண்டும் என்று இந்திய துணை தூதரக யாழ். அலுவலகம் அறிவித் துள்ளது.

(ந-10)

## இலக்கியப் போட்டிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வவுனியா மாவட்ட செயலகம் பிரதேச ரீதியாக கலை இலக்கிய போட்டிகளை நடத்தவுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கான போட்டியில்: பாலர்பிரிவில் -(6 வயது தொடக் கம்10 வயது வரை) மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி, கவிதைஎழுதுதல்போட்டி, கவிதைப்பாடல்போட்டி. சிரேஷ்ட பிரிவில்- 16 வயது தொடக்கம் 19 வயது வரை மாணவர் களுக்கான போட்டியில் கவிதை எழுதுதல் போட்டி, கவிதைப்பாடல் போட்டி, பாடல்நயத்தல் போட்டி என்பன எதிர் பார்க்கப்படுகின்றன.

இவற்றுடன் திறந்த பிரிவினருக்கான போட்டியில் பாடலாக் கப் போட்டி, நாட்டார் கலை கற்றல் போட்டி இலக்கிய விவரணப் போட்டி, சிறுகதைப் போட்டி, கவிதைப் போட்டி சிறுவர்கதையாக்கப்போட்டி என் பன எதிர்பார்க்கப் படுகின் றன. இந்தப் போட்டியில் பங்கு பெற விரும்புவோர்தங்களின் படைப் புக்களை எதிர் வரும் ஜூன் 15 ஆம் திகதிக்கு முன்ன தாக பிரதேச செயலர் ஊடாக அனுப்பி வைக்கலாம்.

போட்டி தொடர்பான மேலதிக விவரங்களையும் பிரிவுகளுக் கேற்ப விண்ணப்பப் படிவங்களையும், வவுனியா மாவட்டச் செயலகத்திலுள்ள கலாசார, அபிவிருத்தி உதவியாளரிடமும் வவுனியா, நெடுங்கேணி, வெங்கல செட்டிகுளம், வவு னியா தெற்கு ஆகிய பிரதேசங்களின் கடமையாற்றும் கலா சார அபிவிருத்தி உத்தியோ கத்தர்களிடமும் பெற்றுக் கொள்ள முடியும் என வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி சரஸ்வதி மோகநாதன் தெரிவித்துள்ளார்.

(ந-421)

**தோட்டக் காணி விற்பனைக்கு**

உரும்பிராய், சுன்னாகம் Power Station Road இல் 22 பரப்பு தோட்டக் காணி உடன் விற்பனைக்கு. முன்பு முந்திரிகை செய்யப்பட்டது. (சி/11787) (3.6.4)

தொடர்பு:077 301 3239

**வீடு வாடகைக்குண்டு**

40/1, செல்லர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

T.P: 071 486 0222 (44858)(7.6.3)

**விற்பனைக்குண்டு**

நல்ல நிலையிலுள்ள கூரைச் சீற்றுக்கள், பனை மரங்கள் என்பன விற்பனைக்குண்டு. (44854)(7.6.3)

தொடர்பு: 071 902 2222

**தேவை**

உங்கள் வீடுகளில் உள்ள பழைய காகிதாதிகள், புத்தகங்கள், கொப்பிகள், காட்போட், பத்திரிகைகள் முதலானவற்றைப் பணம் தந்து பெற்றுக்கொள்கின்றோம். (44853)(7.6.3)

தொடர்பு: 077 418 0185

**குத்தகைக்கு**

யாழ். ஊரெழு கிளானைப் பகுதியில் 4 பரப்பு வாழைத்தோட்டக் காணி பயிர்ச் செய்கைக்கு குத்தகைக்குக் கொடுக்கப்படும்.

தொடர்பு: 075 500 1211 (44852)(7.6.3)

**நிரந்தர வேலைவாய்ப்பு**

கொழும்பை அண்மித்த பகுதிகளில் பிரபல்யமான தொழிற்சாலைகளான Tea,Paint, Rubber,கோழி இறைச்சி,Plastic bag,Goju போன்றவற்றில் உற்பத்தி,லேபல், பொதியிடல் போன்ற பிரிவுகளில் 18-48 வயதுடைய ஆண்,பெண் இருபாலாரும் தேவை. உணவு, தங்குமிட வசதியுடன் 18,000/=,32,000/= வரையான சம்பளத்துடன் நிரந்தர வேலை வாய்ப்பு. தொடர்பு: 076 697 5069 (43178)(5.6.3)

**தேவை**

கல்வியங்காட்டில் இயங்கும் சிறு கைத்தொழில் நிறுவனத்திற்கு 20-40 வயதிற்குட்பட்ட ஆண்கள் வேலைக்குத் தேவை. 4 கிலோமீற்றர் சுற்றாடலில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. (44864)(7.6.3)

தொடர்பு: 071 902 2222

**வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்**

**கேள்வி அறிவித்தல் – 2014**

கீழ்க்காணப்படும் வேலைகளிற்கு C9 இக்ராட் பதிவு பெற்ற ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்வி கோரப்படுகின்றது.

| தொ. இல | வேலையின் விவரம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்பு | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (VAT, NBTநீங்கலாக) |
|---|---|---|---|
| 01 | தலைமை அலுவலக வாகனத் தரிப்பிடம் அமைத்தல் வேலை | 8,000.00 | 1,000.00 |
| 02 | தலைமை அலுவலக வடக்குப் பகுதியில் எல்லை மதில் அமைத்தல் வேலை | 5,440.00 | 1,000.00 |
| 03 | வட்டுக்கோட்டை பொதுச் சந்தையின் கூரையும் கிணறும் அமைத்தல் | 750.00 | 300.00 |
| 04 | சங்கரத்தை சந்தைக் கிணற்றுக்கு மூடி அமைத்தல் | 300.00 | 300.00 |

கேள்விப்படிவம் வழங்கல் :-18.02.2014 தொடக்கம் 04.03.2014 ந.ப12.00 மணிவரை
கேள்விப்படிவம் ஏற்றல் :- 05.03.2014 ந.ப 12.00 மணிவரை
கேள்வி திறத்தல் :- 05.03.2014 பி.ப 02.00 மணி

1. தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து மேற்குறிப்பிட்ட வேலைகளிற்காக கேள்விகளை கோருகின்றார்.
2. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு உரிமை உண்டு.
3. கேள்விப்பத்திரப் பணத்துடன் மீளளிக்கப்படாத 12% பெறுமதிசேர் வரியும், 2% தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியும் செலுத்தப்படல் வேண்டும்
4. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன்னர் ஒப்பந்தகாரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
5. கேள்வி திறக்கப்படும் சமயத்தில் கேள்விகாரர் அல்லது அவரது பிரதிநிதி சமுகமளிக்க வேண்டும்.
6. கேள்விப் பத்திரத்தின் ஒருபிரதியை "தவிசாளர், வலிகாமம் மேற்குபிரதேச சபை, சுழிபுரம்" என்ற முகவரிக்குப் பதிவுத்தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலோ இடல் வேண்டும். மறுபிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு அமைய கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
7. மேலதிக விவரங்களையும், நிபந்தனைகளையும் தலைமையலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தலைமைஅலுவலகம்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.
18.02.2014

(சி/12099)(5.6.3)

திருமதி.நாகரஞ்சினி ஐங்கரன்,
தவிசாளர்,
வலி.மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.

**கோயில் மணி விற்பனைக்குண்டு**



- 10kg-500kg வரை வடிவமைக்கப்பட்டுள்ளன.
- சுத்தமான வெண்கலத்தினால் உருவாக்கப்பட்டுள்ளன.
- தரமான ஒலிநயத்துடன் காணப்படுகின்றன.
- எங்களிடம் செப்பு கொடித்தம்பம் உண்டு.
- செப்பு கலசமும் உண்டு.
- திருவாசியும் உண்டு.

இந்தியாவின் மகாபலிபுரத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட கருங்கல் சிலைகள், ஐம்பொன் சிலைகள் மற்றும் கோயில் தேவைகளுக்கான அனைத்துப் பொருள்களும் எங்களிடம் கிடைக்கும்.

விநியோகம் இலவசம் :
உங்கள் தேவைகளுக்கு ஏற்ற வகையில் எங்கள் சேவைகள் இடம்பெறும்.

வேலாயுதம் பத்மலால்
077 676 5504 (44859)(7.6.3)

**St. John's College Jaffna**
**Old Boys Association**
**OBA DAY**
**&**
**Annual General Meeting**

The OBA Day and the 98th Annual General Meeting will be held on 1st of March 2014 (Saturday) at College.

**Programme for the Day**

8.00am - Holy Communion Service
9.00am - Fellowship Breakfast
9.30am - Annual General Meeting in the college Auditoriurm

**Agenda**

1. Prayer
2. Vote of condolence
3. Minutes of the last AGM
4. President Address
5. Annual Report
6. Statement of Accounts
7. Principal Review
8. Election of Office Bearers

10.30am - Guest Speech
11.30 am - Soft ball cricket match (Old Boys Vs Present Boys)
1.00 pm - Fellowship Lunch
2.00 pm - Talent Show
4.30 pm - Principals Tea
5.00 pm - Soccer Match (Old Boys Vs Present Boys)

**Breakfast - Rs.100/-, Lunch - Rs.300/-**
**Tickets available at the college office till 28th Feb.**

**Rev. N. J. Gnanaponrajah** Principal
(C/12090)(2.6.3)
**Mr. M. Elampirayan** Secretary 0773405978

## மரண அறிவித்தல்

### அப்பர்சுவாமி அண்ணாமலை



மகாதனை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அப்பர்சுவாமி அண்ணாமலை 14.02.2014 கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பர்சுவாமி - சின்னத்தங்கம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தங்கமுத்து தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளையின் அன்புக் கணவரும், பாலகிருஷ்ணன், வசந்தி, மோகனகிருஷ்ணன், சந்தானகிருஷ்ணன், ஆனந்தி, தமயந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயந்தி, இரவீந் திரன், வசந்தகுமாரி, தேவகி, வினோதீஸ்வரன், இராஜேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு மாமனும், இராசலெட்சுமி, காலஞ்சென்ற சண்முகநாதன் (முதலி) மற் றும் இராமநாதன் (சுவாமிராம்), காலஞ்சென்ற அம்பிகாதேவி (கமலா) மற்றும் கனாகம்பிகை, கோபாலகிருஷ்ணன் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.02.2014) செவ்வாய்க் கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

S.Raveendran,
201 - 2230, Lawrence Ave E,
Scarborough,
ON M1P 2R1, Canada. + 14165613695

தகவல்:
அ.கோபாலகிருஷ்ணன்
(சகோதரன்)

(2.6)(44862)

## பிழையான நேரத்தைக் காட்டுகிறது மணிக்கூடு



பிழையான நேரத்தை காட்டும் திருமலை மணிக்கூட்டு கோபுரத்தில் உள்ள மணிக்கூடு.

திருகோணமலை, பிரதான பஸ் தரிப்பிடத்துக்கு அரு கிலுள்ள மணிக்கூட்டு கோபுரத்தின் நேரம் ஆறு மாதங்களாக பிழையான நேரத்தையே காட்டுகிறது என்று வாகன சாரதிகளும் பிரயாணிகளும் விசனம் தெரி விக்கின்றனர்.

சுற்றுலாப்பயணிகளை கவரக்கூடிய முக்கிய இடங்கள் திருகோணமலை பகுதியிலே காணப் படுகின்றன. பிரபல் யமிக்க கோணேஸ்வரர் இந்து ஆலயம், கன்னியா வெந்நீர் ஊற்று, நிலாவெளி கடற்கரை , புறாமலை போன்ற முக்கிய இடங்கள் காணப்படுவது திருகோண மலையில் ஆகும்.

இந்த மணிக்கூட்டுக் கோபுரத்தில் உள்ள மணிக்கூடு செயழிலந்துள்ளமை தொடர்பில் திருகோணமலை நகர சபை இதுவரை ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று புரிய வில்லை என்று மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

எனவே பிரதான பஸ் தரிப்பிடத்துக்கும் -கோணேஸ்வரர் இந்து ஆலயத்துக்கும் செல்லும் வீதியில் காணப்படும் மணிக்கூட்டுக் கோபுரத்தின் நேரத்தைச் சரியான நேரமாகக் காட்டுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நட வடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

## வயாவிளான் பலாலி மக்களுக்கான அறிவித்தல்

எதிர்வரும் 19.02.2014 (புதன்கிழமை) பி.ப 3 மணியளவில் வயாவிளான் மத்திய மகாவித்தியாலய முன்றலில் வயாவிளான் பலாலி இடம் பெயர்ந்த மக்களிற்கான பதிவுகள் மற்றும் கலந்துரையாடல் என்பன இடம் பெற உள்ளதால் அனைத்து மக்களையும் தங்களின் குடும்ப அட்டை மற்றும் காணி உறுதிகளுடன் தவறாது சமூகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம். வயாவிளான் இடம்பெயர்ந்தோர் சங்கம்


தொழிற்பயிற்சியுடனான வேலைவாய்ப்பு




Northshore College of Business & Technology (Pvt) Ltd
Super Market Choithrams

Certified Retail Sales Clerk
Certified Retail Service Cashier

44,000/- 52,000/-
Super Market

முகவரி - Vidyasaraga (PVT) Ltd.
141 Church road,
Colombo - 15

தொலைபேசி : + 94 011 2540529
தொலைநகல் : + 94 011 2527881
மின்னஞ்சல் : info@vidyasagara.lk

VIDYASAGARA

Choithrams
A Training Institute Registered Under Tertiary & Vocational Education Commission
Reg.No : P01 / 0575
NORTHSHORE COLLEGE OF BUSINESS & TECHNOLOGY


## Guest House விற்பனைக்கு

இல. 873ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணத்தில் சகல தளபாட வசதிகளுடன் ரூறிஸ்ற் (Tourist) அனுமதிப்பத்திரத்துடன் 3 பரப்புக்காணியில் இயங்கிக் கொண்டிருக்கும் Guest House உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு 077 4766147, 021 2219220

## 60TH BIRTHDAY REMEMBRANCE OF OUR DARLING AMMA



**Late. Mrs. GEETHA GERADINE SHANTHIKUMARI VIGNA RAJA**

BORN 18.02.1954
ENTERED GLORY 28.07.2009

We cannot hug you to wish you Amma,
Even a birthday card, we cannot send,
But God will take our greetings
To the one we love so much.
Put your arms around her Lord,
Don't leave her on her own

**For today it is our darling Amma's birthday,**

Five years ago you went away Amma,
To take a well earned rest
And of all the mothers in the world
We were lucky to get the best.

"Her children stand and bless her. Her husband praises her:"
(Proverbs 31:28 NLT)\

R. T. Vigna Raja
(Rtd. High Court Judge)
& Family
Moolai,
Chulipuram.

(44874)(10.14)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் வட்டர் வடிவேல்



தோற்றம் 16.06.1948 மறைவு 01.03.2013

திதி: சங்கடஹர சதுர்த்தி (18.02.2014)



எங்கள் அருமை அப்பாவே!
ஓராண்டு ஓடி ஒழிந்து மறைந்ததப்பா
கூடியிருந்தாலும் எம்மால் ஆற
முடியாதப்பா!
எல்லோரும் இங்கே கூடியிருக்கையிலே,
உங்களின் சிரிப்பும் கலகலப்பும்
எங்கே ஓடி மறைந்ததப்பா?
எத்தனை நாள்கள் தான் ஏங்கி அழுதாலும்
மாறாதப்பா உங்கள் நீங்காத நினைவுகள்
பாரினில் எங்கள் உயிர்மூச்சு நிற்கும் வரை
உங்கள் பிரிவு எம்மை உருக்கி எடுக்குதப்பா!
நீங்கள் திரிந்த வீதிகள், கோயில்கள்,
வாழ்ந்த வீடுகள் எல்லாம் உங்களைக் காணாது,
விம்மி வெடிக்குதப்பா!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
அழியாது உங்கள் பாசமப்பா!
உங்களின் ஆத்மா சாந்தியடைய
நல்லூர்க் கந்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

(44861)(10.6.3)

என்றும் உங்கள் நினைவில் வாழும்:
குடும்பத்தினர்.

புதிய முகவரி:
அதிகாரி வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

பழைய முகவரி:
கைதடி மத்தி, கைதடி.

## இரண்டாம் ஆண்டு நினைவு

தோற்றம் 1941.10.12 மறைவு 2012.02.18

அமரர்

### அரியரத்தினம் கில்டா



எங்கள் குலவிளக்கே பாசத்தின் உறைவிடமே
உனைப் பிரிந்து ஆண்டு இரண்டு ஆனதம்மா
எங்கள் வாழ்நாள் உள்ளவரை - உங்களை
என்றுமே மறவோம் அம்மா.....

16/5, மத்திய பஸ் றோட்,
யாழ்ப்பாணம்.

என்றும் நீங்கா நினைவுகளுடன்.
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி



பருத்தித்துறை
பிரதேச செயலகத்தின்
தும்பளை கிழக்கு (J/405)
கிராம அலுவலர் பிரிவில்
சமுர்த்தி அபிவிருத்தி
உத்தியோகத்தராக கடமையாற்றும்
திருமதி நளாயினி கோகிலராஜன்
அவர்களின்
அன்பு மகன்
செல்வன் கோ.பிரதாஸ்
அவர்கள்

14.02.2014 அன்று அகால மரணம் அடைந்ததையிட்டு
துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு,
அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.
பிரதேச செயலரும், அனைத்து ஊழியர்களும்.
ஊழியர் நலன்புரி சங்கம்
பிரதேச செயலகம், பருத்தித்துறை.

(J/12002)
(7.0.3)

# மெய்வன்மைப்போட்டிகள்

மூளாய் அமெரிக்கன்மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அதிபர் இ.லோகேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.
நிகழ்வில் பிரதம விருந்தினராக ஒக்ஸ்பாம் நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் கு.சோமராஜ், சிறப்பு விருந்தினராக ஜே/171 கிராம அலுவலர் த.ரஞ்சன் ஆகியோர் கலந்து கொள்வர். (ந)

◆◆◆

வண்ணை நாவலர் மகாவித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.45 மணிக்கு அதிபர் சு.திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறும்.
நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற அதிபர் சு.சிவபாதசுந்தரம் ஆகியோர் கலந்து கொள்வர். (ந)

◆◆◆

நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை அதிபர் ம.கஜேந்திரன் தலைமையில் நடைபெறும்.
நிகழ்வில் ஆசியுரையினை நல்லை ஆதீனக் குருமுதல்வர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் வழங்குவார்.
பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் க.சுசீந்திரன் கலந்துகொள்வார். (ந)

◆◆◆

கோண்டாவில் இராம கிருஷ்ண மகா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் சண்.வாமதேவன் தலைமையில் நடைபெறும். நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் பி.அருணகிரிநாதன், சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.வி. மகேந்திரன், யாழ்.வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.தியாகராஜா, கொமர்ஷல் வங்கி திருநெல்வேலிக் கிளை முகாமையாளர் கே. இராசமனோகரன் ஆகியோர் கலந்து கொள்வர். (ந)

◆◆◆

பளை வேம்பொடுகேணி சி.சி.த.க. பாடசாலை வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும். பாடசாலை அதிபர் க.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் திருமதி ஜெ.பரமோதயன் கலந்துகொள் வர். (ந-9)

## 'தரவட்டம்' செயலமர்வு

தென்மராட்சி, பெப்.18
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புகளில் கணித பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான தரவட்டம் நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை வலயக் கல்வி அலுவலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறுமென, வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள் ளார்.
மாகாண கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ள கணிதபாட ஆசிரியர்களுக்கான கற்பித்தல் உபகரணம் தயாரித்தல் போட்டிக்கு தயாரிக்கப்படவுள்ள உபகரணம் பற்றிய விவரத்தினைக் கொண்டு வருமாறும் அவர் கேட்டுள்ளார். (ந-9)

## பொதுக் கூட்டம்

வடமராட்சி தெற்கு, மேற்கு பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய பொதுக்கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கரவெட்டிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் தலைவர் வி.எஸ். வீரசிங்கம்தலைமையில்நடைபெறும். நிகழ்வில் பிரதம விருந் தினராக கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ கலந்து கொள்வார்.

◆◆◆

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் நாளை புதன்கிழமை வலயக் கல்விஅலுவலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (ந-9)

## தரம் -1 மாணவன் கௌரவிப்பு

உடுப்பிட்டி சைவப்பிரகாச வித்தியாலய தரம் 1 மாணவன் சுதாகர் சுகந்தன் ஆளுநர் விருதுக்கான சதுரங்கப் போட்டியில் வடமராட்சி வலய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளான்.
இந்த மாணவனுக்கு பாடசாலை மெய்வன்மைப் போட்டி நிகழ்வில் போது வடமராட்சி முன்னைநாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.நற்குணலிங்கம், வல்வை நகரசபைத் தலைவர் ந.அனந்தராஜ் ஆகியோர் வெற்றிக் கிண்ணத்தை வழங்கிக் கௌரவித்தனர். (ந-35)

## வாய்த்தர்க்கம் மோதலாகியது

மாங்குளம், பெப்.18
தனியார் பஸ் சாரதிகள், நடத்துநர்களுக்கிடையில் இடம்பெற்ற கைகலப்பினால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர்.
யாழ்ப்பாணத்திலிருந்து - வவுனியா நோக்கியும், வவுனியாவில் இருந்து-யாழ். நோக்கியும் பயணிகள் சேவையில் ஈடுபட்ட இரு தனியார் பஸ் சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கு இடையில் கொக் காவில் பகுதியில்ஞாயிற்றுக்கிழமை முற்பகல் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.
வாய்த்தர்க்கம்பின்னர் கைகலப்பாக மாறியது. யாழ் - வவுனியா நோக் கிச் சென்ற பஸ் சாரதி கம்பிகளால் கடுமையாகத் தாக்கப்பட்ட தாகத் தெரிவிக்கப் பட்டது. (ந-400)

## அந்தியேட்டி, சபிண்டீகரண அழைப்பு

31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 02 . 05 . 1947
மறைவு 22 . 01 . 2014

**சிவநாதன் இராஜேஸ்வரி**

5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 12 . 01 . 1944
மறைவு 17 . 05 . 2009

**நவரத்தினராசா நாகேஸ்வரி**


சிவநாதன் இராஜேஸ்வரி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (19-02-2014) புதன்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெறும்.
சபிண்டீகரண நிகழ்வுகள் 21-02-2014 வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
அன்னாரின் மறைவின்போது எம்முடன் இருந்து எமது துயரில் பங்கு கொண்டு சகல வழிகளிலும் உதவியளித்தவர்களுக்கும், நேரிலும் தொலைபேசியூடாகவும் எமக்கு ஆறுதலளித்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாவினி வீதி,
ஊறணி, வல்வெட்டித்துறை.

குடும்பத்தினர்.

(44851)(7.6.3)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியரான வி.நவரட்ணராஜா
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி
**சரஸ்வதி விஸ்வலிங்கம்**
அவர்கள் அமரத்துவம் அடைந்தமையையிட்டு துயருறும் குடும்பத்தாருக்கு, எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி. (44850)(7.6.3) ஆசிரியர் கழகம்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**விஷ்வநாதன் பாலசுப்பிரமணியம்**

தோற்றம் 21.05.1931
மறைவு 28.02.2013

ஆண்டொன்று சென்றாலும்
மறையவில்லை உங்கள் நினைவுகள்
என்றும் எம்மை விட்டகலாத தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.


இந்துக்கல்லூரி, ஒழுங்கை,
மானிப்பாய்.

என்றும் நினைவுகளுடன்:
(44848)(7.6.3) குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## கதிரேசு-சண்முகநாதன்

[முன்னாள் வர்த்தகர்-குகன் ஸ்ரோர்ஸ்-ரத்தோட்டை]



பொலிகண்டியைப் பிறப்பிடமாகவும், கொற்றாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரேசு சண்முகநாதன் 15.02.2014 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரேசு-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பையா-தங்கம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சட்டநாதர் மற்றும் பரராஜசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவக்கொழுந்து வின் அன்புக் கணவரும், சிவயோகநாதனின் (குகன்-சுவிஸ்) பாசமிகு தந்தையும், யசோதாவின் (சுவிஸ்) அன்பு மாமனாரும், மதுஷன், ஷஜிதா, பிரஜித் ஆகியோரின் (சுவிஸ்) பாசமுள்ள அப்பப்பாவும், காலஞ்சென்றவர்களான பாக்கியம், மாணிக்கம், பவராசா மற்றும் நேசமலர், வசந்தமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும், நாகேஸ்வரி, சாந்தகுமாரி (சுவிஸ்), நேசராசா (அமெரிக்கா), யசோதா, பவானி, சற்குணராசா (லண்டன்) ஆகியோரின் சிறிய தந்தையும், மனோகரன், துஷியந்தி (லண்டன்), மயூரதன் (ஜேர்மனி), செந்தூரன் (கனடா), நிரூபன் (சிங்கப்பூர்), சுகந்தி, அனுதர்சன், சஞ்சிகா ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.02.2014) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பொலிகண்டி, ஊறணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(33371)(7.6.3)

மனையாவத்தை, பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.
தொலைபேசி இல. 021 226 2405

தகவல்:
குடும்பத்தினர்.

# நாகபூஷணி அம்பாள் வரலாற்றை உலகத்தவரும் அறிய வேண்டும்

## நயினாதீவு அம்பாள் ஆலய அறங்காவல் சபைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.18

உலகில் வாழும் சைவ மக்களின் வழிபாட்டுத் தலமாக சர்வதேச பிரபல்யம் பெற்ற ஒன்றாக உள்ள நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் வரலாற்றை உலகில் உள்ள அனைத்து மக்களும் அறிந்து கொள்ள வேண்டும் என்று நயினாதீவு அம்பாள் ஆலய அறங்காவல் சபைத் தலைவர் ப.க.பரமலிங்கம் தெரிவித்தார்.

நயினை நாகபூஷணி அம்பாள் ஆலய வரலாற்றின் ஆங்கிலப் பதிப்பு நூல், உயர்திருவிழா குறித்த ஒளி நாடா, அம்பாள் திருக்காட்சிகள் புகைப்படத் தொகுப்பு ஆகிய வெளியீடுகள் கடந்த சனிக்கிழமை ஆலயமுன்றிலில்இடம்பெற்றன. நிகழ்வில் தலைமையுரையாற்றிய போது அறங்காவல் சபைத் தலைவர் ப.க.பரமலிங்கம் கூறியதாவது:-

புலம் பெயர்ந்த எமது உறவுகளின் இளந்தலைமுறை தமிழைப் பேசுகின்றது. ஆனால் தமிழை எழுத வாசிக்கக் கூடியவர்களாக இல்லை. ஆங்கிலத்தினூடாகவே தமது தேடல்களை முன்னெடுக்கின்றனர். மகோன்னதமான வரலாற்றைக் கொண்ட அம்பாளது வரலாறு தமிழில் மட்டுமே உள்ளதால் புலம் பெயர்ந்து வாழும் இளந்தலைமுறையினரிடம் வெளிநாடுகளில் உள்ள மக்களும் ஆலய வரலாற்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். எமது ஆலயத்துக்கு வருகை தந்த பொதுநலவாய நாடுகளின் உறுப்பினர்கள் உட்பட பலதரப்பட்ட வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள் இங்கே வருகைதந்த போது ஆலயத்தின் வரலாறு பற்றி அறிய ஆவல் காட்டுகின்றனர். இந்த நிலையில் அவற்றை முழுமையாகத் தெரிந்து கொள்ளக் கூடியதான செயற்பாடாக இந்த ஆங்கிலப் பதிப்பை வெளியிடவும் உற்சவகால ஒளிநாடா மற்றும் படத்தொகுப்புக்களை வெளியிடுவது அவசியம் என்பதை உணர்ந்து அறங்காவல் சபையின் அங்கீகாரத்துடன் இன்று அதனை வெளியிட்டு வைக்கின்றோம். தொன்மை மிக்க ஆலயம் என்பதால் எதிர்காலத்தில் இந்த ஆலயம் குறித்த அனைத்து விடயங்களும் ஆவணப்படுத்தப்படல் வேண்டும். தமிழில் இருந்தாலென்ன ஆங்கிலத்தில் இருந்தாலென்ன எமது வரலாறுகள் மாற்றப்படக்கூடாது.

இந்த வரலாற்றைச் சரியான முறையில் தவறுகள் எதுவுமின்றி எதிர்காலத்துக்கு வழங்க வேண்டும் என்பதால் ஆங்கில மொழி பெயர்ப்பில் சிறந்தவராகக் காணப்பட்ட கணேஸ் என்பவரை அணுகி அவரது முழு ஒத்துழைப்புடன் சிறப்பாக நூல் உருவாக்கப்பட்டுள்ளது. ஆலயத்தின் வரலாறு தொடர்பாக இந்தியத் தொலைக் காட்சி ஒன்றில் ஆலய தரிசனம் என்ற நிகழ்வு இடம் பெறுகின்றது. அதே போன்று எமது பகுதியில் தொலைக் காட்சியூடாக அனைத்து மக்களும் பார்த்துத் தெரிந்து கொள்ளத் தக்கதாக அம்பாள் ஆலய வரலாறுகள் குறித்து ஒளிபரப்பவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் பரமலிங்கம் தெரிவித்தார். (வ-7)

# சட்டவிரோத மதுபான விற்பனையும் சமூக சீர்கேடுகளும் உச்ச நிலையில்

## கிளிநொச்சியின் பல்வேறு பகுதிகளிலும்

கிளிநொச்சி,பெப்.18

கிளிநொச்சியின் பல்வேறு பகுதிகளிலும் சட்டவிரோத மதுபான உற்பத்தியும் விற்பனையும் அதிகரித்துக் காணப்படுவதுடன் சமூக சீர்கேடுகளும் இடம்பெற்று வருவதாக சமூக ஆர்வலர்கள் கவலையும் விசனமும் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி, பரந்தன், கோரக்கன்கட்டு, பூங்காவனச்சந்தி ஆகிய இடங்களில் சட்ட விரோத மதுபான உற்பத்தியும் விற்பனையும் அதிகரித்துக் காணப்படுவதுடன் சமூகச் சீர்கேடுகளும் சர்வ சர்தாரணமாக நடந்து வருகின்றன.

பரந்தன் பகுதியில் ஏ-35 வீதியை மையமாகக் கொண்ட பூங்காவனச்சந்தி, கோரக்கன்கட்டு ஆகிய பகுதிகளில் பல்வேறு வடிவங்களில் கசிப்பு விற்பனை இடம்பெற்று வருகின்றது. இது நடமாடும் வியாபாரமாகவும் இடம்பெறுவதுடன் குறிப்பிட்ட சில வர்த்தக நிலையங்களிலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

**பரந்தன் பகுதியில் ஏ 35 வீதியை மையமாகக் கொண்ட பூங்கா வனச்சந்தி, கோரக்கன் கட்டு ஆகிய பகுதிகளில் பல் வேறு வடிவங்களில் கசிப்பு விற்பனை இடம்பெற்று வருகின்றது. இது நடமாடும் வியா, பாரமாகவும் இடம்பெறுகிறது.**

இதனை விட மாலை 6 மணிக்குப் பின்னர் பலரும் வயது வேறுபாடுகளின்றி மது போதையில் தள்ளாடித் திரிவதைக் காணமுடிகின்றது. அத்துடன் பல்வேறு சீர்கேடுகளும் இடம்பெற்று வருகின்றன. இதில் உரிய அதிகாரிகள் கவனமெடுத்து இவ்வாறான சட்ட விரோதச் செயற்பாடுகளைத் தடுப்பதற்குநடவடிக்கைஎடுக்க வேண்டுமென பிரதேசமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-55)

# விளையாட்டு மைதானம் இல்லாது பயிற்சி மேற்கொள்ள முடியவில்லை

## கண்டாவளையிலுள்ள வி.கழகம் தெரிவிப்பு

கிளிநொச்சி,பெப்.18

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் உள்ள ரூபன் விளையாட்டுக்கழகத்துக்கென பொது விளையாட்டு மைதானம் ஒன்று அமைக்கப்படாததால் தாம் போட்டிகளுக்கான பயிற்சிகளை மேற்கொள்ள முடியாதிருப்பதாக அந்த விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த வீரர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் கண்டாவளை மகா வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தையே குறித்த விளையாட்டு கழக வீரர்கள் பயன்படுத்தி வந்தனர். இந்த நிலையில் குறித்த விளையாட்டுக்கழகம் கண்டாவளைப் பிரதேசத்தில் உள்ள பொதுக்காணி ஒன்றில் தமக்குரிய விளையாட்டு மைதானத்தை அமைப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து தருமாறும் இவ்வாறு விளையாட்டு மைதானம் அமையுமானால் தமது வீரர்களும் இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்களும் பயிற்சிகளை மேற்கொண்டு பல்வேறு சாதனைகளை ஈட்ட முடியும் எனவும் விளையாட்டுக்கழக நிர்வாகத்தினரும் சமூக ஆர்வலர்களும் பிரதேச மக்களும் கருத்துத் தெரிவித்துள்ளனர். (க-55)

# ஏற்று நீர்ப் பாசனத்துக்கு மக்கள் வேண்டுகோள்

கிளிநொச்சி, பெப்.18

கிளிநொச்சி மாயவனூர் கிராமத்தில் ஏற்று நீர்ப்பாசன வசதிகளை உருவாக்குமாறு கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

1977 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்தக் கிராமத்தில் 900 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன. மிகவும் வறுமையான குடும்பங்களைக் கொண்ட இந்தக் கிராமத்தில் புழுதியாற்றுக்குளம் உயிர் நாடியாக விளங்குகின்றது.

இந்தக் குளத்தை அடிப்படையாகக் கொண்டு தமது கிராமத்துக்கு ஏற்று நீர்ப்பாசனத்தை உருவாக்குமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-18)

# பாலத்தை அமைக்குமாறு கோரிக்கை


துணுக்காய்ப் பிரதேசத்திலுள்ள தென்னியங்குளத்தில் மழையின்போது குளத்திலிருந்து வெளியேறும் நீர் வீதியைக் குறுக்கறுத்துப் பாயும் இடத்தில் பாலம்ஒன்றைஅமைக்குமாறு இந்தக் கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதனால் குளத்திலிருந்து செல்லும்வான்வெள்ளம் தடையின்றிச் செல்வதுடன் மழை காலத்தில் மக்கள் சிரமமின்றிப் பயணிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

சுமார் 114 குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ள இந்தக் கிராமத்தில் மழைகாலங்களில் வீதியைக் குறுக்கறுத்துப் பாயும் வெள்ளம் மக்களின் வாழ்விடங்களின் ஊடாகவும் பாய்ந்து செல்வதால் 15 குடும்பங்கள் வெள்ளத்தினால் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பாக இறுதியாகத் துணுக்காய்ப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் தெரிவிக்கப்பட்டிருந்தது. (க-18)

# மரண அறிவித்தல்



## மாரிமுத்து கந்தசாமி

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், பலகாடு, காரைநகரை வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து கந்தசாமி நேற்று (17.02.2014) திங்கட்கிழமை பூநகரியில் காலமானார்.

அன்னார் மகேஷ்வரியின் அன்புக் கணவரும், சரோஷினி, கோபாலகிருஷ்ணன்,நகுலேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பத்மநாதன், ரஞ்சிதமலர் (ஆசிரியை),ஆகியோரின் மாமனாரும், அனுஷா, அனுஷ்,அஸ்வின், பதுஷிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பூநகரியிலுள்ள அஞ்சலிவான் மயானத்தில் இன்று (18.02.2014)செவ்வாய்க்கிழமை மு.ப.10மணிக்கு நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:

மகேஷ்வரி கந்தசாமி (மனைவி-வந்தலை)-077 3995988
கோபாலகிருஷ்ணன் - 0778334680,
நகுலன் (பிரான்ஸ்)- 0033665496091, பத்மநாதன் (மருமகன்-கொலன்)
சரோஷினி (லண்டன்) -00441085757041

(கி/11792)(5.6)

# மரண அறிவித்தல்

## விஸ்வலிங்கம் கோமளேஸ்வரன்

(திட்டமிடல் முகாமையாளர்-நீர்ப்பாசன திணைக்களம்)



கந்தரோடையைப் பிறப்பிடமாகவும், உடுவில் கிழக்கு, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் கோமளேஸ்வரன் நேற்று முன்தினம் (16.02.2014) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை ஆகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் (சேவையர்)-பூபதி தம்பதியரின் அன்பு மகனும், திருமதி சகுந்தலாதேவியின் பாசமிகு கணவரும் Dr. லிங்கேஸ்வரன் (லண்டன்), லிங்காதேவி (கொழும்பு), விஸ்வேஸ்வரி (கனடா), கோமலா (இலங்கை வங்கி - கொழும்பு), விஸ்வலிங்கம் (K.R.S. யாழ்ப்பாணம்) ஆகியோ ரின் தந்தையும், ரேணுகா (லண் டன்), ஸ்ரீகாந்தன் (தேசிய நீர் வழங்கள் மற்றும் வடிகாலமைப்புச் சபை - கொழும்பு), சுந்தரலிங்கம் (கனடா), ஸ்ரீபாலேஸ்வரன் (இலங்கை வங்கி - கொழும்பு), ரதிதேவி (சங்குவேலி) ஆகியோரின் பாசமிகு மாமனும், லக்ஷ்மினி (லண்டன்), சிவதர்ஷன் (லண்டன்), தனுத்திரன் (லண்டன்), நிலாக்ஷன் (லண்டன்), அபிவர்ஷினி (லண்டன்), அகிலதீபன் (லண்டன்), தர்சிகா (கனடா), துர்ஷாந் (கனடா), அபிஷாலினி (கொழும்பு), விதுர்ஷன் (கொழும்பு), ஸ்ரீஅபிராமி (கொழும்பு), ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் நாளை (19.02.2014) புதன்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் ஆராதனை நடைபெற்று, பூதவுடல் மல்வம் பொதுமயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

(44369)
(10.6)

தகவல்:
குடும்பத்தினர்.

# 16 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அமரர்

## தவமணி இராசையா முதலி



மண்மகிழ — மனம்நெகிழ
10.05.1930 03.02.2014

கடந்த (03.02.2014) திங்கட்கிழமை அமரத்துவமடைந்த எமது குடும்பத்தலைவியின் சிவப்பதப்பேறு குறித்த நிகழ்வுகள் இன்று (18.02.2014) செவ்வாய்க்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் இடம்பெற்று, தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் மதியபோசன நிகழ்வும் இடம்பெறும். எதிர்வரும் (23.02.2014) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் (பருத்தித்துறை வீதி, சட்டநாதர் சிவன் கோயில் அருகில்) ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து மதிய போசன நிகழ்வும் இடம்பெறும். அன்னாரது துயரில் பங்கு கொண்ட அனைவரும் இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு மேற்படி நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**- குடும்பத்தினர்.**

கெனடி லேன், திருநெல்வேலி கிழக்கு.

(44863)(2.6.3)

# சித்திரை புத்தாண்டு தினத்தில் யாழ். ரயில் நிலையம் திறப்பு

## காங்கேசன்துறை நோக்கி ரயில் பாதைப் பணிகள் ஆரம்பம்

வலி.வடக்கு,பெப்.18
கடந்த காலப் போரின் பாதிப்பால் சேதமடைந்திருந்த யாழ்ப்பாண ரயில் நிலையம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதியான தமிழ்- சிங் களப் புத்தாண்டு தினத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த ரயில் நிலையத்தின் நிர்மாணப் பணிகள் அடுத்த மாத இறுதியில் நிறைவடையவுள்ளன.

சுமார் 55 வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்டுள்ள யாழ். ரயில் நிலையத்தை போர் அழிவுகளின் பின்னர் மீள் நிர்மாணிக்கும் பணிகள் ஒரு வருடத்துக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

அநுராதபுரம், நாவலப்பிட்டி மற்றும் யாழ்ப்பாண ரயில் நிலையங்கள் என்பன ஒரே காலகட்டத்துள் அமைக்கப்பட்டுள்ள ரயில் நிலையங்களாகும்.

யாழ்.ரயில் நிலையத்தில் இன்று நவீன தொழில்நுட்பங்களுடன் நிர்மாணப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.


இரண்டு மாடிகளைக் கொண்டுள்ள யாழ்.ரயில் நிலையக் கட்டடத்தில் முன்னர் அமைந்திருந்த சகல வசதிகளும் நவீன மயத்துடன் அமையவுள்ளன.

ரயிலை ஒருபோதும் நேரில் காணாத குழந்தைகளுக்கு அழகு மிக்க ரயில் நிலையத்தை கண்டு ரசித்து பயணங்களை மேற்கொள்வதற்கு இதன்மூலம் வாய்ப்பு கிடைக்கவுள்ளது.

இதேவேளை யாழ்ப்பாணம் ரயில் நிலையம் வரை மேற்கொள்ளப்பட்டு வந்த ரயில் பாதை அமைக்கும் பணி தற்போது காங்கேசன்துறை நோக்கி ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதுவரை காலம் யாழ்ப்பாணத்துடன் ரயில் பாதை அமைக்கும் பணிகள் நிறைவடைந்து விடும் என்று பொதுமக்கள் எதிர்பார்த்திருந்த நிலையில் யாழ்ப்பாணம் ரயில் நிலையம் தாண்டி கொக்குவில், கோண்டாவில் பகுதிகளிலும் ரயில் பாதை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை மக்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தற்போது கொக்குவில் ரயில் நிலையத்துக்கு அண்மையாக உள்ள மதகு திருத்திக் கட்டுவதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-86-22)



நவீன முறையில் புனரமைக்கப்பட்டு வரும் யாழ். ரயில் நிலையம்

**இரண்டு மாடிகளைக் கொண்டுள்ள யாழ். ரயில் நிலையக் கட்டடத்தில் முன்னர் அமைந்திருந்த சகல வசதிகளும் நவீன மயத்துடன் அமையவுள்ளன.**



கொக்குவில் ரயில் நிலையத்துக்கு அண்மையாக உள்ள மதகு புனரமைப்பு

### வீடு தீப்பற்றி யுவதி பரிதாபமாக உயிரிழப்பு

அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு பிரதேசத்தில் வீடு தீப்பிடித்து எரிந்ததில் யுவதி ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ள சம்பவம் சனிக்கிழமை இடம்பெற்றது. வாச்சிக்குடா, தலைவர் வீதியைச் சேர்ந்த தங்கராசா திவ்வியா (வயது-22) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் வழமையாக காலை 9 மணிக்குப் பின்னர் நித்திரையில் இருந்து எழுவதாகவும் வெள்ளிக்கிழமை இரவு தனது அறைக்குச் சென்று அறையின் கதவை உட்பகுதியால் பூட்டிவிட்டு யுவதி நித்திரையில் இருந்துள்ளார்.

சம்பவ தினமான சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு தந்தையார் வேலைக்குச் சென்றுள்ளதுடன் தாயார் அருகில் உள்ள வீடு ஒன்றுக்குச் சென்றுள்ளார்.

இந்த நிலையில் வீட்டின் அறையில் நித்திரையில் இருந்துள்ள நிலையில் காலை 9 மணிக்கு வீட்டின் அறை தீப்பற்றி எரிவதை கண்ட தாயார் சத்தமிட்டதையடுத்து அயலவர்கள் வந்து தீயைத் தண்ணீர் ஊற்றி கட்டுப்பாட்டுக்கு கொண்டு வந்தனர். எனினும் அறையின் கட்டிலில் நித்திரையில் இருந்த யுவதி தீயில் எரிந்து உடல் கருகி சாவடைந்தார். (ச)



கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதமுனையில் ஞாயிற்றுக் கிழமை விற்பனைக்கு தயாராகவிருந்த ஒரு கிலோ 600 கிராம் கஞ்சா கல்முனைப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. போதைப்பொருள் குற்றத்தடுப்புப் பொறுப்பதிகாரி சோமகுமார் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் கைப்பற்றப்பட்ட கஞ்சாப் பொதியைப் பார்வையிடுகின்றனர். (ச)

## வேலைத் திட்டங்கள் மக்கள் பாவனைக்கு

அட்டாளைச்சேனையில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் பொதுமக்களின் பாவனைக்கு சனிக்கிழமை விடப்பட்டுள்ளன.

ஜெய்க்கா திட்டத்தின் கீழ் 35 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்ட கொங்கிறீட் வீதிகளும் 4 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்ட மின்சாரத் திட்டமும் பொதுமக்களின் பாவனைக்கு விடப் பட்டுள்ளன.

இந்த வேலைத்திட்டங்கள் கிழக்கு மாகாணசபையின் சமமான பிராந்திய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அட்டாளைச்சேனை நகுதானியாபாத் பிரதேசத்தில் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசன அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பையின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டன.

தலா 19,950 ரூபா பெறுமதியான தையல் இயந்திரங்கள் 73 பேருக்கும் தலா 12,880 ரூபா பெறுமதியான சைக்கிள்கள் 14 மீனவர்களுக்கும், 105 பேருக்கு நீர் இணைப்புக்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லா, கிழக்கு மாகாண அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை உட்பட பலர் கலந்து கொண்டனர். (ச)

## கடதாசி ஆலையில் திடீரென பரவியது

### சம்பவத்தில் பல்வேறு சந்தேகங்கள்

வாழைச்சேனை,பெப்.18
வாழைச்சேனை கடதாசி ஆலையில் திடீரென பரவிய தீ விபத்தால் அந்த ஆலைக்கு நட்டம் ஏற்பட்டுள்ளது என்று வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர். இந்தத் தீ விபத்து சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம் பெற்றுள்ளது. மீள் சுழற்சிக்காக வைக்கப்பட்டிருந்த சுமார் 8 தொன் கடதாசிகள் உட்பட பல பொருள்கள் எரிந்து முற்றாக சாம்பலாகியுள்ளது.

தீ விபத்து இடம்பெற்றுள்ள தையடுத்து இராணுவத்தின ரும், பொலிஸாரும் மற்றும் தீயணைக்கும் படையினரும் இணைந்து எடுத்துக்கொண்ட முயற்சியால் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதேவேளை ஊழியர்கள் இல்லாத நிலையில் தீ விபத்து இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் குறித்து பல்வேறு சந் தேகங்கள் ஏற்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை திருமதி யோகராணி குணாளன் அவர்களின் அன்புத்தாய்

**தெய்வேந்திரன் பராசக்தி**

அவர்கள் கடந்த (11.02.2014) அன்று காலமாகிய செய்தி அறிந்து எமது பாடசாலைச் சமூகம் ஆழ்ந்த கவலை அடைவதுடன், அவரின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்ப துடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம், கோப்பாய்.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**வீடு வாடகைக்குண்டு**

யாழ்ப்பாணம் நல்லூர் சூழலில் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு:-
021 222 6555, 0775085973

## மரண அறிவித்தல்

திருமதி **புஸ்பவதி அருளானந்தம்**

யாழ்ப்பாணம் கொல் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் இல 45, மணிக்கூட்டு வீதியை (பெருமாள் கோயிலடி) வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பவதி அருளானந்தம் நேற்று (17.02.2014) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இல 45, மணிக்கூட்டு வீதி,
பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

# கோத்தாவின் பரப்புரை சட்டவிரோதம் சுதந்திரமான தேர்தல் சந்தேகம்

## *தேர்தல் ஆணையரிடம் ஐ.தே.க. நேரில் முறைப்பாடு*

கொழும்பு, பெப்.18'

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, மாகாண சபைத் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளில் ஈடுபட்டமை சட்டவிரோதமானது எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மஹிந்த தேசப்பிரிய விடம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவச் சபை நேற்று நேரில் சென்று முறைப்பாடு செய்தது.

அத்துடன், நீதியானதும் - சுதந்திர மானதுமான தேர்தல் நடைபெறுவது சந்தேகத்திற்கிடமானது எனத் தெரிவித்த தலைமைத்துவ சபை, நீதியான தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணையாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலை மைத்துவ சபையின் முறைப்பாட்டை ஏற்றுக் கொண்ட தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மஹிந்த தேசப்பிரிய, நீதியான தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதியளித்துள்ளார்.

ஐக்கியதேசியக்கட்சியின்தலைமைத்துவ சபைத் தலைவர் கரு ஜயசூரிய தலைமையிலான குழுவினர் நேற்றுக் காலை 9.30 மணிக்கு தேர்தல்கள் ஆணையாளரை கொழும்பு - ராஜகிரியவிலுள்ள தேர்தல்கள் செயலகத்தில் சந்தித்தனர்.

சுமார் ஒரு மணிநேரம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, ரவி கருணாநாயக்க ஆகியோர் உட்பட கட்சியின் மேல் மாகாண சபை வேட்பாளர்கள் பலரும் பங் கேற்றனர்.

இலங்கை மன்றக் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கொழும்பு மாவட்ட குழுத் தலைவரும், ஜாதிக ஹெல உறுமயவின் உறுப்பினருமான உதய கம்மன்பிலவின் தேர்தல் பரப்புரை க்கூட்டம் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது. பாதுகாப்புச் செயலாளர் இதன்போது உரையொன்றையும் நிகழ்த் தியிருந்தார்.

இவ்வாறு அரச உயர்மட்ட அதிகாரி யொருவர் வேட்பாளர் ஒருவருக்கு ஆதரவு தெரிவித்து பரப்புரைகளில் ஈடுபடுவது தேர்தல் சட்டங்களை மீறும் செயல் எனத் தேர்தல்கள் ஆணையாளரிடம் தலைமைத்துவ சபை சுட்டிக் காட்டியுள்ளது.

கோத்தபாய ராஜபக்ஷ தேர்தல் பரப்புரைகளில் ஈடுபடலாம். ஆனால் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரான கோத்தபாய ராஜபக்ஷ தேர்தல் பரிந்துரைகளில் ஈடுபட முடியாது. இது தேர்தல் சட்டங்களை மீறும் செயலாகும் எனத் தேர்தல்கள் ஆணையாளரிடம் தாம் முறையிட்டதாக தலைமைத்துவ சபைத் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

அதேவேளை, தேர்தல் பரிந்துரைகளுக்காக அரச வளங்கள் பயன்படுத் தப்படுவது தடுக்கப்பட வேண்டும் என்றும் தேர்தல்கள் ஆணையாளரிடம் சுட்டிக்காட்டப்பட்டது என்றும் தெரிவித்தார். (த-சி)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### ஆணைக்குழு

வருகின்றன. ஆனாலும் அவர்கள் எப்போது விசாரிக்கப் படுவார்கள் என்பது தொடர்பில் ஆணைக்குழுவினர் எதையும் வெளிப்படுத்த வில்லை. எமது அமைப்பினூடாகப் பதிவு செய்தவர்கள், ஆணைக் குழுவுக்கு நேரடியாக முறைப்பாடுகள் அனுப்பியவர்கள். இப்போது பதிவு செய்தவர்கள் எல்லோருக்கும் கடிதம் கொடுக்கின்றனர்.

ஒரு முறைப்பாட்டுக்கே மூன்று கடிதங்கள் வழங்கப்படுகின்றன. இவ்வாறு ஒரு முறைப்பாட்டுக்குப் பல கடிதங்கள் வழங்கும் இவர்கள் எவ்வாறு சரியானதொரு அறிக்கையைச் சமர்பிப்பார்கள்?

ஆணைக்குழுவுக்குப் பலர் சமுகமளிக்காமல் விடுகின்றனர். ஒழுங்கான முறையில் அவர்களுக்குக் கடிதங்கள் அனுப்பப்படவில்லை. இன்றைய அமர்வுக்கு வருமாறு இன்றும் (நேற்று) சிலருக்குக் கடிதம் சென்றடைந்துள்ளது.

ஆணைக்குழுவினர் தாங்கள் விசாரணைக்கு அழைக்கப்போவர்களைப் பகிரங்கப் படுத்தினால் இவ்வாறான பிரச்சினை எழாது. அத்துடன் கடிதம் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஒரு வாரத்துக்கு முன்னரே கிடைப்பதை உறுதிப் படுத்த வேண்டும்.

அத்துடன் ஆணைக்குழுவில் சாட்சியமளிப்பதை மொழி பெயர்ப்பது முக்கியமானது. ஆனால் மொழி பெயர்ப்பு ஒழுங்காக இல்லை. அத்துடன் சாட்சிகள் தங்களது கருத்தைச் சொல்லவிடாமல் குழப்பமாகக் கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருக்கின்றனர். சாட்சிகள் பூரணமாகத் தங்கள் சாட்சியத்தைச் சொல்ல ஆணைக்குழு அனுமதிக்க வேண்டும்-என்று தெரிவித்தனர். (த-5)

### காணாமற்போன

கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவு, சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவு, யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவு ஆகிய மூன்று பிரிவுகளையும் உள்ளடக்கியதாக இந்த முதல்கட்ட அமர்வுகள் இடம்பெற்றன.

கோப்பாயில் 49 பேரும், சாவகச்சேரியில் 44 பேரும், யாழ்ப்பாணத்தில் 82 பேருமாக 175 பேர் சாட்சியமளித்தனர்.

அவர்களில் 101 பேர் இராணுவத்தினரே தமது பிள்ளைகள் காணாமற்போன சம்பவங்களுடன் நேரடியாகத் தொடர்பு பட்டிருப்பதாக ஆணித்தரமாகத் தெரிவித்தனர். அத்துடன் சம்பந்தப்பட்ட இராணுவ அதிகாரிகளின் பெயர்களையும் அவர்கள் குறிப்பிட்டிருந்தனர். இதில் 1996 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 36 பேரும், 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2008 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 45 பேரும், 2009 ஆம் ஆண்டு போரின் இறுதிக் கட்டத்தில் 20 பேரும் இராணுவத்தினரால் காணாமற்போனதாகச் சாட்சிகள் குறிப்பிட்டனர். (த-5)

### சாட்சியங்கள்

கடந்த வெள்ளிக்கிழமை முதல் நேற்றுவரை கிடைக்கப்பெற்ற முறைப் பாடுகள் சம்பந்தமாக மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள வினவிய போதே அவ்வாணைக்குழுவின் தலைவர் மெக்ஸ்வெல் பரணகம மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

இது சம்பந்தமாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று (நேற்று) மாலை 6 மணியுடன் எமது ஆணைக் குழுவின் யாழ்ப்பாணப் பயணம் முடிவுக்கு வரவுள்ளது. காணாமற்போனோர் குறித்த மேலும் பல தகவல்களை இந்த பயணத்தின் மூலம் எம்மால் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது. அரசியல், சமூக பிரச்சினைகள் எதுவுமின்றி மிகவும் சுமுகமான முறையில் காணாமற்போனோரின் உறவினர்களின் முறைப் பாடுகளையும், சாட்சியங்களையும் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது. ஒரு நாளைக்கு 50 முதல் 60 முறைப்பாடுகள் வரை பெற்றுக்கொள் ளக்கூடியதாகவும் இருந்தது.

தமிழ் மொழி மூலம் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள் அனைத்தையும் உடனுக்குடன் அவ்விடத்திலேயே வைத்து ஒலிப்பதிவும், ஆங்கிலத்தில் மொழி மாற்றமும் செய்து கொண்டோம். எமது இந்த யாழ் விஜயத்தில் இராணுவத்தினருக்கு எதிராகவே அதிக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகள், ஈ.பி.டி.பி. போன்ற அமைப்புகளுக்கு எதிராக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றாலும் பாதுகாப்புப் படையினருக்கு எதிராகவே அதிகளவான முறைப்பாடுகளும், சாட்சியங்களும் இதுவரையிலும் கிடைக்கப் பெற்றுள்ளன. இது குறித்த முதற்கட்ட விசாரணைகளை நாளை முதல் (இன்று) நாம் கொழும்பில் வைத்து ஆரம்பிக்கவுள்ளோம்.

கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளை ஒழுங்குப்படுத்திக் கொள்ள வேண்டிய தேவையேற்பட்டுள்ளமையால் சில நேரங்களில் இது குறித்த விசாரணைகள் இரண்டொரு நாட்களுக்கு தள்ளிவைக்கப்படும்" என்றார். (த-சி)

### 64

நீதிபதி செல்வி ஆனந்தி கனகரெட்ணம் முன்னிலையில் அனு ராதபுரம் சட்ட வைத்திய நிபுணர் டி.எல். வைத்தியரட்ண தலைமையிலான குழுவினர் நேற்றுப் புதைகுழி தோண்டும் பணியை முன்னெடுத்தனர்.

இதன்போது மேலும் இரு மனித எலும்புக்கூடுகள் மீட்கப் பட்டுள்ளன.

இதேவேளை ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்ட 2 எலும்புக் கூடுகள் புதைகுழியிலிருந்து எடுக்கப்பட்டு இலக்கமிடப்பட் டுப் பெட்டியில் பொதி செய்யப்பட்டு பாதுகாப்பான இடத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

நேற்றைய தோண்டும் பணியின்பொது தடயப்பொருள் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட் டது. அது நாணய வடிவில் காணப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அதனை நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறு குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவினருக்கு நீதிபதி உத்தரவிட்டார். (த-56)

### கடத்தலைக்

குழுவினர், உங்களிடம் சொன்னவர் யார் என்று கேள்வியெழுப்பினர். அதற்கு அவர், அவர்கள் இங்கு சாட்சியளிக்க வரமாட்டார்கள் என்று பதிலளித்தார்.

ஏன் வரமாட்டார்கள்? என்று ஆணைக்குழுவினர் மீண்டும் கேட்டனர். அவர்களுக்குப் பயம். அவர்கள் தங்களைச் சுட்டுப் போடுவார்கள் என்ற பயம் காரணமாகச் சாட்சியமளிக்க வரமாட்டார்கள் என்று மேற்படி சாட்சி ஆணைக் குழுவினருக்குப் பதிலளித் தார்.

இதேபோன்று 8 பேர் வரை ஆணைக்குழுவின் முன்பாகச் சாட்சியமளித்த வேளையில் தெரிவித்தனர். எங்கள் பிள்ளைகள் காணாமற் போனமை தொடர்பில் அவர்கள் எங்களுக்குச் சொல்லுவார்கள். பகிரங்கமாக அவர்கள் அதனைச் சொல்ல முன்வரமாட்டார்கள். அவர்களுக்கு இன்னமும் பயம். நாங்கள் எங்கள் உறவுகளுக்காகச் சாட்சி சொல்வதால், எது நடந்தாலும் பரவாயில்லை என்ற நிலையில் தான் சாட்சியமளிக்கிறோம் என்று காணாமற் போனோரின் உறவுகள் அங்கு தெரிவித்தனர். (த-5)

### இராணுவ

எனது மகனைத் தாங்கள்தான் கைது செய்த தாகக் குறிப்பிட்டார். அத்துடன் அவரை பலாலி இராணுவ முகாமுக்கு மாற்றிவிட்டதாகவும் தெரிவித்திருந்தார். அதன் பின்னர் தனக்கு எதுவும் தெரியாதென்று, சோமரட்ண ராஜபக்ஷ என்னிடம் குறிப்பிட்டார் - என்றார்.

இதேவேளை கமலநாயகி துரைசிங்கம் என்ற மற்றொரு சாட்சியும் புங்கன்குளம் சந்தியிலிருந்த 512 ஆவது பிரிகேட் தளபதி லலித் ஹேவா, தலைமையிலான இராணுவத்தினர் வீட்டுக்கு சிவில் உடையில் வந்து படித்துக் கொண்டிருந்த தனது மகனைப் பிடித்துக்கொண்டு சென்றனர் என்று குறிப்பிட்டார். (த-5)

### நவிபிள்ளை

ஜெனிவாக் கூட்டத்தொடரின் போது இதற்கு முகம் கொடுக்கத் தயாராகி விட்டதாகவும் அரசு தெரிவித்தது.

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதாபிமானச் சட்டமீறல்கள் குறித்து சர்வதேச விசாரணை அவசியம் எனப் பரிந் துரைத்து, எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஜெனீவா கூட்டத் தொடரில் நவநீதம்பிள்ளையால் அறிக்கை சமர்ப்பிக்கப் படவுள்ளது.

நவிப்பிள்ளையின் இந்த அறிக்கை குறித்து இலங்கை அரசிடம் வினவிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தது.

இதுகுறித்து ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும், சிரேஷ்ட அமைச் சருமான தினேஸ் குணவர்த்தன கூறு கையில்,

"இது குறித்து அரசால் ஒன்றும் கூறுவதற்கில்லை. ஏனென்றால் இலங்கை அரசைப் பொறுத்தமட்டில் நவநீதம் பிள்ளை ஜெனீவாவில் முன்வைக்கவுள்ள அறிக்கையானது நீதி யற்றது என்றே கூறவேண்டும். அமெ ரிக்கா உள்ளிட்ட நாடுகள் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரவுள்ள பிரேரணையும் நீதியற்றது. பொதுவாகக் கூறப் போனால் இலங்கைக்கு எதிராக ஜெனீவாவில் வரவுள்ள அனைத்து அழுத்தங்களும், பிரேரணைகளும் நீதி யற்றவை" என்றார்.

இதேவேளை, நவியின் அறிக்கை குறித்து சபை முதல்வரும், சிரேஷ்ட அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா தெரிவிக்கையில்,

"அரசானது இதுபோன்ற பிரச்சினைகள் வரும் என ஏற்கனவே ஊகித்து விட்டது. அது மட்டுமல்லாது, நவநீதம் பிள்ளை இலங்கைக்கு எதிராக இவ்வாறானதொரு அறிக்கை சமர்ப்பிப்பது ஒன் றும் புதிய விடயமல்ல. இத னால், இந்த அழுத்தங்களுக்கெல்லாம் முகங்கொடுக்க இலங்கை அரசு எப்போதோ தயாராகி விட்டது. இவை குறித்து அரசு பெரிதாக அலட்டிக் கொள்ளாவிடினும் ஜெனிவாவில் வரவுள்ள அழுத்தங்களுக்கு தக்க பதலிளிக்கத் தயார் நிலையிலேயே உள்ளது" என்றார்.

நவநீதம்பிள்ளை சமர்ப்பிக்கவுள்ள இந்த அறிக்கையானது ஏற்கனவே தயாரிக்கப் பட்டு, இலங்கை அரசின் பார்வைக்காக ஜெனிவாவில் உள்ள இலங்கைத் தூதுவர் ரவிநாத் ஆரிய சிங்க ஊடாக கடந்த வாரம் கொழும் புக்கு அனுப்பிவைக்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது. (த-சி)

### விழுந்தது

இந்த விண்கல் விழுந்ததால் வீட்டுக்கூரையில் சுமார் 6 அங் குல துவாரம் ஏற்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் இரவு 11 மணி யளவில் வீட்டினுள் விண்கல் விழுந்த சத்தம் கேட்டு வீட்டு உரிமையாளர் டீ.எம்.கருணாரட்ன சென்று பார்த்தபோது வீட்டின் சமயலறைப்பகுதி தீ பற்றிஎரிந்துள்ளது. இதன்போது விண்கல்லை அவதானித்த வீட்டு உரிமையாளர் உடனடியாக ராகலை பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்கியதையடுத்து பொலிஸார் உடனடியாக குறித்த வீட்டிற்கு பாதுகாப்பு வழங்கியுள்ளனர்.

இது விண்கல்லா? அல்லது வேறேனும் கல்லா என்பது தொடர்பில் நுவரெலியா மாவட்ட செயலாளர் டீ.பி.ஜீ. குமாரசிறி, மொரட்டுவ பல்கலைகழகத்தில் விஞ்ஞான ஆய்வாளர்களுக்கு அறிவித்துள்ளார். (த)

### கூரைகள்

மக்களிடம் ஒப்படைத்துள்ளனர். அல்லாரை தம்பு தோட்டத்திலுள்ள 523 ஆவது பிரிகேட் தலைமையகத்தில் வைத்துக் கடந்த வியாழக்கிழமை காணிகளுடன் கூடிய வீடுகளை இராணுவத்தினர் பொது மக்களிடம் ஒப்படைக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதி, கனகம்புளியடிச் சந்தி மற்றும் புத்தூர்ச் சந்தி ஆகிய இடங்களில் தாம் பயன்படுத் திய காணிகள் மற்றும் வீடுகளைப் இராணுவத்தினர் பொது மக்களிடம் ஒப்படைத்துள்ளனர். அவற்றில் பல வீடுகளின் கூரைகளைப் பிடுங்கிய பின்னரே அவற்றைத் தம்மிடம் ஒப்படைத்ததாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

விடுவிக்கப்பட்ட காணிகளை பொதுமக்கள் துப்புரவு செய்து வேலி போட்டு வீடுகளைப் புனரமைப்புச் செய்து வருகின்றனர். (த-4)

### ஆணைக்குழு தலைவருக்கு

பராக்கிரம பரணகம. சுகவீனம் காரணமாக நேற்று இடைநடுவில் வெளியேறினார். காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் அமர்வுகள் கடந்த 14 ஆம் திகதியிலிருந்து தொடர்ச்சியாக யாழ்ப்பாணத்தில் இடம்பெற்று வருகின்றன.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று அமர்வுகள் இடம் பெற்றுக் கொண்டிருந்தன. இதன் போது முற்பகல் 11 மணியளவில், 16 சாட்சிகள் சாட்சியமளித்த பின்னர் ஆணைக் குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பராக்கிரம பரணகம திடீரென வெளியேறினார்.

உடல் நலக்குறைவு காரணமாகவே வெளியேறுவதாக ஊடகவியலாளர்களிடம் தெரிவித்து விட்டு ஆணைக்குழுவின் தலைவர் சென்ற பின்னர், ஏனைய இரு ஆணையாளர்களான மனோராமநாதன், சுரஞ்சினி விஜயவர்த்தன ஆகியோர் தலைமையில் அமர்வுகள் தொடர்ந்து இடம்பெற்றன. (த-5)

# ஞானமுருகனை வீழ்த்தி சம்பியனானது அன்ரனிஸ்


முதலாம் இடம்பெற்ற அன்ரனிஸ்


இரண்டாம் இடம்பெற்ற ஞானமுருகன்

யாழ்ப்பாணம், பெப்.18
யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் யாழ். ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்திய அழைக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான 9 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று சம்பியனானது .

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை ஒஸ்மானியாஒக் கல்லூரி ஜின்னா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

முதல் பாதி ஆட்டத்தில் 12 ஆவது நிமிடத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணி வீரன் கலிஸ்ரர் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தைச் சரியான முறையில் பயன்படுத்தி ஒரு கோல் போட்டார்.

பதிலுக்கு ஞானமுருகன் அணியும் கோல்போட முயற்சிகளை மேற்கொண்டது. முதல் பாதி ஆட்டத்தில் சென். அன்ரனிஸ் 1:0 என்ற அடிப்படையில் முன்னிலையில் இருந்தது.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமானபோது இரு அணிகளும் ஆக்ரோஷமாக மோதிக்கொண்டன.

இதன்போது சென். அன்ரனிஸ் வீரர் கலிஸ்ரர் தனது அணிக்காக மேலும் ஒரு கோலைப் போட்டார்.

இதனைத் தொடர்ந்து ஆட்டத்தின் 36 ஆவது நிமிடத்தில் ஞானமுருகன் அணிக்கும் தண்டனை உதை ஒன்று கிடைத்தது. அதனைப் பார்த்தீபன் சரியாக உதைத்துக் கோலாக்கினார்.

ஆட்டம் முடிவதற்கு ஒரு நிமிடம் இருக்கையில் ஞானமுருகன் அணி வீரன் ஜெகதீஸ் தனது அணிக்காக மேலும் ஒருகோலைப் போட்டார்.

இதனால் இரு அணிகளும் சமநிலையில் இருக்க ஆட்டம் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது .

சிறந்த வீரனாக பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி வீரன் கலிஸ்ரர் தெரிவானார்.

சிறந்த கோல் காப்பாளராக மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி வீரன் சுரேஸ் தெரிவானார். (த-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், பெப்.18
சுன்னாகம் சூராவத்தை நியூவொரியர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கந்தன் நல்லதம்பி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 5 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் நியூவொரியர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இதில் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறும் அரையிறுதியாட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை யங்கென்றிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப்.18
மணிவதனன், ஜெய்சித்திரா சகோதரர்களின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்படும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான மேசைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிறபகல் 3 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.
இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் பழைய மாணவி திருமதி பிரதீபா சற்குணநாதன் கலந்து கொள்வார். (த-23)

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப்.18
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
அதில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நக்கீரன் விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

## வலிகாம லீக்கின் உதைபந்தாட்டம்

தலைவர் 2013 வெற்றிக் கிண்ணத்துக்காக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஆதரவுடன் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்தும் விலகல் முறையிலான 11 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டப் போட்டியில் இன்று செவ்வாய்க் கிழமை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ள இரண்டாம் சுற்றுப் போட்டியில் ஈவினை கலைமகள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து விளான் அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (த-86)

## பாடும்மீன் முதலிடம்



யாழ்ப்பாணம், பெப் .18
யாழ். பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக அணி முதலாமிடத்தையும், கொழும்புத்துறை ஜெற் லைனர் விளையாட்டுக்கழக அணி இரண்டாமிடத்தையும் பெற்றுள்ளன. (த-23)

## கிண்ணத்தை தனதாக்கியது டயமன்ஸ்

யாழ்ப்பாணம், பெப் .18
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வடமராட்சி சிரேஷ்ட வீரர்கள் குழுவினர் முதல்முறையாக நடத்திய 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியனானது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விண்மீன் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.


வெற்றி பெற்றுச் சம்பியனான டயமன்ஸ் அணி

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் யாங் லயன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றா மிடத்தை தனதாக்கிக் கொண் டது. இறுதியாட்டத்தில் ஆட்ட நாயகனாக வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணி வீரன் பிரகலாதன் தெரிவானார்.

சிறந்த பின்கள வீரனாக டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணி வீரன் ஜெயகாந்தன் தெரிவானார்.

சிறந்த கோல் காப்பாளராக டயமன்ஸ் விளை யாட்டுக் கழக அணி வீரன் திரவியராஜன் தெரிவானார்.

ஆட்டத் தொடர் நாயகனாக வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக வீரன் அனுராகாந்தன் தெரிவானார்.

சுற்றுப் போட்டித் தொடரில் அதிக கோல்களைப் போட்ட வீரனாக விண்மீன் விளை யாட்டுக்கழக அணி வீரன் முகுந்தன் தெரிவானார். (த-23-422)

## பெண்கள் உதைபந்தாட்டத்தில் கரவெட்டி விக்னேஸ்வரா சம்பியன்

வடமராட்சி, பெப்.18
வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட பெண்களுக்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி கடந்த வியாழக்கிழமை நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் மூன்றாம் இடத்துக்கான போட்டியில் சென். தோமஸ்மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலய அணி மோதியது.

இரு அணிகளும் சம பலத்துடன் மோதிய போதும் ஸ்ரீலங்கா வித்தியாலய அணியினர் தமக்குக் கிடைத்த பல வாய்ப்புக்களை கோலாக்கத் தவறிவிட்டனர்.

இதனால் இறுதியில் சமநிலை தவிர்ப்பு உதையின் மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் ஸ்ரீலங்கா வித்தியாலய அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

அடுத்து இறுதியாட்டத்தில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அணியை எதிர்த்து தேவரையாளி இந்துக் கல்லூரி அணி மோதியது. இரு அணிகளும் ஆட்டம் தொடங்கியதிலிருந்தே சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தின. முற்பாதியாட்டம் விக்னேஸ்வராக் கல்லூரி அணிக்குச் சாதகமாக இருந்த போதும் தேவரையாளி இந்துக் கல்லூரியின் கோல் காப்பாளரால் தடுக்கப்பட்டது.

பிற்பாதி ஆட்டத்தின் பின்னர் விக்னேஸ்வராக் கல்லூரி அணி தமது ஆட்ட வியூகத்தை மாற்றி அமைத்து முன்னேறிய போதும் தேவரையாளி இந்துக் கல்லூரி அணியினர் தடுப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் தேவரையாளி இந்துக் கல்லூரியின் பின்கள வீரர்களைத் தாண்டி பந்து கொண்டு செல்வதில் விக்னேஸ்வரா கல்லூரி அணியினர் சிரமப்பட்டனர்.

இதனால் ஆட்டம் சமநிலையில் நிறைவடைந்தது.

இதனால் சமநிலை தவிர்ப்பு உதைமூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் விக்னேஸ்வரா கல்லூரி அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது. 2 ஆம் இடத்தை தேவரையாளி இந்துக் கல்லூரியும் 3 ஆம் இடத்தை ஸ்ரீலங்கா வித்தியாலயமும் பெற்றுக் கொண்டன. (த-422)




# சோச்சியில் பறந்தது இந்திய தேசியக்கொடி

சோச்சியில் தேசியக் கொடியை ஏற்றியதன் மூலம் இந்தியா மீண்டும் ஒலிம்பிக் சங்கத்தில் இணைந்துள்ளது.
ரஷ்யாவின் சோச்சி நகரில் கடந்த 7ஆம் திகதியன்று குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் தொடங்கின. அதில் கலந்துகொண்ட இந்திய வீரர்கள் தாய்நாட்டின் கொடியின் கீழ் அணிவகுத்துச் செல்லாமல் சர்வதேச ஒலிம்பிக் கொடியின் கீழ் சென்றனர்.
ஊழல் கறை படிந்த பொதுச் செயலாளர் இந்திய ஒலிம்பிக் சங்கத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதனால் சர்வதேச ஒலிம்பிக் குழு கடந்த 2011ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இந்திய ஒலிம்பிக் சங்கத்தைத் தடை செய்திருந்தது. இதனால் இந்தியக் கொடியை வீரர்கள் ஆரம்ப நாளன்று பயன்படுத்த முடியவில்லை.
கடந்த வாரம் நடைபெற்ற தேர்தல் மூலம் இந்திய ஒலிம்பிக் சங்கத்துக்குப் புதிய பொது செயலாளர் தேர்ந்தெடுக்கப்பட்டபின் கடந்த 11ஆம் திகதியன்று ஒலிம்பிக் குழு இந்தியா மீதிருந்த தடையை விலக்கியது.
தடை நீக்கப்பட்ட ஐந்தாவது நாளான நேற்று சோச்சியில் தேசியக் கொடி ஏற்றப்பட்டு இந்தியா மீண்டும் ஒலிம்பிக் சங்கத்தில் இணைந்தது.
இதன்மூலம், சோச்சி குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் ஈடுபட்டுள்ள உறுப்பினர் நாடுகளின் எண்ணிக்கை 88 ஆக மாறியுள்ளது. மேலும், இறுதி நாளன்று இந்திய வீரர்கள் இந்திய தேசியக் கொடியை ஏந்திச் செல்லவும் முடியும்.
இது மிகவும் உணர்ச்சிகரமான ஒரு விடயம் என்று இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் தலைவர் என்.ராமச்சந்திரன் தெரிவித்தார். 15 மாதங்களாக தடை செய்யப்பட்ட பின்னர் சங்கத் தேர்தல் முடிந்த இரண்டாவது நாளே சர்வதேச ஒலிம்பிக் குழுவில் இணைந்துள்ளது நம்பமுடியாதது என்று கூறியுள்ளார். (து)

# றோயல் சலஞ்சர்ஸில் விளையாட வேண்டாம்


இந்திய கிரிக்கெட் அணியின் அதிரடி ஆட்டக்காரர் யுவராஜ் சிங்கை, விஜய் மல்லையாவின் ஐ.பி.எல். அணியான பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி ரூபா 14 கோடிக்கு ஏலத்தில் வாங்கியுள்ளது. ஐ.பி.எல். ஏலத்தில் இதுவே ஒரு வீரரின் அதிகபட்ச தொகையாகும்.
இந்நிலையில் கிங்பிஷர் நிறுவனத்தின் ஊழியர்கள் பெங்களூர் அணிக்காக விளையாடவேண்டாம் என்று வலியுறுத்தி யுவராஜ் சிங்கிற்கு கடிதம் ஒன்று எழுதியுள்ளனர். அக்கடிதத்தில் அவர்கள் கூறியிருப்பதாவது:-
அன்புள்ள யுவராஜ், கிங்பிஷர் விமான நிறுவனத்தின் ஊழியர்களாகிய நாங்கள் அனைவரும் உங்கள் தீவிர ரசிகர்களாவோம். அதுமட்டுமல்லாது, நீங்கள் புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட சமயம் விரைவில் நீங்கள் நலம்பெற்று வந்த செய்தியைக் கேட்டபோது மிகவும் மகிழ்ச்சியடைந்தோம்.



நடக்கவுள்ள ஐ.பி.எல் போட்டியில் விளையாட தங்களை ரூபா 14 கோடிக்கு எங்கள் நிறுவனம் ஏலம் எடுத்ததை கேள்விப்பட்டபோது நாங்கள் மிகவும் அதிர்ச்சியடைந்தோம்.
ஏனெனில் எங்கள் அனைவருக்கும் கடந்த 18 மாதங்களாக ஊதியம் வழங்கப்படவில்லை. இக்காரணத்தால் நாங்கள் அனைவரும் கடன் நெருக்கடியில் தவிக்கிறோம். எனவே தாங்கள் எங்களுக்காக இப்போட்டியில் விளையாடவேண்டாமென்று கேட்டுக் கொள்கிறோம்-இவ்வாறு அந்த கடிதத்தில் கூறியுள்ளனர்.
இந்தக் கடிதம் யுவராஜ் சிங்கின் பார்வைக்கு சென்றது பற்றி தகவல் ஏதும் தெரியவில்லை. கடந்த சில காலமாகச் சர்வதேச போட்டிகளில் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தத் திணறி வரும் யுவராஜ் சிங்குக்கு. ஐ.பி.எல். போட்டிகள் நல்லதொரு வாய்ப்பாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (து)

# பாகிஸ்தானை மிரட்டியதாம் இந்தியா

ஐ.சி.சி. மறுசீரமைப்பு திட்டத்துக்கு அனுமதி பெறுவதற்காக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தங்களை மிரட்டியதாகப் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் முன்னாள் தலைவர் அஸ்ரப் குற்றம் சாட்டியுள்ளார்.
சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி) செயற்குழுக் கூட்டம் சிங்கப்பூரில் கடந்த 6ஆம் திகதி நடைபெற்றது.
இந்த கூட்டத்தில் ஐ.சி.சி.யின் மறுசீரமைப்புதிட்டங்களுக்கு ஒப்புதல் பெறப்பட்டது. ஐ.சி.சி. நிர்வாக முறை மற்றும் வருவாய் பகிர்வு முறையில் மாற்றம் செய்யப்பட்டது. இதன்படி இந்தியா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து ஆகிய நாட்டு கிரிக்கெட் சபைகளுக்குக் கூடுதல் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்தியாவுக்கு கூடுதல் நிதியும், அதிகாரமும் வழங்கப்பட்டது.
மறுசீரமைப்புத் திட்டத்துக்கு 8 நாடுகள் ஆதரவு தெரிவித்தன. பாகிஸ்தான், இலங்கை ஆகியநாடுகள்மட்டுமேஎதிர்ப்புதெரிவித்தன.
இந்த நிலையில் ஐ.சி.சி. மறுசீரமைப்புத் திட்டத்துக்கு அனுமதி பெறுவதற்காக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையும் தங்களை மிரட்டியதாகப் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முன்னாள் தலைவர் அஸ்ரப் குற்றம் சாட்டியுள்ளார்.
இது குறித்து அவர் கூறுகையில், இந்தியாவுக்கு அதிகாரம் அளிக்கும் ஐ.சி.சி. மறுசீரமைப்புக்கு நாங்கள் எதிராகவே இருந்தோம். இதற்கு அனுமதி பெற இந்திய கிரிக்கெட் சபை எங்களை நேரடியாக மிரட்டியது. ஆனாலும் நாங்கள், எங்கள் நிலையில் தெளிவாக இருந்தோம் என்று கூறியுள்ளார். (து)



இந்தியாவுக்கு அதிகாரம் அளிக்கும் ஐ.சி.சி. மறுசீரமைப்புக்கு நாங்கள் எதிராகவே இருந்தோம். இதற்கு அனுமதி பெற இந்திய கிரிக்கெட் சபை எங்களை நேரடியாக மிரட்டியது.


# இழந்து விட்டோம் நாம் ஐ.பி.எல் அனுபவத்தை

முதல் ஐ.பி.எல் தொடரில் பங்கேற்றபோது ஓய்வு அறையில் கங்குலி, ரிக்கி பொன்டிங் போன்ற ஜாம்பவான்களுடன் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. அவர்களிடம் இருந்து பாடம் கற்றுக் கொண்டேன் என பாகிஸ்தான் 20/20 அணித் தலைவர் முகமது ஹபீஸ் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
வேடிக்கையும், எதிர்பார்ப்பும் நிறைந்த ரசிகர்களின் அதீத வரவேற்பைப் பெற்றுள்ள ஐ.பி.எல் தொடரில் இருந்து வீரர்கள் அதிகம் கற்றுக் கொள்ள முடியும். எனவே ஐ.பி.எல் போட்டிகளில் பாகிஸ்தான் வீரர்கள் பங்கேற்பதற்கு தடையாக இருக்கும் பிரச்னையை விரைவில் தீர்க்க பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முயல வேண்டும். வாய்ப்பு கிடைத்தால் நான் ஐ.பி.எல் போட்டியில் பங்கேற்பேன். விளையாட்டையும், அரசியலையும் பிரித்து வைக்க வேண்டும் என்பது என் விருப்பம் -என்றார். (து)

# ரெய்லருக்கு ஆண் குழந்தை

நியூஸிலாந்து கிரிக்கெட் வீரர் றோஸ் ரெய்லருக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது.
றோஸ் ரெய்லரின் மகனான ஜான்டி லுடேரு டெய்லர் நேற்று முன் தினம் அதிகாலை 3.06 மணிக்குப் பிறந்துள்ளார். தாய் (விக்டோரியா), சேய் (ஜான்டி) நலம் என ரெய்லர் டுவிட்டரில் குறிப்பிட்டுள்ளார்.
இந்தத் தம்பதிக்கு மெக்கன்ஸி என்ற மகள் உள்ளார். 2ஆவது குழந்தை பிறப்பதை முன்னிட்டு ரெய்லர் வெலிங்டனில் நடைபெற்று வரும் 2ஆவது டெஸ்ட் போட்டியில் பங்கேற்கவில்லை. (து)




மக்கலத்தை தட்டிக்கொடுக்கும் டோனி

# நியூஸிலாந்து முன்னிலையில்

இந்தியா- நியூசிலாந்து அணிகள் மோதும் 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி வெலிங்டனில் நடைபெற்று வருகிறது. நியூசிலாந்து முதல் இன்னிங்சில் 192 ஓட்டங்களில் சுருண்டது. இந்தியா முதல் இன்னிங்சில் 438ஓட்டங்கள் குவித்தது.

246 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2 ஆவது இன்னிங்சை விளையாடிய நியூசிலாந்து நேற்று முன்தினம் 3 ஆவது நாள் ஆட்ட நேர முடிவில் 5 இலக்குகள் இழப்புக்கு 252 ஓட்டங்கள் எடுத்து இருந்தது.

மக்கலம் 114 ஓட்டங்களுடனும் , வொட்லிங் 52ஓட்டங்களுடனும் ஆட்டம் இழக்காமல் இருந்தனர். நேற்று (திங்கட்கிழமை) 4 ஆவது நாள் ஆட்டம் நடந்தது. இருவரும் தொடர்ந்து விளையாடினார்கள்.

இந்திய பந்து வீச்சாளர்கள் இந்த ஜோடியை பிரிக்க முடியாமல் திணறினார்கள். மதிய உணவு இடைவேளையின் போது நியூஸிலாந்து 5 இலக்குகள் இழப்புக்கு 347 ஓட்டங்கள் எடுத்து எடுத்தது.

மதிய உணவு இடை வேளைக்கு பிறகு விக்கெட் காப்பாளர் வெட்லிங் சதம் அடித்தார். அவர் 297பந்துகளில் 12 நான்கு ஓட்டங்களுடன் 100 ஓட்டங்கள் எடுத்தார். 21ஆவது டெஸ்டில் விளையாடும் வெட்லிங்குக்கு இது 3ஆவது சதமாகும்.

அதை தொடர்ந்து மக்கலம் அபாரமாக விளையாடி இரட்டை சதம்' அடித்தார். 395 பந்துகளில் அவர் 200 ஓட்டங்களை எடுத்தார். இதில் 24நான்கு ஓட்டங்களும் ,ஒரு 6 ஓட்டங்களும்அடங்கும்.

முதல் டெஸ்டிலும் அவர் இரட்டை சதம் (224 ஓட்டங்கள்) அடித்து இருந்தார். 144ஆவது பந்துப்பரிமாற்றங்களில் நியூசிலாந்து அணி 400ஓட்டங்களைத் தொட்டது.

தேனீர் இடைவேளையின் போது நியூசிலாந்து 5 இலக்குகள் இழப்புக்கு 440 ஓட்டங்கள் குவித்து இருந்தது. மக்கலம் 228 ஓட்டங்களுடனும், வெட்லிங் 119 ஓட்டங்களுடனும்ஆட்டம் இழக்காமல் இருந்தனர்.

கடும் போராட்டத்துக்கு பிறகு முகமது ஷமி இந்த ஜோடியை ஒரு வழியாக பிரித்தார். புதிய பந்து எடுக்கப்பட்டதற்கு பலன் கிடைத்தது.

வெட்லிங் 124 ஓட்டங்களில் அவரது பந்தில் எல்.பி.டபிள்யூ ஆனார். அப்போது 446 ஓட்டங்களைப் பெற்றிருந்தது நியூசிலாந்து அணி.

அடுத்து ஜிம்மி நீசம் களம் வந்தார். மக்கலம் தொடர்ந்து சிறப்பாக ஆடினார். நேற்றைய ஆட்ட நேர முடிவில் நியூசிலாந்து அணி 6 இலக்குகளை இழந்து 571 ஓட்டங்களைக் குவித்தது. மக்கலம் 281 ஓட்டங்களுடனும் , ஜிம்மி நீசம் 67 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். இன்று போட்டியின் இறுதி நாளாகும் (த-400)


# புதிய சாதனை படைத்தது மக்கலம்- வெட்லிங் ஜோடி

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் ஆறாவது இலக்குக்காக அதி கூடிய இணைப்பாட்டச் சாதனையை நியூஸி லாந்து அணித் தலைவர் பிரண்டம் மக்கலம் மற்றும் பி.ஜே வெட்லிங் ஜோடி நேற்று நிலைநாட்டியது.

இந்திய அணிக்கெதிரான 2 ஆவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இருவரும் இந்த மைல் கல்லை எட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை வீரர்களான மஹேல ஜெயவர்த்தன மற்றும் பிரசன்ன ஜெய்வர்த்தன ஆகியோர் ஆறாவது இலக்குக்காக 351 ஓட்டங்களைப் பகிர்ந்தமையே இதுவரை சாதனையாக இருந்து வந்திருந்தது.

எனினும் பிரண்டன் மக்கலம் மற்றும் பி.ஜே வெட்லிங் ஜோடி 352 ஓட்டங்களைப் பகிர்ந்து புதிய உலக சாதனையை நிலைநாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)


மக்கலம்- வெட்லிங்

# பரபரப்பான போட்டியில் வென்றது இலங்கை

இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி 13 ஓட்டங்களால் வெற்றியீட்டியது

டாக்காவில் இடம்பெற்ற நேற்றைய போட்டி மழை காரணமாக 43 பந்துப் பரிமாற்றங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டது.

இப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

இதனால் முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இலங்கை அணி27.4 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 180ஓட்டங்களைப் பெற்றது. இலங்கை அணி சார்பாக திசர பெரேரா ஆட்டமிழக்காது 80 ஓட்டங்களையும் சேனாநாயக்க 30 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். ஏனைய வீரர்கள் துடுப்பாட்டத்தில் சோபிக்க வில்லை.

பங்களாதேஷ் அணி சார்பாக ருபேல், சக்பில் அல் ஹசன் மற்றும் அரபட் சனி ஆகியோர் தலா இரண்டு இலக்குகளையும் அமின் கசின் சோக் கசி தலா ஒரு இலக்கையும் கைப்பற்றியுள்ளனர். இதனை அடுத்து 181 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய பங்களாதேஷ் அணி 39.2 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 167 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. முதல் பந்துப்பரிமாற்றத்திலேயே முதல் இலக்கை இழந்த பங்களாதேஷ் அணிஒரு கட்டத்தில் 79 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை இழந்தும் 114 ஓட்டங்களுக்கு 3இலக்குகளை இழந்தும் பல மான நிலையில் காணப்பட்ட போதும் பின் வந்த வீரர்கள் பொறுப்புடன் துடுப்பெடுத்தாடாததால் 167 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்து பரிதாபகரமாக தோல்வி அடைந்தது. அவ்வணி சார்பாக சம்சுர்62 ஓட்டங்களையும் மொனுல் கெக் 44 ஓட்டங்களையும் அதிக பட்சமாகப் பெற்றனர். இலங்கைப் பந்து வீச்சில் மத்தியூஸ் 3 இலக்குகளையும்சேனநாயக்க 2 இலக்குகளையும் மலிங்க, பெரேரா தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர். இப்போட்டியின் ஆட்ட நாயகனாக திசர பெரேரா தெரிவு செய்யப்பட்டார். 3 போட்டிகள் கொண்ட இத் தொடரில் 1-0 என்ற அடிப்படையில் இலங்கை முன்னிலை வகிக்கின்றது. இவ்விரு அணிகளுக்கமிடையிலான இரண்டாவது போட்டி நாளை வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது. (த-400)


தடுத்தாடும் திசர பெரேரா


## துன்னாலைப் பிரதேச இலவச அறநெறிப் பாடசாலை

★ 12.02.2014 அன்று இடம்பெற்ற துன்னாலை வடக்கு தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த இல்ல விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினர் உரையில் எமது திசை காட்டி குறூப் தலைவரும் பட்டயக் கணக்காளருமான திரு. S. செல்வராசா அவர்கள் துன்னாலைப் பிரதேசத்தில் அற நெறிப்பாடசாலை உடன் அமைக்கப் பட வேண்டும் எனத்தெரிவித்திருந்தார்.

★ இதற்கமைவாக எதிர்வரும் 01.03.2014 அன்று அதனை ஆரம்பிக்க எமது நிறுவனம் திடசங்கற்பம் பூண்டுள்ளது.

★ இந்து சமய ஆசிரியர் பதவிக்கு ஆள் சேர்ப்பு:-
இதன்பொருட்டு
A/L சித்தியடைந்த இந்துமத நெறியில் வாழ்ந்து வரு ம் இருபாலரிடமிருந்தும் விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப் படுகின்றன.

பங்கு பெறும் மாணவர்களுக்கு நிதி ஊக்குவிப்பு:
★ கருத்துக் கோருதல்
இம் முயற்சிதொடர்பில் இப்பிரதேச புத்திஜீவிகள், மூத்த குடிமக்கள், சமய ஆர்வலர்களிடம் இருந்து ஆரோக்கி யமான ஆலோசனைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

MS.V.இந்துஜா
பொது முகாமையாளர்.
(கௌரவ இயக்குநர் சபைக் கட்டளைப்படி)
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 021 568 9090

## சிறுகதைத் தொகுதிக்கு ஆக்கங்கள் கோரல்

**திசைகாட்டி கலை, இலக்கிய மன்றம்**

வட மாகாணத்தைச் சேர்ந்த எழுத்தாளர் களுடைய சிறுகதைகள் அடங் கிய ஒரு தொகுதியை வெளியிட முன்வந்துள்ளது. ஏற்கனவே நூலுருப் பெறாத சிறுகதை களை மார்ச் 15 ஆம் திகதிக்கு முன் கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கு மாறு வேண்டுகிறோம்.

செயலாளர்
திசைகாட்டி கலைஇலக்கிய மன்றம்
175 பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணம்
021 7904941
மின்னஞ்சல் - thisaikalaiyarl@gmail.com

## Annual General Meeting 2014
## Jaffna Medical Association

Venue : Nursing Trainning School
Teaching Hospital Jaffna
Date : 26 th February 2014 at 2.00 pm
(Wednesday)
All the members are welcomed
JMA

## கார்ச்சாரதி தேவை

45 வயதுக்கு மேற்பட்ட சாரதி தேவை நாள் ஒன்றுக்கு 500/= வீதம் வேதனம் வழங்கப்படும்.
தொடர்பு:-
078 5285342

## கடை விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கன்னாதிட்டி சந்தியில் அமைந்துள்ள மூன்று அறைகளுடன் கூடிய வியாபார நிலையம் (கடை) விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
077 172 7241/077 022 2232

இலங்கையின் விசா ஆலோசனை வரலாற்றில் மிகப்பெரும் திருப்புமுனை
முதன்முறையாக:-

## கனடாவில் படிக்க உழைக்க 5 வருட விசா

நம்பமுடியாவிட்டால் வென்றுவந்த விசாவை அக்குவேறு ஆணிவேறாகப் பரிசோதித்துவிட்டு மனநிறைவோடு எம்மோடு இணைந்து கொள்ளலாம்

இவ்வாய்ப்பு சில மனிதருக்கு சொற்ப காலம் மட்டுமே நீடித்திருக்கும்.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090
www.thisaivisa.com


இப்பத்திரிகை. நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.02.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.